**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

வெளியீடு : 28-5-2014 Issued : 28-5-2014

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**சனிக்கிழமை, பிப்ரவரி 1, 2014—தொகுதி 60—எண் 2**

Saturday, **the 1st February 2014—Volume 60 No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

**1–2–2014**

**உள்ளடக்கம்**


| | பக்கங்கள் |
|---|---|
| **1. வினாக்கள்—விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 185-237 |
| **2. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—தொடர்ச்சி | 237-333 |
| *திரு. ஆர். மனோகரன் | 237-243 |
| முனைவர் செ.கு. தமிழரசன் | 243-253<br>292 |
| *மாண்புமிகு திரு. இரா. காமராஜ் | 253-254,<br>287,288,331 |
| *திரு. பி.வி. கதிரவன் | 254-263 |
| மாண்புமிகு திரு. பி. தங்கமணி | 262-264,<br>273-277,<br>318-319 |
| திரு. ரா. சரத்குமார் | 264-272 |
| டாக்டர் க. கிருஷ்ணசாமி | 272-273,<br>275,280,<br>283-286 |
| மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம் | 278-279 |
| மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ் | 279 |
| மாண்புமிகு திரு. ப. மோகன் | 280-283 |
| *மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி | 280-281,<br>327-328 |

| | |
|---|---|
| | *பக்கங்கள்* |
| **2. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்**—*தொடர்ச்சி* | |
| *மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்* | 281 |
| **மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்* | 284-285, 290,291,293 |
| *முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா* | 286,287, 289-294, 296-297 |
| *மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்* | 288 |
| **மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு* | 288-289, 313-314 |
| *மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்* | 294-296 |
| *திரு. எம். ஆறுமுகம்* | 297-311, 313-315 |
| *மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்* | 302-303 |
| **மாண்புமிகு திரு. பி.வி. ரமணா* | 305-306, 326 |
| **மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்* | 308-309 |
| **மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி* | 311-313, 325,332-333 |
| **திரு. அ. சவுந்தரராசன்* | 315-332 |
| **3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 334-335 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## விஜய, தை 19, திருவள்ளுவர் ஆண்டு—2045

## 2014 பிப்ரவரி 1, சனிக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

“கொடைஅளி செங்கோல் குடிஓம்பல் நான்கும்
உடையான்ஆம் வேந்தர்க்கு ஒளி”

கொடுக்கும் பண்பு, முகம் மலர்ந்து பேசல், நீதி தவறாத ஆட்சி, குடிமக்களைக் காத்தல் ஆகிய நான்கும் கொண்ட அரசர் மற்ற அரசர்களுக்கெல்லாம் ஒளி விளக்கு போன்றவர் ஆவார்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**16—**

### சொந்தக் கட்டடம்

***34423—திரு. ஆ. ராமசாமி:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நிலக்கோட்டை தொகுதி, நிலக்கோட்டையில் உதவி மின் பொறியாளர், உதவி செயற்பொறியாளர் மற்றும் மின் பகிர்மான அலுவலகங்களுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்ட அரசு முன்வருமா?

*[2014 பிப்ரவரி 1*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நிலக்கோட்டையில் உதவி செயற்பொறியாளர், உதவி மின் பொறியாளர் மற்றும் கிராம மின் பகிர்மான அலுவலகங்கள் தற்போது தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மேற்கண்ட அலுவலகங்கள், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குச் சொந்தமான கட்டடங்களில் போதுமான இடவசதியுடன் இயங்கும்பொருட்டு, நிலக்கோட்டை வட்டம், நோத்தலாபுரம் கிராமத்தில் நிலம் கிரயம் செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இடத்தில் அலுவலகங்களைக் கட்ட ரூபாய் 75 இலட்சம் செலவில் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, 2014–2015 ஆம் நிதியாண்டில் நிருவாக அனுமதி பெற்று கட்டடங்கள் கட்ட ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி அவர்கள்.

**திரு. ஆ. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டை அம்மா அவர்களின் கோட்டை. (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கோட்டையில் அம்மா அவர்களின் கருணையால் 25 ஆயிரம் ஓட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளேன். தமிழகத்தில் நல்லாட்சி புரிகின்ற அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளித்ததற்கு மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நோத்தலாபுரம் கிராமத்தில் இடம் தேர்வு செய்யப்பட்டு, அங்கு கட்டடம் கட்டித்தரப்படும் என்று ஆணையிட்டிருக்கின்றார்கள். இந்த ஆண்டே அதனைப் பரிசீலனை செய்து மாண்புமிகு அம்மா அவர்கள் திறந்து வைப்பதற்கு முன்னுரிமை அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுபோன்ற நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, வருகின்ற பாராளுமன்றத் தேர்தலில் 40 இடங்களிலும் வெற்றியடைய நானும் பாடுபடுவேன் (மேசையைத் தட்டும் ஒலி) என்று தெரிவித்துக்கொள்கிறேன். உடனேயே ஏற்பாடு செய்து கொடுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)



*2014 பிப்ரவரி 1]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர். நிலக்கோட்டை அம்மாவின் கோட்டை என்று சொன்னார். நிலக்கோட்டை மட்டுமல்ல; ஒட்டுமொத்த தமிழகமே புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கோட்டை. (மேசையைத் தட்டும் ஒலி) திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டையில் இயங்கி வருகின்ற உதவி செயற்பொறியாளர், உதவி மின் பொறியாளர் அலுவலகங்கள் வாடகைக் கட்டடங்களில்தான் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல அங்கு போதுமான இடவசதியில்லை என்பதை நானும் நன்கு அறிவேன். அதற்காகத்தான், நிலக்கோட்டையில் தனியார் கட்டடங்களில் இயங்கி வருகின்ற அந்த மின்சார வாரிய அலுவலகங்களுக்கு வாரியத்தின் நிதியிலிருந்து சொந்தமாகக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு நிலம் கையகப்படுத்தும் பணியும் முடிவடைந்து விட்டது. இந்த 2014–2015 நிதியாண்டிலேயே கட்டடங்கள் கட்டி முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–05*

அதோடு மட்டுமல்லாமல், அந்தப் பகுதியிலே பெருகிவருகின்ற மின் தேவையைக் கருத்தில் கொண்டு, நிலக்கோட்டையில் இயங்கிவருகின்ற 110/22/11 துணை மின் நிலையத்தைத் தரம் உயர்த்துவதற்கும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முடிவு செய்து இருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆகவே புதிய தரம் உயர்த்தப்பட்ட துணை மின் நிலையம் அமைக்கப்படுகின்ற பணி நடைபெறுகின்றபொழுது, சொந்தக் கட்டடங்கள் கட்டும் பணியும் சேர்த்து மேற்கொள்ளப்படும் என்பதையும், இந்தப் பணிகள் அத்தனையும் இந்த நிதி ஆண்டிலேயே தொடங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன். பணிகளை முடித்து அம்மா அவர்களின் திருக்கரத்தால் திறந்து வைக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார். இன்றைக்கு அரசுக்கு அதிகமான செலவு இல்லாமல் சிக்கனமான நடவடிக்கைகளை செயல்படுத்தி வருகின்ற

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், காணொளிக்காட்சி மூலமாக அம்மா அவர்கள் திறந்து வைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளையும் இந்தத் துறை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆகவே, இந்தப் பணிகள் நீங்கள் விரும்பிய வண்ணம் அம்மா அவர்களுடைய ஆட்சியிலே நடைபெறும் என்பதை மீண்டும் உறுதியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. ராமசாமி அவர்கள்.

**திரு. ஆ. ராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த நிதி ஆண்டிலேயே கட்டி முடித்து, அம்மா அவர்களுடைய பொற்கரங்களால் திறந்து வைக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்கள். அதற்காக மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட அலங்காநல்லூர் பகுதியில் இருக்கக்கூடிய மின் பகிர்மான அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகின்றன. அந்த அலுவலகங்களுக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு இடமும் இருக்கின்றது. அதனால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு முன்வருவாரா என்று தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஒட்டுமொத்தமாகச் சொல்லிவிடுகிறேன். மின்சார உதவிப் பொறியாளர் அலுவலகங்கள், உதவி செயற்பொறியாளர் அலுவலகங்கள் எங்கெல்லாம் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றனவோ, அங்கெல்லாம் படிப்படியாக நிதி நிலைமைக்கேற்ப சொந்தக் கட்டடங்கள்





கட்டுவதற்கு கொள்கை முடிவினை எடுத்து, அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தவகையிலே இப்பொழுது தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்ற அலுவலகங்கள் மிகவும் நெருக்கடியாக, போதுமான அளவு இட வசதியில்லாமல் செயல்படுகின்றன. அப்படிப்பட்ட கட்டடங்களுக்கு முன்னுரிமை கொடுத்து நிதி நிலைமைக்கேற்ப படிப்படியாக அனைத்துக் கட்டடங்களும் சொந்தக் கட்டடங்களாக கொள்கை முடிவின் அடிப்படையிலே மாற்றப்படுகின்றன. சோழவந்தான் தொகுதியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கோரிக்கையை ஏற்று, அந்தப் பகுதியிலே நிதி நிலைமைக்கேற்ப சொந்தக் கட்டடங்களை கட்டுவதற்கு அம்மா அவர்களுடைய அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 17, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**17—**

## குடும்ப நல நீதிமன்றம்

***15692—திரு. ம. குணசேகரன்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாவட்டந்தோறும் குடும்ப நல நீதிமன்றம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் குடும்ப நல நீதிமன்றங்கள் இல்லாத 28 மாவட்டங்களில் அரசு முதற்கட்டமாக திண்டுக்கல்,

ஈரோடு, திருநெல்வேலி, சிவகங்கை, திருவள்ளூர், செங்கல்பட்டு, விழுப்புரம், வேலூர், திருச்சிராப்பள்ளி, தருமபுரி, திருவாரூர், விருதுநகர் மற்றும் நீலகிரி ஆகிய 13 மாவட்டங்களில் மாவட்ட நீதிபதி பதவி தரத்தில் தலா ஒரு குடும்ப நல நீதிமன்றம் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், கோயம்புத்தூரில் ஒரு கூடுதல் குடும்ப நல நீதிமன்றம் அமைக்கவும் ஆணையிடப்பட்டுள்ளது. மேற்படி 14 குடும்ப நல நீதிமன்றங்களை செயல்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கு ஏதுவாக, அரசிதழில் அறிவிக்கை வெளியிடப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். இன்றைக்குப் பல்வேறு இடங்களில் பாலியல் தொந்தரவுகள், பெண்களுக்கான சில குடும்பப் பிரச்சினைகள் ஏற்படுகின்ற நேரத்தில், அதை விசாரிக்கின்ற வகையில் ஒவ்வொரு நீதிமன்றத்திற்கும் மக்கள் அலைந்து கொண்டிருக்கின்றார்கள். Metropolitan City போன்ற சில இடங்களில் மட்டும்தான் குடும்ப நல நீதிமன்றங்கள் இயங்கி வருகின்றன. ஆகவே, அனைத்து மாவட்டத் தலைநகரங்களில் இருக்கின்ற நீதிமன்றங்களில் இதுபோன்ற குடும்ப நல நீதிமன்றங்களைத் திறந்தால், குடும்ப நல பிரச்சினைகளாக இருந்தாலும் சரி, பாலியல் தொந்தரவுகள் சம்பந்தமான பிரச்சினைகளாக இருந்தாலும் சரி, அவற்றையெல்லாம் அந்த நீதிமன்றங்களில் விசாரிப்பதற்கு ஏதுவாக இருக்கும். ஆகவே, அனைத்து மாவட்டத் தலைநகரங்களில் இயங்கி வருகின்ற நீதிமன்றங்களில் குடும்ப நல நீதிமன்றங்களை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—10

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 25 ஆண்டுகளில் 7 குடும்ப நல நீதிமன்றங்கள்தான் துவக்கப்பட்டன. அவற்றிலேகூட 4 நீதிமன்றங்கள் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியிலேதான் துவக்கப்பட்டன. ஆனால், மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்ற மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாட்டில் பல்வேறு குடும்பங்களில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற பெண்கள், அவர்கள் குடும்பங்களுக்குள்ளேயே சுதந்திரமாகவும், சுயமரியாதையோடும் வாழக்கூடிய நிலைமையில்லாத காரணத்தை உணர்ந்து, 2013—2014 ஆம் நிதியாண்டில் 13 குடும்ப நல நீதிமன்றங்களை உருவாக்கிக் கொடுத்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) 2013—2014 ஆம் நிதியாண்டில் கோரிக்கை எண் 3—ன்கீழ் 30—4—2013 அன்று, ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திண்டுக்கல், ஈரோடு, திருநெல்வேலி, சிவகங்கை, திருவள்ளூர், செங்கல்பட்டு, விழுப்புரம், வேலூர், திருச்சிராப்பள்ளி, தருமபுரி, திருவாரூர், விருதுநகர் மற்றும் நீலகிரி ஆகிய 13 மாவட்டங்களில் 8.06 கோடி ரூபாய் செலவில் நீதிமன்றங்கள் துவக்க ஆணையிட்டார்கள். அதற்கு 16—7—2013 இல் அரசாணை வெளியிடப்பட்டது. அதாவது, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஒரு திட்டத்தை அறிவித்தால், அந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுகின்ற அரசாக இருக்கிறது. சரியாக மூன்றரை மாதத்திற்குள்ளாக அரசாணை வெளியிடப்பட்டு, இப்போது உயர் நீதிமன்றம் இந்த நீதிமன்றங்களை துவக்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை முதன்மை மாநிலமாக ஆக்கி, வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் நாற்பதிலும் வெற்றி பெற்று, இந்தியாவை அலங்கரிக்க இருக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை மீண்டும் வணங்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன கருத்திற்கு நன்றியினைக்

கூறிக்கொள்கிறேன். சிவகங்கையில் ஒருங்கிணைந்த நீதிமன்றத்தைக் கடந்த சில மாதங்களுக்கு முன்பாகத் திறந்துவைத்து, தற்போது சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கின்ற அந்த நீதிமன்ற வளாகத்தில் குடும்ப நல நீதிமன்றப் பிரிவையும் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அதோடு, என்னுடைய தொகுதியில் இருக்கின்ற இளையான்குடியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கின்ற நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடத்தையும் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாவட்ட வாரியாக நீதிமன்றங்களை அறிவித்திருக்கிறார்கள். அதற்குரிய நிதி ஆதாரங்களையும் வெளியிட்டிருக்கிறார்கள். உயர் நீதிமன்றம், அந்தந்த மாவட்டங்களில் இடவசதிக்கேற்ப நீதிமன்றங்களைத் துவக்குவதற்கு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.

**திரு. ம. முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீதிக்குத் தலைவணங்கி, நீதிக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து, தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமல்லாமல்; இந்தியத் திருநாட்டிற்கே நல்லதொரு வழிகாட்டியாக வரவிருக்கின்ற தமிழ்நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், திருமங்கலம் நகரத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 110 ஆண்டுகள் பாரம்பரியம் மிக்க நீதிமன்றத்தை, சார்பு நீதிமன்றமாகத் தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட கோரிக்கைகள் உயர் நீதிமன்றத்தில் வருகின்றபட்சத்தில், மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடுமட்டுமல்லாமல், மூன்றாவது முறையாக இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற இந்தக் காலக்கட்டத்தில், புதியதாக 105 நீதிமன்றங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு உருவாக்கியிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**18—**

### பொறியியல் கல்லூரி

***34497—திருமதி ச. முத்துசெல்வி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சங்கரன்கோவில் தொகுதி, சங்கரன்கோவிலில் அரசு பொறியியல் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன், உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சங்கரன்கோவில் தொகுதியில் அரசு பொறியியல் கல்லூரி அமைக்கும் கருத்துரு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 பிப்ரவரி 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.

**திருமதி ச. முத்துசெல்வி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயந்தோறும் அமுது படைத்த அன்னபூரணி, இதயம் முழுவதும் அன்பு படைத்த அன்னை தெரசா, விலையில்லாப் பொருட்களை வீடுதோறும் தந்து, வீடு இல்லாதவர்களுக்கே வீடு தந்த விடிவெள்ளி, மின்சாரப் பிரச்சினையைத் தீர்த்து எதிர்க்கட்சிகளுக்கு ஷாக் கொடுத்த வெற்றி நாயகி, ஏழைப் பெண்களுக்கு தங்கத் தாரகையாய்த் திகழும் எங்கள் தங்கத் தாரகை; சென்ற திசையை வென்ற தேவதை; தமிழர்களுக்கு நீங்கள் இதயம், தமிழர்களுக்கு நீங்கள் இதயம், இனி இந்தியாவிற்கே உங்களால்தான் உதயம். (மேசையைத் தட்டும் ஒலி) இன்று உலக வரைபடத்தில் இந்தியா, நாளை இந்திய வரைபடத்தில் உலகம். காரணம் எங்கள் அம்மா. தமிழகத்தில் கோயம்பேடு தண்ணீர் வண்டியும், கோபாலபுரத்து கோல்மால் தள்ளுவண்டியும் நகர முடியாமல் நடைமேடையில் நிற்க, கோயம்பேடு தண்ணீர் வண்டியும், கோபாலபுரத்து கோல்மால் தள்ளுவண்டியும் நகர முடியாமல் நடைமேடையில் நிற்க, டெல்லி செங்கோட்டை செல்லும் Red Fort Express—ல் வெற்றிக் கொடியுடன் ஜான்சி ராணி புரட்சித் தலைவி எங்கள் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது சங்கரன்கோவில் தொகுதியில் 25—க்கும் மேற்பட்ட அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளும், தனியார் பள்ளிகளும் இயங்கி வருகின்றன. இப்பள்ளிகளிலிருந்து 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட +2 படித்த மாணவ, மாணவிகள் படித்து வெளிவருகின்றனர். இங்குள்ள மாணவ, மாணவிகள் தங்களது பட்டப் படிப்பை மேற்கொள்வதற்காக வெகுதூரம் செல்ல வேண்டியிருக்கிறது. திருநெல்வேலி, அதையும் தாண்டிச் சென்றால் கன்னியாகுமரி, இல்லையென்றால் மதுரை, சென்னை இப்படிப்பட்ட மாநகரங்களில்தான் மாணவர்கள் சென்று கல்வி பயில வேண்டிய சூழ்நிலையிருக்கிறது. இங்குள்ள மக்கள் அனைவரும் விவசாயப் பெருங்குடி மக்கள். இவர்களுக்கு அங்கு சென்று கல்லூரிப் படிப்பை தொடர்வதற்கான வாய்ப்பு குறைவாக இருக்கிறது. மேலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சங்கரன்கோவில் இடைத் தேர்தலிலே, சங்கரன்கோவில் மக்கள்



2014 பிப்ரவரி 1]

சங்கடம் இல்லாமல் வாழ்வதற்காகவும், இங்கேயுள்ள மாணவ, மாணவிகள் பட்டப் படிப்பைப் பெறுவதற்காகவும், இங்கு ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைத்துத் தருவேன் என்று அங்குள்ள மக்களிடம் வாக்குறுதி அளித்துள்ளார்கள். அந்த வாக்குறுதியை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, எங்கள் பகுதியில் இருக்கக்கூடிய மாணவர்களுக்கு, கல்விப் புரட்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்ற தமிழக முதல்வர் அம்மா அவர்கள், ஒரு கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியில் பொறியியல் கல்லூரி வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்திருந்தார். அதற்கு வாய்ப்பில்லை என்றபட்சத்தில் அங்கே கலை மற்றும் அறிவியல் கல்லூரி வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை இப்போது வைத்திருக்கிறார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சங்கரன்கோவில் தொகுதியில் ஒரு பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. அந்தப் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரி, பல்கலைக்கழகத்தினுடைய சிண்டிகேட் உறுப்பினர்கள் கொண்டு வந்த தீர்மானத்தின் அடிப்படையில் அங்கு ஏற்படுத்தப்பட்டது. அங்கு கட்டடம் கட்டுவதற்கு நிரந்தர இடம் வேண்டுமென்று அங்கே இருக்கக்கூடிய மாணவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும் கோரிக்கையை வைத்தார்கள். மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்னை அங்கே நேரடியாக அனுப்பி வைத்து, அங்கே இடம் பார்க்க வேண்டுமென்று ஓர் ஆலோசனையையும், ஆணையையும் வழங்கினார்கள். அதனடிப்படையில் அங்கே சென்று பார்க்கிறபோது, அது கோயிலுக்குச் சொந்தமான இடமாக இருக்கிறது. ஏற்கெனவே இருந்த அரசாணையின்படி, கோயில் நிலத்தை நாம் கையகப்படுத்தினால், அதற்கு ஈடாக ஒன்றரை மடங்கு தொகையை நாம் செலுத்த வேண்டுமென்ற விதி இருக்கிறது. தற்போது இருக்கக்கூடிய மத்திய அரசாங்கத்தினுடைய

வழிகாட்டுதலின்படி அந்தத் தொகை நான்கு மடங்காக உயர்ந்திருக்கிறது. ஆகவே, இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, அந்த இடத்தை கையகப்படுத்துவதற்கு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியோடு மட்டுமல்லாமல் மேலும் ஒரு புதிய கல்லூரியை உருவாக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை விகிதம் உயர வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் தமிழ்நாட்டில் 36 கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று, எதிர்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.

**திருமதி ச. முத்துசெல்வி:** மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் நன்றியைக் கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை அரசு மீனாட்சி பெண்கள் கல்லூரியில் 3,500—க்கும் மேற்பட்ட மாணவிகள் படித்து வருகிறார்கள். அங்கே ஒரு ஆடிட்டோரியம் அமைக்க வேண்டுமென கோரிக்கையிருக்கிறது. எனவே, அதை அமைக்க அரசு முன்வருமா என்பதை தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்குக்கூட மனிதநேய மக்கள் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தங்கள் பகுதியைச் சேர்ந்த கல்லூரிக்கு ஆடிட்டோரியம் வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். இதுகுறித்து ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். பொதுவாக உட்கட்டமைப்பு வசதி தேவைப்படுகிற காலகட்டத்தில், வகுப்புகளின் எண்ணிக்கை கூடுகிற காலகட்டத்தில், மாணவர்களின் நலன் கருதி, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல ஆயிரம் கோடி ரூபாய் நிதியை ஒதுக்கித் தந்து, கட்டடங்கள் கட்டுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள்.

முற்பகல் 10—20

அதோடுமட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேவை என்று கோரிக்கை வைத்த 'ஆடிட்டோரியம்' பல கல்லூரிகளில் இருக்கின்றது. கல்லூரிகள் ஆரம்பிக்கும்பொழுதே 'ஆடிட்டோரியத்தை' உருவாக்கினால், எதிர்காலத்தில் இதுபோன்ற கேள்விகள் வராது. ஆகவே வருங்காலத்தில், கல்லூரிகள் ஆரம்பிக்கின்றபோதே, ஆடிட்டோரியத்தை உருவாக்குவதற்கு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களின் பார்வைக்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரூர் தொகுதியில் சித்தேரி மலைப் பகுதியிலும், ஏற்காடு வெள்ளிமலையை ஒட்டியிருக்கக்கூடிய கருமந்துறை மலைப் பகுதியிலும் சமுதாயக் கல்லூரி அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அங்கே இருக்கக்கூடிய பழங்குடியின மாணவர்கள் கல்லூரிக்குச் செல்லவேண்டுமென்று சொன்னால், அப்பகுதியில் போக்குவரத்து வசதி இல்லாததால், 40 கிலோ மீட்டர், 60 கிலோ மீட்டர் தூரம்

*[2014 பிப்ரவரி 1*

செல்லவேண்டியிருக்கிறது. ஆகவே, கருமந்துறையிலே ஒரு சமுதாயக் கல்லூரியும், சித்தேரி மலையில் ஒரு சமுதாயக் கல்லூரியும் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சமுதாயக் கல்லூரி வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். ஒரு சில மாவட்டங்களில் இருப்பவர்களுக்கு ஒரு சில தொழில்கள் செய்யத் தெரியும். வேறு சில மாவட்டங்களில் இருப்பவர்களுக்கு வேறு சில தொழில்கள் செய்யத் தெரியும். 8 ஆம் வகுப்பு, 10 ஆம் வகுப்பு படித்தவர்கள், உயர் கல்வி பெற முடியாதவர்கள், அந்தந்த மாவட்டங்களில் இருக்கின்ற தொழிலைச் செய்வதற்கு ஏற்ப, தொழிலைக் கற்றுக் கொடுப்பதுதான் சமுதாயக் கல்லூரி. இதுபோன்ற கல்லூரிகளை தமிழ்நாட்டில் இருக்கும் 32 மாவட்டங்களிலும், ஒரு மாவட்டத்திற்கு ஒரு சமுதாயக் கல்லூரி என்ற அடிப்படையில், சென்ற ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் திறந்தநிலைப் பல்கலைக்கழகத்தின் மூலமாக அறிவித்திருக்கிறார்கள். அந்த அடிப்படையில், ஒரு மாதத்திற்கு முன்பு தருமபுரியில் ஒரு சமுதாயக் கல்லூரி உருவாக்கப்பட்டிருக்கிறது.

தன்னுடைய தொகுதியைச் சேர்ந்த சித்தேரி பகுதியிலும், கருமந்துறை பகுதியிலும் சமுதாயக் கல்லூரிகள் உருவாக்கப்படவேண்டும் என்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கை மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வியிலும், உயர் கல்வியிலும் புரட்சியை



*2014 பிப்ரவரி 1]*

ஏற்படுத்தி மாணவர்களுக்கு நல்ல திட்டங்களைத் தந்து சிறப்பான ஆட்சி நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். அரசு சார்பாக ஆரம்பிக்கப்படுகிற கல்லூரிகளுக்குத் தேவையான infrastructure—க்கான நிதி அரசு மூலமாக சுலபமாகக் கிடைக்கக்கூடிய வாய்ப்புகள் இருக்கின்றன. உறுப்புக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், அவை சார்ந்த பல்கலைக்கழகத்தினுடைய நிதி நிலைமையைப் பொறுத்து ஒதுக்கீட்டில் ஏற்ற, இறக்கங்கள் இருக்கின்றன. ஆகவே, உறுப்புக் கல்லூரிகளை அரசு கலைக் கல்லூரிகளாக நடத்துவதற்கு அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் மாணவர்களுடைய கல்வித் தரம் உயர வேண்டும், அவர்கள் உயர் கல்வியைப் பெறவேண்டும் என்ற நோக்கத்துடன்தான் ஆங்காங்கே அரசுக் கல்லூரிகள், அரசு சார்ந்த பல்கலைக்கழகத்தினுடைய உறுப்புக் கல்லூரிகள், தனியார் கல்லூரிகள் தொடங்கப்படுகிற சூழ்நிலை ஏற்படுகிறது. அரசுக் கல்லூரிகள் தொடங்கப்படவேண்டுமென்று சொன்னால், 10 ஏக்கர் நிலம் தேவைப்படும். மேலும், தொடரும் செலவு மற்றும் தொடராச் செலவிற்கு நிதி தேவைப்படுகிறது. இதுபோன்ற காலகட்டத்தில் பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளைப் பொறுத்தவரையில், பல்கலைக்கழகங்களே தங்களுடைய நிதிநிலைக்கு ஏற்ப கல்லூரிகளைத் துவக்கிக்கொள்ளலாம்.

சில நேரங்களில் பல்கலைக்கழகத்திடம் நிதி இல்லை என்று சொன்னால், அந்தப் பகுதி மக்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக, அவர்கள் உயர் கல்வி பெறவேண்டும் என்பதற்காக அரசே கல்லூரிகளைத் துவங்கலாம். இதுபோன்ற சூழ்நிலையில், பல்கலைக்கழகங்கள் கல்லூரியை உருவாக்குகிறபோது, கட்டடம் கட்டுவதற்கும், ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுப்பதற்கும், ஆசிரியரல்லாதவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கும், பல்கலைக்கழகத்தின் நிதிநிலைக்கு ஏற்ப

கல்லூரியே தன்னை இறுதிவரை செயல்படுத்திக்கொள்ளவேண்டும். சில நேரங்களில் அரசே முன்வந்து பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரிகளைத் துவங்கினால், 5 ஆண்டுகளுக்குத் தொடர்ந்து அதற்கு வேண்டிய உதவிகளை அரசே செய்யும். கல்லூரிக்குத் தேவையான கட்டடம் கட்டுவதற்கு உதவி செய்யும். மேலும் 5 ஆண்டுகளுக்கு தொடரும் செலவு, தொடராச் செலவுகளுக்கான நிதியினை அரசே வழங்கும்.

இப்படி இல்லாமல், அரசின் ஒப்புதல் இல்லாமல், பல்கலைக்கழகங்களே அவர்களுடைய நிதிநிலைமைகளுக்கு ஏற்ப கல்லூரிகளை உருவாக்கினால், அந்தப் பல்கலைக்கழகங்கள்தான் அதற்குத் தேவையான நிதிச் சுமையை ஏற்றுக் கொள்ளவேண்டிய சூழ்நிலை ஏற்படும். ஆகவே, எதிர்காலத்தில் பல்கலைக்கழகங்களிடமிருந்து இதுபோன்ற ஒரு கோரிக்கை வருகிறபட்சத்தில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய பார்வைக்கு எடுத்துச் சென்று, பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.என். கிட்டுசாமி அவர்கள்.

**திரு. ஆர்.என். கிட்டுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில் அனைத்துத் துறைகளும் முதன்மைத் துறைகளாக மாறிக்கொண்டிருக்கின்றன. கல்விக்கென்று இந்த ஆண்டு ரூ.17 ஆயிரம் கோடி நிதியினை அள்ளிக் கொடுத்து, வரலாற்றுச் சாதனையைப் படைத்தது புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு. ஈரோடு மாநகரிலே நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற அரசு உதவிபெறும் சிக்கநாயக்கர் கல்லூரி, கடந்தகால ஆட்சியிலே சீரழிக்கப்பட்டு, சிதைக்கப்பட்டு இருந்தது. அம்மா ஆட்சி வந்தவுடன், அரசின் தலையீட்டால், இப்போது சிக்கநாயக்கர் கல்லூரி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அங்கு இருக்கின்ற பொது மக்கள் சிக்கநாயக்கர் கல்லூரியை அரசுக் கல்லூரியாக மாற்ற வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். எனவே, அந்தக் கல்லூரியை அரசுக் கல்லூரியாக மாற்றுகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.





முற்பகல் 10—25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் அரசு உதவிபெறும் கல்லூரிகள் 144 இருக்கின்றன. இந்த 144 அரசு உதவிபெறும் கல்லூரிகளில் ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவதற்காக மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய அரசு உதவிபெறுகிற கல்லூரிகளில் ஏற்பட்டிருக்கக்கூடிய 3,120 காலிப் பணியிடங்களை நிரப்புவதற்காக மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் ஆணையிட்டு, அந்தப் பணியிடங்களை தற்போது நிரப்பிக்கொண்டு வருகிறார்கள். இந்த வேளையில், அங்கு மக்களின் கோரிக்கையை ஏற்று, மாணவர்களுடைய கருத்தை ஏற்று, அரசுக்கு இதுபோன்ற கோரிக்கை வரும்பட்சத்தில், அரசு உதவிபெறும் கல்லூரியை அரசுக் கல்லூரியாக மாற்றுவதற்கான கருத்துரு, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்களுடைய பார்வைக்கு அனுப்பி வைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**19—**

## விதை ஆராய்ச்சி நிலையம்

***41288—திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதியிலுள்ள அரசு விதைப் பண்ணையில் அரசு விதை ஆராய்ச்சி நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 பிப்ரவரி 1

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் அரசு விதைப் பண்ணை ஏதும் தற்போது செயல்படவில்லை. எனினும், ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட ஏத்தாப்பூரில் மரவள்ளிக் கிழங்கு மற்றும் ஆமணக்கு ஆராய்ச்சி மையம் செயல்பட்டு வருவதால், தனியாக விதை ஆராய்ச்சி நிலையம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.

**திரு. சு. மாதேஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலட்சத்திலான தொண்டர்களை கோடிகளாகப் பெருக்க வைத்த இயக்கத்தின் இமயமே, அன்பின் சிகரமே, மாசி மகம் தந்த ஜெயமே, மாசில்லா மக்கள் தவம் தந்த பலனே, களம் ஈன்ற பலமே, குன்றா புகழ் கொண்ட குணமே, தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழுகின்ற குணமே, அம்மா உங்கள் பாதம் தொட்டு வணங்குகிறேன் தாயே. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏத்தாப்பூர் ஆராய்ச்சிப் பண்ணையில் ஆமணக்கு மற்றும் மரவள்ளிக் கிழங்கு விதை தொடர்பான ஆராய்ச்சிகள் மற்றும் புதிய இரகம் தொடர்பான ஆராய்ச்சிகள் நடைபெறுகின்றனவா, விவசாயிகளுக்கு ஆமணக்கு விதைகள் மற்றும் மரவள்ளிக் கிழங்கு விதைக் கரணைகள் வழங்கப்படுகின்றனவா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட ஏத்தாப்பூர் ஆராய்ச்சி நிலையத்தைப் பொறுத்தவரையில், மரவள்ளிக் கிழங்கு மற்றும் ஆமணக்குப் பயிர்களுக்கான ஆராய்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று



2014 பிப்ரவரி 1]

வருகின்றன. இந்த ஆராய்ச்சிப் பண்ணை உயர் விளைச்சல் தரும் தரமான ஆமணக்கு விதைகளையும், மரவள்ளிக் கிழங்கு விதைக் கரணைகளையும் உற்பத்தி செய்து, விவசாயிகளுக்குக் குறைந்த விலையில் வழங்கி வருகின்றது. இங்கு நடைபெற்று வரும் ஆராய்ச்சிகளின் பயனாக, கடந்த 2013 ஆம் ஆண்டில் YCT1 என்ற மரவள்ளிக் கிழங்கு இரகம் கண்டறியப்பட்டு, 250 விவசாயிகளுக்கு விதைக் கரணைகள் வழங்கப்பட்டுள்ளன. மேலும், 380 விவசாயிகளுக்கு விதைக் கரணைகள் வழங்குவதற்கான பதியங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுதவிர சாதகமான குணநலன்களைக் கொண்ட இரகத் தேர்வுகள் H740/92 மற்றும் TCMS2 ஆகிய இரண்டும் ஆராய்ச்சி நிலைகளில் உள்ளன.

ஆமணக்குப் பயிர் தொடர்பான ஆராய்ச்சியைப் பொறுத்தவரையிலே, இந்நிலையத்திலிருந்து ஏற்கெனவே, YRCH1 என்ற வீரிய ஒட்டு இரகம் அறிமுகப்படுத்தப்பட்டு, சுமார் 3,000 கிலோ நடப்பாண்டில் மட்டும் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டுள்ளது. வரும் ஆண்டிற்கு சுமார் 6,000 கிலோ விநியோகம் செய்வதற்கேற்ற வகையில், விதை உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மேலும், ஆராய்ச்சியில் வீரிய ஒட்டு YRCH 1116 தேர்வு நிலையிலுள்ளது. ஏத்தாப்பூர் ஆராய்ச்சி நிலையத்தில் விதை ஆராய்ச்சி உட்பட ஏனைய ஆராய்ச்சிகளும் மேற்கொள்ளப்படுவதோடு, தரமான விதைகளும் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன. எனவே, இந்த வசதிகளை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்திக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.

**திரு. சு. மாதேஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரமான ஆமணக்கு விதைகளும், தரமான மரவள்ளிக் கிழங்கு விதைக் கரணைகளும் தரப்படும் என்று கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் விவசாயப் பெருங்குடி மக்களின் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*[2014 பிப்ரவரி 1*

*முற்பகல் 10—30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.*

**திரு. கே. உலகநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதியில், பூசலாங்குடி, கீராண்டியனூரில் ஓர் அரசு விதைப் பண்ணையும், நெடும்பலம் ஊராட்சியில் ஓர் அரசு விதைப் பண்ணையும், சேகல் ஊராட்சி, தீயந்தான்பட்டினத்தில் ஓர் அரசு விதைப் பண்ணையுமாக மூன்று பண்ணைகளில் 212 ஏக்கரில் நெல் சாகுபடி சிறப்பாக நடந்து வருகிறது. அந்த விதைப் பண்ணைகளை ஒன்றிணைத்து திருத்துறைப்பூண்டியில் ஒரு நெல் ஆராய்ச்சி நிலையம் தொடங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*மேலும், தரமான விதைகளை உற்பத்தி செய்யக்கூடிய அந்தப் பண்ணைகளில் நெல் விதைகளை உலர்த்துவதற்கான சிமெண்ட் களம் இருந்தும், அது மோசமான நிலையில் இருக்கிறது. அதையும் சரி செய்து கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதை ஆராய்ச்சிப் பண்ணையைப் பொறுத்தவரையிலே, தமிழகத்திலே நம்முடைய வேளாண் பல்கலைக்கழகத்தின் சார்பில் 38 ஆராய்ச்சிப் பண்ணைகள் சிறப்பான முறையிலே செயல்பட்டு வருகின்றன. அதேபோல, தேவையான அளவுக்கு அரசு விதைப் பண்ணைகளும் இருந்து வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட விதைப் பண்ணைகளைப் பொறுத்தவரையிலே, அங்கே சில குறைபாடுகள் இருக்கின்றன. களம் இருக்கின்றது, இருந்தாலும்கூட அது சரியாக இல்லை, சரி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். வருகின்ற காலகட்டத்தில் அதுகுறித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



*2014 பிப்ரவரி 1]*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**20—**

### நியாய விலைக் கடை

***17954—திரு. க. பாண்டியராஜன்:**

*மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஊராட்சி ஒன்றியம், மூளிப்பட்டி ஊராட்சி, தவசிலிங்கபுரம் கிராமத்திற்குப் புதிய நியாய விலைக் கடை அமைக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*(அ) மற்றும் (ஆ) விருதுநகர் தொகுதி, விருதுநகர் ஒன்றியம், மூளிப்பட்டி ஊராட்சியிலுள்ள மருதநத்தம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் 470 குடும்ப அட்டைகளுடன் மருதநத்தம் தாய் நியாய விலைக் கடை செயல்பட்டு வருகிறது. இக்கடையுடன் 2 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள 167 குடும்ப அட்டைகளைக் கொண்ட தவசிலிங்கபுரம் கிராமம் இணைக்கப்பட்டுள்ளது. அரசு விதிகளின்படி, மேற்படி கிராமத்தில் புதிய நியாய விலைக் கடை திறப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. என்றாலும்கூட, தவசிலிங்கபுரம் கிராமத்திலிருந்து தாய்க்கடை அமைந்துள்ள மருதநத்தம் கிராமத்திற்குச் செல்வதற்கு மழைக் காலங்களில் ஓடை தடையாக இருப்பதால், 3 கிலோ மீட்டர் தூரம் சுற்றி வர வேண்டிய நிலையுள்ளது. சரியான போக்குவரத்து வசதி இல்லை என்பதைக் கருத்தில் கொண்டும், சிறப்பினமாக இதைக் கருதியும் தவசிலிங்கபுரம் கிராமத்தில் புதிய பகுதிநேர நியாய விலைக் கடை திறப்பது குறித்து மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கனிவுடன் பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத்*

தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசும்பொன்னாரின் வீரமும், அம்பேத்கரின் அறிவுக் கூர்மையும், கர்மவீரரின் எளிமையும், புரட்சித் தலைவரின் மனித நேசமும் ஒருங்கிணைந்து (மேசையைத் தட்டும் ஒலி) உதித்தெழுந்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு வணக்கம் கூறி, தவசிலிங்கபுரம் கிராம மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, 177 குடும்ப அட்டைகள் இருந்தும்கூட, அந்த இடத்திற்குப் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க ஆவன செய்யப்படும் என்று உறுதி கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சியில் அமைந்திருக்கின்ற தட்டாங்குளம்பட்டி கடை எண் 2—ல் ஏற்கெனவே 1,178 குடும்ப அட்டைகள் இருக்கின்றன. ஏற்கெனவே இதே அவையில் நான் மானியக் கோரிக்கையில் பேசுகிறபோது, இதுகுறித்துப் பேசியிருக்கின்றேன். 78 குடும்ப அட்டைகள் இருக்கின்ற தட்டாங்குளம்பட்டியில் கடை அமைந்திருக்கின்றது. 1,100 குடும்ப அட்டைகள் இருக்கின்ற திருவண்ணாமலை, மாதா நகர், மாலைப்பட்டி, என்.பி.எஸ். காலனி போன்ற பகுதிகளில் கடை இல்லை. இதனைத் தொடர்ந்து, சமீபத்தில் அங்கே ஒரு சட்டம்—ஒழுங்குப் பிரச்சினைகூட ஏற்படுவதற்கான வாய்ப்பு இருந்தது. இதையெல்லாம் கவனத்தில் கொண்டு, அந்தப் பகுதியில் தனியாகக் கடை அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு





பகுதிநேர நியாய விலைக் கடை கேட்கிறார். குறிப்பாக, பகுதிநேரக் கடை திறப்பதற்கு 150 கார்டுகள் இருந்தால் போதுமானது. கார்டுகளைப் பிரித்த பிறகு 500 கார்டுகள் தாய்க் கடையில் இருந்தால், அந்தக் கடையைப் பிரிப்பதற்கு வாய்ப்புண்டு. மேலும், 1½ கிலோ மீட்டர் தொலைவில் நியாய விலைக் கடை இருக்கவேண்டும் என்று சட்டவிதிகள் இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பகுதியில் சட்டம்—ஒழுங்குப் பிரச்சினை இருக்கிறது என்று கருதும்பட்சத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே அந்தப் பகுதியில் நியாய விலைக் கடை அமைக்க உரிய நடவடிக்கை எடுக்கலாம். அதற்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்தக் கடை, எவ்வளவு தூரத்தில் இருக்கிறது, எவ்வளவு கார்டுகள் இருக்கின்றன என்பதைத் தெளிவாக குறிப்பிட்டுச் சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அந்தப் பகுதி மக்களின் குறையைத் தீர்க்க உறுதியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 21, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**21—**

## மேம்பாலம்

***35867—திரு. மு.வீ. கருப்பையா:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோழவந்தான் தொகுதி, சோழவந்தானில் இருப்புப் பாதை கடவுக்கு மாற்றாக மேம்பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2014 பிப்ரவரி 1

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சோழவந்தான் தொகுதி, சோழவந்தானில் இருப்புப்பாதை கடவுக்கு மாற்றாக மேம்பாலம் அமைக்கும் பணிக்கு நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டு ஆரம்பக் கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் சோழவந்தான் பகுதி மக்கள் 40 ஆண்டுக் காலமாகப் போராடி வந்த கோரிக்கையை, மூன்றாம் முறையாக முதலமைச்சராக மாண்புமிகு அம்மா அவர்கள் பதவியேற்றதும் இந்தக் கேள்வி கேட்டு அதற்குப் பதில் வரும் முன்பே, நிதியொதுக்கீடு செய்து இருப்புப்பாதை கடவு அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. கும்பிட்ட கரம் விலகுமுன் வரம் தரும், தமிழக மக்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும், வாழும் மனித தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், நெடுஞ்சாலையை இணைக்கும் வைகை ஆற்றுப் படுகையில், தரைப் பாலம் கச்சிராயிருப்பு முதல் சோழவந்தான் வரையிலும், மண்ணாடிமங்கலம் முதல் இரும்பாடி வரையிலும், குருவிக்கரைத்துறை வரையிலும் வைகை ஆற்றுப் பாலத்தை இணைக்கும்வகையில் தரைப்பாலம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்:

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியை ஆய்வு செய்து, நிதி நிலைமைக்கேற்ப மாண்புமிகு அம்மா



2014 பிப்ரவரி 1]

அவர்களின் அனுமதியைப் பெற்று, அங்கே பாலம் கட்டுவதற்கு பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாட்சியில் வாடிப்பட்டி ஒன்றியத்திற்குட்பட்ட விராலிப்பட்டி கிராமத்துக்கும், மலை கிராமமான மீனாட்சிபுரத்தையும் இணைக்கக்கூடிய மலைச் சாலை ஒன்று ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் இருந்தது. தற்போது அந்தப் பாதையைச் சீரமைத்து, இந்த இரு கிராமங்களையும் இணைக்கக்கூடிய ஒரு நிலையை உருவாக்கித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்திலுள்ள சாலைகளையெல்லாம் சீரமைக்க வேண்டுமென்று ஆணையிட்டு, படிப்படியாக, நிதி நிலைமைக்கேற்ப அவை அனைத்தும் சீரமைக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள அந்தப் பகுதியிலும் வருகின்ற நிதியாண்டிலே பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. லிங்கமுத்து அவர்கள்.

**திரு. கு. லிங்கமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதி, குடியாத்தம் நகரத்தில் போக்குவரத்து நெரிசலினால் இயல்புநிலை பாதிக்கப்படுகிறது என்பதைக் கருத்தில்கொண்டு, குடியாத்தம் நகரின் மையப் பகுதியில் ஓடுகின்ற கவுண்டன்யா ஆற்றின் கரைமீது ஒரு Bye-pass சாலை அமைக்கப்படுமா என்ற கேள்வியை இதற்கு

[2014 பிப்ரவரி 1

முன்பு பல முறை இந்த அவையில் கேட்டு இருக்கின்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஆய்வு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்று கூறியிருக்கின்றார். ஆய்வு எந்த நிலையில் உள்ளது? பணிகள் எப்போது தொடங்கி முடிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் உள்ள எல்லா நகராட்சிப் பகுதிகளுக்குமே படிப்படியாக, நிதி நிலைமைக்கேற்ப, வட்டச் சாலைகள் அமைக்க வேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறார்கள். அதன்படி எதிர்காலத்தில் நிதிநிலைமைக்கேற்ப மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற குடியாத்தம் பகுதிக்கும் புறவழிச் சாலை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையைப் பெற்று பரிசீலிக்கப்படும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.

முற்பகல் 10—40

**திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

> "அஞ்சாமை ஈகை அறிவுஊக்கம் இந்நான்கும்
> எஞ்சாமை வேந்தற்கு இயல்பு"

என்ற வள்ளுவரின் வைர வரிகளுக்கு இலக்கணமாக வாழ்ந்து வருகின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்குகிறேன். காஞ்சிபுரம் தொகுதிக்குட்பட்ட திருப்புக்குழி, பொன்னேரிக்கரை, ஏனாத்தூர், வேடல், ராஜகுளம் போன்ற கிராமங்கள் சென்னை—பெங்களூரு தேசிய நெடுஞ்சாலைப் பகுதியில் அமைந்துள்ளன. அச்சாலையை கடந்து செல்லும் அப்பகுதி வாழ் மக்களுக்கு பல்வேறு இன்னல்கள் ஏற்படுகின்றன. மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமானாலும், விவசாய நிலத்திற்குச் செல்ல வேண்டுமானாலும், படிக்கின்ற மாணவர்கள் பள்ளிக்கூடம் போக வேண்டுமானாலும் அந்தச்



2014 பிப்ரவரி 1]

சாலையை கடந்து செல்ல வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. அப்போது விபத்து ஏற்பட்டு, உயிர்ச் சேதம் ஏற்படுகிறது. உயிர்ச் சேதத்தைத் தவிர்ப்பதற்கு அப்பகுதிகளில் மேம்பாலங்களோ அல்லது சுரங்க நடைபாதைகளோ அமைத்துத் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுள்ள சாலை, இந்திய தேசிய நெடுஞ்சாலைத் துறையின்கீழ் பராமரிக்கப்படும் சாலையாக இருக்கின்றது. இருப்பினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கு நடைபெறுகின்ற பிரச்சினைகளையொட்டி இங்கே கேள்வி எழுப்பியிருக்கின்றார்கள். அவை, தேசிய நெடுஞ்சாலை ஆணையத்திற்கு கடிதம் மூலமாகத் தெரிவிக்கப்பட்டு, அங்கு மேம்பாலம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதைத் தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**22—**

### பகுதிநேர நியாய விலைக் கடை

***19586—திரு. இரா. குமரகுரு:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உளுந்தூர்பேட்டை தொகுதி, ஆமூர் ஊராட்சி, ஆமூர் காலனியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2014 பிப்ரவரி 1

உளுந்தூர்பேட்டை தொகுதி, ஆமூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்படும் ஆமூர் கிராம நியாய விலைக் கடை 750 குடும்ப அட்டைகளுடன் செயல்பட்டு வருகிறது. அக்கடையுடன், 165 குடும்ப அட்டைகளுடைய ஆமூர் காலனி பகுதியும் இணைக்கப்பட்டுள்ளது. தாய்க் கடைக்கும், பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்கக் கோரும் ஆமூர் காலனிக்கும் இடைப்பட்ட தூரம் 700 மீட்டர்தான் உள்ளது. அரசால் வகுத்தமைக்கப்பட்ட வழிகாட்டுதலின்படி பகுதிநேர கடை அமைக்கக் கோரும் இடம், தாய்க் கடையிலிருந்து குறைந்தபட்சம் 1½ கி.மீ. தூரத்தில் இருக்க வேண்டும் என்ற நிபந்தனை இந்நேர்வில் பூர்த்தியாகவில்லை. எனவே, ஆமூர் காலனியில் புதிய நியாய விலைக் கடை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை. இருப்பினும், பக்கத்திலுள்ள வேறு சில பகுதிகளையும் இணைத்து, உரிய வாய்ப்புகள் ஏற்படும்பட்சத்தில், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன். உளுந்தூர்பேட்டை தொகுதி, ஆமூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வரும் ஆமூர் கிராம நியாய விலைக் கடை 730 குடும்ப அட்டைகளுடன் இயங்கி வருகின்றது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஆமூர் கிராமத்திற்கும், ஆமூர் காலனிக்கும் இடையே கிட்டத்தட்ட 1½ கி.மீ. தூரம் இருக்கிறது. மேலும், ஆமூர் காலனி மக்கள், ஆமூர் தாய்க் கடைக்குச் சென்று பொருட்கள் வாங்குவதில் இடையூறுகளும், இனப் பிரச்சினைகளும் ஏற்படுகின்றன. அவற்றைத் தவிர்க்கும் வகையில், ஆமூர் காலனியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், பகுதிநேர நியாய விலைக் கடை அமைப்பதற்கு சில நிபந்தனைகள் இருக்கின்றன என்றும்,



2014 பிப்ரவரி 1]

அந்த நிபந்தனைகள் பூர்த்தியாகாததால், ஆமூர் காலனியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைக்க முடியாது என்ற நிலைமையைத் தெரிவித்திருக்கிறார்கள். ஆமூர் காலனியில் பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துத்தர வேண்டும் என்று அப்பகுதி மக்கள் நீண்டகாலமாகக் கோரி வருகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஆமூர் காலனி மக்களின் நீண்டகாலக் கோரிக்கையான பகுதிநேர நியாய விலைக் கடையை அமைத்துத்தருமாறு கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்றபடி அதுபோன்ற நிலைமை ஏற்பட்டால், நிச்சயமாக மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

விழுப்புரம் மாவட்டத்தில், தற்போது 6,607 முழுநேர நியாய விலைக் கடைகளும், 398 பகுதிநேர நியாய விலைக் கடைகளும் செயல்பட்டு வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணையின்படி, குடும்ப அட்டைதாரர்கள் எந்தவிதமான சிரமமுமின்றி தங்களுக்குத் தேவையான அத்தியாவசியப் பொருட்களைப் பெறும்வகையில், விழுப்புரம் மாவட்டத்தில் மட்டும் 32 பகுதிநேர நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. தமிழ்நாடு முழுவதும் 732 பகுதிநேர நியாய விலைக் கடைகள் திறக்கப்பட்டுள்ளன. புதிய பகுதிநேர நியாய விலைக் கடைகளைத் திறக்கும்போது, அரசு வழிகாட்டுதலின்படி, விதிகள் பூர்த்தியாகாத நிலையில் சிரமங்கள் ஏற்படுகின்றன. தாய்க் கடையின் விற்பனையாளர்கள்தான், 1 கி.மீ.—க்கும் குறைவான பகுதிநேர நியாய விலைக் கடைக்கும் வாரத்தில் மூன்று நாட்கள் செல்கின்றார்கள். அப்போது, தாய்க் கடை குடும்ப அட்டைதாரர்களுக்கு பொருட்களைப் பெறுவதில் சிரமங்கள் ஏற்படுகின்றன என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்ள விழைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில நிபந்தனைகளைச் சொல்லி, கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அந்தப் பகுதியிலே இருக்கின்ற காலனிவாழ் மக்கள், ஆதி திராவிட மக்கள். அவர்கள் மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். துறை சார்ந்த அலுவலர்கள் அங்கே சென்று ஆய்வு செய்து, உண்மையிலேயே அந்தப் பகுதிக்கு பகுதிநேர நியாய விலைக் கடை வேண்டுமென்ற சூழ்நிலை எழுமானால், நியாய விலைக் கடை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10—45

அதேபோல, என்னுடைய உளுந்தூர்பேட்டை தொகுதியில் இருக்கின்ற பேரங்கியூர் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கத்திற்குட்பட்ட பேரங்கியூர், குச்சிப்பாளையத்தில் இருக்கின்ற மக்கள், தேசிய நெடுஞ்சாலையைக் கடந்து வந்து பேரங்கியூரில் பொருட்களை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பேரங்கியூர், குச்சிப்பாளையத்திலும் ஒரு பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கொ.குச்சிப்பாளையம் கிராமத்திலே இருக்கின்ற மக்கள், கொரட்டூர் மற்றும் கொ.குச்சிப்பாளையம் கிராமத்திற்கும் இடையேயுள்ள கிட்டத்தட்ட 2 கிலோ மீட்டர் தூரத்தைக் கடந்து சென்று பொருட்களை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய தொகுதியில் கிட்டத்தட்ட 15 கிராமங்களிலே இருக்கின்ற மக்கள் பகுதிநேர நியாய விலைக் கடை வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். நானும் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்திலே கோரிக்கை வைத்திருக்கின்றேன். ஆகவே, இவற்றையெல்லாம் ஆய்வு செய்து, தடையிருப்பின், விதிமுறைகளைத் தளர்த்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்நாட்டு மக்களுக்குப் பல திட்டங்கள் மற்றும் சாதனைகளைச் செய்துகொண்டிருக்கிற வேளையிலே, அந்தப் பகுதியிலே இருக்கின்ற மக்களெல்லாம் பகுதிநேரக் கடை வேண்டுமென்ற கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கைகளை





நிறைவேற்றும் வகையிலே, விதிமுறைகளைத் தளர்த்தி, அந்தப் பகுதி மக்களுக்கு பகுதிநேர நியாய விலைக் கடை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பார்வைக்கு எடுத்துச் சென்று, நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற விழுப்புரம் மாவட்டம், கல்வராயன் மலைப் பகுதியில் வாழும் 26,331 மலைவாழ் மக்கள் பயன்பெறும் வகையில், 2 நகரும் நியாய விலைக் கடைகளை காணொளி காட்சிமூலம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திறந்து வைத்தார்கள். இதன்மூலம் கல்வராயன் ஊராட்சி ஒன்றியம், ஆசாவூர், கீரப்புள்ளி முதலான 17 கிராமங்களுக்கும், வெள்ளிமலை, கிளாக்காடு, மோட்டாம்பட்டி ஆகிய பகுதிகளிலுள்ள சுமார் 103 கிராமங்களுக்கும் நகரும் நியாய விலை அங்காடிகள்மூலம் தினமும் அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. மலைப் பகுதிகளில் 2 கிலோ மீட்டர் தூரத்திற்கு மேல் வெயிலிலும், மழையிலும் சென்று தங்கள் உணவுப் பொருட்களைப் பெற்று, கஷ்டப்பட்டு சுமந்து வந்த தாய்மார்களும், முதியோர்களும், தங்கள் இருப்பிடத்திற்கே பொருட்களைக் கொண்டுவந்து விநியோகம் செய்ய ஆணையிட்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி கூறிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 பிப்ரவரி 1

23—

## கால்நடை கிளை நிலையம்

***33962—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, தொட்டமஞ்சி மலைக் கிராமத்தில் கால்நடை கிளை நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்கப்பட வேண்டுமென்று சொன்னால், அந்தக் கிராமத்திலும், அதனைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் 3,000 கால்நடை அலகுகள் இருக்க வேண்டுமென்ற விதி இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்ற தளி தொகுதி, தொட்டமஞ்சி மலைக் கிராமத்திலே 3,000 கால்நடை அலகுகளுக்குமேல் இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அங்கே ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், என்னுடைய தளி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தொட்டமஞ்சி ஊராட்சியில் தொட்டமஞ்சி, சிக்கமஞ்சி, வடகரை, கெம்பகரை, பிலிகுண்டு, கொச்சாவூர் உள்ளிட்ட 30–க்கும் மேற்பட்ட மலைக் கிராமங்களிலே வாழ்கின்ற மக்களின் ஜீவாதாரத் தொழிலாக கால்நடை வளர்ப்பு இருந்துவருகிறது. அந்தப் பகுதியில் 15 கிலோ மீட்டர் தூரத்திற்கு கால்நடை மருந்தகமோ, கால்நடை கிளை மருந்தகமோ இல்லை. அந்த ஊராட்சியில் சுமார் 4,200 கால்நடைகள் இருக்கின்றன. அந்தக் கால்நடைகளுக்கு ஏற்படும்



2014 பிப்ரவரி 1]

நோய்களுக்கு மருத்துவம் பார்க்க அஞ்செட்டியில் உள்ள கால்நடை மருந்தகத்திற்கு டெம்போ, லாரி போன்ற வாகனங்களின்மூலம்தான் கால்நடைகளை ஏற்றிச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, அங்கே கால்நடை கிளை மருந்தகம் அமைத்துத் தரப்படுமென்று அறிவித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், தொகுதி மக்களின் சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கடுமையான வறட்சி இருப்பதால், கால்நடை பராமரிப்புத் துறை சார்பாக நுண்ணீர் பாசன வசதியோடு, மானிய விலையில் புல் வளர்த்து கால்நடைகளுக்கு வழங்கப்படுமா என்பதையும் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–50

**மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு 24.50 கோடி ரூபாய் செலவிலே, 30 மாவட்டங்களிலும் பசுந்தீவனம் வளர்க்கப்பட்டு, அந்தந்த மாவட்ட தீவனக் கிடங்குகள்மூலமாக பால் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பகுதியிலும் நிச்சயமாக அதை வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தங்களின்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

24—

## காகித அட்டை தொழிற்சாலை

***41183—திரு. க. அன்பழகன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்பகோணம் தொகுதி, கும்பகோணம் பகுதியில் காகித அட்டை தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2014 பிப்ரவரி 1

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டமன்றத்தில் 7—5—2013 அன்று, தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் 1,200 கோடி ரூபாய் 'முதலீட்டில்' ஆண்டொன்றுக்கு 2 இலட்சம் டன் உற்பத்தித் திறன்கொண்ட, இருபுறமும் மேற்பூச்சு செய்யப்பட்ட அடுக்கு காகித அட்டை தயாரிக்கும் பிரிவினை, திருச்சி மாவட்டம், மணப்பாறை தாலுகா, ஸ்ரீரங்கம் தொகுதி, மொண்டிப்பட்டி கிராமத்தில் நிறுவிட நடவடிக்கை எடுக்கப்படும் என்று விதி 110—ன்கீழ் அறிவிப்பு வெளியிட்டார்கள். அந்த அடிப்படையில், கிட்டத்தட்ட ஆறு மாத காலத்திற்குள்ளாகவே அதற்கான நிலத்தை கையகப்படுத்தி, இப்போது அந்தப் பணிகளைத் துவங்க மாண்புமிகு அம்மா அவர்கள் அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். கூடியவிரைவில் அந்தப் பணிகளைத் தொடங்கவிருக்கின்ற காரணத்தினால், கும்பகோணம் பகுதியில், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம், மேலும் ஒரு காகிதம் தயாரித்திடும் தொழிற்சாலை அமைத்திட சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஆர். ரெங்கராஜன் அவர்கள்.

**திரு. என்.ஆர். ரெங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக தஞ்சை மாவட்டம் முழுக்க, முழுக்க விவசாயத்தைச் சார்ந்திருக்கக்கூடிய பகுதி. தொழிற்சாலைகள் அங்கு மிகவும் குறைவு. அங்கு அதிகமாக நெற்பயிர்கள் பயிரிடக்கூடிய காரணத்தினாலே, வைக்கோல்களும், காகிதம் தயாரிப்பதற்குத் தேவையான மூலப்பொருட்களும் அதிகமாகக் கிடைப்பதற்கு வாய்ப்புகள் இருப்பதனால், தஞ்சை மாவட்டத்தின் நிலைமையைக் கருத்தில்கொண்டு, வருங்காலத்திலாவது இதுபோன்ற ஒரு தொழிற்சாலையை அங்கே அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.



2014 பிப்ரவரி 1]

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு காகித அட்டை தொழிற்சாலை முழுத் திறனுடன் நிறுவப்பட்டு, இலாபகரமாக இயங்க நாளொன்றுக்கு 660 மெட்ரிக் டன் உற்பத்தித் திறன் கொண்டதாக இருக்கவேண்டும். ஆண்டுக்கு 2 இலட்சம் டன் காகித அட்டை அலகு உற்பத்தி செய்ய பின்வரும் வசதிகள் தேவைப்படும்:

ஆயிரம் ஏக்கர் நிலம் வேண்டும்; தண்ணீர் உபயோகம் 25 ஆயிரம் கனமீட்டர் வேண்டும்; 2 இலட்சத்து 60 ஆயிரம் டன் கரும்புச் சக்கை ஆண்டொன்றுக்குத் தேவை; 1 இலட்சத்து 60 ஆயிரம் மெட்ரிக் டன் மரக்கூழ் ஆண்டொன்றுக்குத் தேவை; 31 ஆயிரம் டன் உபயோகப்படுத்தப்பட்ட காகிதம் ஆண்டொன்றுக்குத் தேவை; 80 ஆயிரம் மெட்ரிக் டன் இறக்குமதி செய்யப்படும் பல்வேறு வகையான மரக்கூழ்கள் தேவை. மூலப்பொருள்கள் கிடைப்பது அரிதாக இருக்கின்ற காரணத்தினால், அந்தப் பகுதியிலே தொழிற்சாலையை நிறுவுவது கடினமாக இருக்கும். இருந்தாலும், தொழில் முனைவோர் முன்வருவார்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 25, மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**25—**

## கைத்தறிக் குழுமம்

***10252—திரு. ரா. சரத்குமார்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை பகுதியில் கைத்தறிக் குழுமம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2014 பிப்ரவரி 1

(அ) திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை பகுதியில், ஒருங்கிணைந்த கைத்தறி வளர்ச்சித் திட்டத்தின்கீழ் பாளையங்கோட்டை கைத்தறி வளர்ச்சிக் குழுமத் திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, மூன்றாண்டுக் காலமாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும், விருதுநகர் கைத்தறி பெருங்குழுமத் திட்டத்தின்கீழ், திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை பகுதியில் கைத்தறி நெசவாளர்கள் பயன்பெறுகின்றனர். எனவே, திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை பகுதியில் மேலும் ஒரு கைத்தறிக் குழுமம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. அந்த பதிலிலேயே நான் கேட்கவிருந்த கேள்விகள் எல்லாம் அடங்கியிருப்பதால், என்னுடைய கருத்துகளை மட்டும் தெரிவித்து, அதை மேம்படுத்த முடியுமா என அறிய விரும்புகிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் பின்வரும் கிராமங்கள், நகரங்களில் நெசவாளர்கள் அதிகமாக வசித்து வருகிறார்கள். சங்கரன்கோவில், சுப்புலாபுரம், புளியங்குடி, தென்காசி, கீழப்பாவூர், புதுக்குடி, வீரவநல்லூர், வெள்ளன்குளி, கல்லிடைக்குறிச்சி, அம்பாசமுத்திரம், பாளையங்கோட்டை ஆகிய பகுதிகளில் கைத்தறி நெசவுத் தொழில்மூலம் குறைந்த வருமானம் கிடைப்பதாலும், ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பு இல்லாத நிலை ஏற்படுவதாலும், அவர்கள் வேலைவாய்ப்பினைத் தேடி திருப்பூர், ஈரோடு, கோயம்புத்தூர் போன்ற தொழில் நகரங்களுக்குச் செல்கிறார்கள். இதன் விளைவாக, திருநெல்வேலி மாவட்டத்தில் கைத்தறித் தொழில் நலிவடைந்து வருகிறது. எனவே, இந்நிலையைத் தவிர்த்து, நெசவுத் தொழிலை ஊக்குவிக்க மேலும் அதிக நிதியுதவியைச் செய்து, அந்தக் குழுமத்தை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா என தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.



2014 பிப்ரவரி 1]

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவாளர்களின் முன்னேற்றத்திற்காகவும், கைத்தறி நெசவாளர்களின் நலனுக்காகவும் மற்றும் கைத்தறித் துறையின் வளர்ச்சிக்காகவும் மக்களின் இரசனைக்கேற்றவாறு புதிய, புதிய வடிவமைப்புகளுடன் உற்பத்தி செய்து, சந்தைப் போட்டியில் கலந்துகொண்டு, விற்பனையை அதிகப்படுத்தி, வியாபார நுணுக்கங்களை அறிந்துகொள்கின்ற வகையில், கைத்தறிக் குழுமம் தமிழகத்திலுள்ள நெசவாளர்களின் திறமையை 7 level–களின் அடிப்படையில் 58 குழுக்களாகப் பிரித்து, சிறப்பான முறையில் நெசவாளர்களுக்குப் பயன்பட்டு வந்து கொண்டிருக்கிறது.

முற்பகல் 10–55

மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் கைத்தறிக் குழுமத்தின் சார்பில் பாளையங்கோட்டை, கிருஷ்ணாபுரம் மற்றும் பாபர்குளம் கிராமங்களில் 1,660 சதுர அடியில் 22,80,000 ரூபாய் செலவில் பொது வசதி மையம் அமைக்கப்பட்டு நெசவாளர்களின் வசதிக்காக பாவு ஓட்டுதல், கஞ்சி தேய்த்தல் மற்றும் சாயமிடுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு சிறப்பான முறையில் செயல்பட்டு வருகின்றன.

அதுமட்டுமல்லாமல், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சி நெசவாளர்களின் பொற்காலமாகத் திகழ்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ரூபாய் 260 கோடியில் பத்தாயிரம் பசுமை வீடுகள் என்று, இந்தியாவிலேயே முதன்முறையாக நெசவாளர்களுக்கு தறியுடன்கூடிய வீடுகள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் இந்தியாவிற்கே வழிகாட்டக்கூடிய முன்னோடி மாநிலமாக தமிழகம் சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு நெசவாளர்களுக்கு தறி உபகரணங்கள் மற்றும் ஜக்கார்பெட்டி கொடுத்து, சாயப் பயிற்சி மற்றும் ஆடை வடிவமைப்பு ஆகிய பயிற்சிகள் கொடுத்து, தறி மேம்பாட்டிற்காக நிதி கொடுத்து, பெடல் தறி கொடுத்து, சிறப்பான முறையில் வீடு கட்டிக் கொடுத்து, அவர்களின் மறுவாழ்விற்கு நிதி ஒதுக்கிக் கொடுத்து, நெசவாளர்களுடைய நலனில் அக்கறை கொண்டு, சிறப்பான முறையில் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்களின்

[2014 பிப்ரவரி 1

அரசு அவர்களுக்கு ஆண்டு முழுவதும் வேலை கொடுப்பதற்காக விலையில்லா வேட்டி, சேலை வழங்கும் திட்டத்தையும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அவர்கள் பெறும் குறைந்த வருமானத்தை அதிகப்படுத்துவதற்காக இன்றையதினம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தறியுடன்கூடிய வீடு கட்டிக் கொடுத்துள்ளது. பெடல் தறி போன்ற பல்வேறு நவீன உபகரணங்களையும் வழங்கி, அவர்களுக்கு ஊதிய உயர்வு வழங்கி, கை ராட்டையில் சுற்றுவதற்குப் பதிலாக மின் ராட்டையை வழங்கிக் கொண்டிருக்கிறது. நெசவாளர்கள்மீது அக்கறை கொண்டு, அவர்களுக்கு ஆண்டு முழுவதும் வருமானம் கிடைப்பதற்கு வழிவகை செய்துள்ளது என்பதை பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரின் நீண்ட விளக்கம் மிக்க மகிழ்ச்சியை அளிக்கிறது. அம்மாவின் ஆட்சியில் என்ன நடக்கிறது என்று அனைவருக்கும் தெரிய வேண்டும் என்பதற்காகவே இந்தக் கேள்வியைக் கேட்டேன். ஏனென்றால், சிலர் வெளியே இருந்துகொண்டு, இங்கு என்ன இருக்கிறது, என்ன நடக்கிறது என்று தெரியாமல், அரசியல் நடத்துவதால், அவர்கள் அனைவருக்கும் தெரியவேண்டும் என்பதற்காக இந்தக் கேள்வியைக் கேட்டேன். அமைச்சர் அவர்களுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 26, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**26—**

### இலவச வீடுகள்

***22669—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2014 பிப்ரவரி 1]

(அ) அரூர் தொகுதி, அரூர் வட்டம், கீரைப்பட்டி ஊராட்சி, இந்திரா நகர் இருளர் பழங்குடியினருக்கு இலவச வீடுகள் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தருமபுரி மாவட்டம், அரூர் சட்டமன்றத் தொகுதி, கீரைப்பட்டி ஊராட்சி, இந்திரா நகரில் வசித்துவரும் அழிவின் விளிம்பிலுள்ள இருளர் இன மக்களுக்கு, அடித்தட்டு மக்களான ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் காவல் தெய்வமாகத் திகழும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, (மேசையைத் தட்டும் ஒலி) நடப்பு 2013–2014 நிதியாண்டில் பழங்குடியினர் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், பழங்குடியின மக்களின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தினை பேணிக் காக்கின்றவகையில், ஒரு வீட்டிற்கு ரூ.2.5 இலட்சம் வீதம் 30 வீடுகளுக்கு மொத்தம் ரூ.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, வீடுகள் கட்டும் பணி நடைபெற உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்த அறிவிப்புக்கு நன்றி. அரூர் தொகுதி, கீரைப்பட்டி ஊராட்சி, இந்திரா நகர் இருளர் குடியிருப்புப் பகுதியில் உள்ளவர்களுக்கு 25 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் அரசின் இலவச தொகுப்பு வீடுகள் கிடைத்திருப்பதற்கு உண்மையிலேயே அந்தத் தொகுதி மக்களின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, பழங்குடியின மக்களுக்கு அரசின் பல்வேறு நலத் திட்டங்களான, தையல் இயந்திரம் வழங்கும் திட்டம், கறவை மாடு, இலவச ஆடு வளர்ப்புத் திட்டம் போன்ற திட்டங்களெல்லாம் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. ஒட்டுமொத்தமாகக் கணக்கெடுக்கின்றபட்சத்தில், வீடற்றவர்களாக, குடிசை வீடுகளில்

[2014 பிப்ரவரி 1

வாழ்பவர்களாக, அடுக்கிய மூட்டைகளில் அடி மூட்டையாக பழங்குடியின மக்கள், இருளர் இன மக்கள், பழையாடி இன மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

இரண்டு நாட்களுக்கு முன்பு புவனேஸ்வரில் நடைபெற்ற அகில இந்திய பழங்குடியின, ஆதிவாசிகள் மாநாட்டிலேகூட, 60 சதவிகித பழங்குடியின மக்களுக்கு இன்றுவரை வீடு வசதி இல்லை என மத்திய அரசாங்கம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய 6,54,000 பழங்குடியின மக்கள் தமிழகத்தில் வாழ்கிறார்கள் என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. 7,96,694 பழங்குடியின மக்கள் வாழ்கிறார்கள் என்று மத்திய அரசாங்கம் வெளியிட்டுள்ள புள்ளிவிவரம் தெரிவிக்கின்றது. இந்த 1½ வருடக்காலத்தில், இந்தியா முழுவதிலும் உள்ள பழங்குடியின மக்கள்தொகை 1,54,000 அதிகரித்துள்ளது என்று புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

முற்பகல் 11—00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது அரூர் தொகுதிக்குட்பட்ட ஆண்டியூர், வீரப்பநாயக்கன்பட்டி, தீர்த்தமலை, கூடுவரைப்பட்டி ஆகிய பகுதிகளில் வாழும் பழங்குடியின மக்கள் 25 ஆண்டுகளுக்கு முன், மறைந்த முன்னாள் எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக்காலத்தில் கட்டப்பட்ட 4, 5 வீடுகளைத்தான் பார்த்திருக்கிறார்கள். ஆகவே, இப்பேர்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு டைபர் சப்ளா என்று சொல்லக்கூடிய பழங்குடியினர் துணைத் திட்டத்திலே நாம் வழங்கக்கூடிய ஆடுகளோ, கறவை மாடுகளோ, தையல் மிஷின்களுக்கு ஈடாகவோ அல்லது கூடுதலாக வீடுகளைக் கட்டித் தருகின்ற சிறப்புத் திட்டம் ஏதாவது அரசிடம் உள்ளதா? அத்தகைய திட்டத்தின்மூலம் தமிழகம் முழுவதும் உள்ள ஒட்டுமொத்த பழங்குடியின மக்களுக்கு ஒரு வருடத்திற்குள் கட்டிக் கொடுத்து, அதன்மூலம் அனைவருக்கும் வீடு கிடைக்கும் விதமாக அறிவிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.



2014 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் தோடா, கோடா, குரும்பா, பணியா, இருளர் மற்றும் காட்டு நாயக்கன் ஆகிய ஆறு வகையான அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினர், நீலகிரி, காஞ்சிபுரம், வேலூர், திருவள்ளூர், கோயம்புத்தூர், தருமபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், அரியலூர், கிருஷ்ணகிரி, கடலூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய 12 மாவட்டங்களில் மட்டுமே அதிகமாக வசித்து வருகின்றனர்.

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின்பால் கொண்ட அளப்பரிய அன்பின் காரணமாக, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மாவின் சீரிய முயற்சியால், 2012—2013 ஆம் ஆண்டு முதல் அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியின மக்களுக்கு பழங்குடியினர் பொருளாதார முன்னேற்றத் திட்டத்தின்கீழ் ரூ.14 கோடியினை ஒதுக்கி, அதன்மூலம் கறவை மாடுகள் வளர்த்தல், தேனி வளர்த்தல், கோழி வளர்த்தல், மீன் வளர்த்தல் மற்றும் இருளர் இன மக்களுக்கு செங்கல் சூளை அமைத்துக் கொடுத்தல் போன்ற பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள் செயல்பட்டு வருகின்றன. மேலும், 2013—2014 ஆம் நிதியாண்டில் அரசாணை எண் (டி) என்.269, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 23—12—2013—ன்படி 20 கோடி ரூபாய் நிதியினை ஒதுக்கி, அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியின மக்களின் கலாச்சாரம் மற்றும் பாரம்பரியத்தைப் பேணிக் காக்கும் வகையில் ஒரு வீட்டிற்கு 2.5 இலட்சம் வீதம், 510 வீடுகளும், பெரம்பலூர் மாவட்டத்திற்கு மட்டும் ஒரு வீட்டிற்கு ஒரு இலட்சம் வீதம் ரூ.12 கோடியும், பொருளாதார முன்னேற்றத்திற்கு 8 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட கீரைப்பட்டிபுதூர் கிராமத்தில் கடந்த ஆட்சியில் 22 வீடுகள் தீ வைத்து கொளுத்தப்பட்டன. அவர்களுக்கு புதிய வீடுகள் கட்டித்தர வேண்டுமென்று கடந்த ஆட்சியில் விண்ணப்பிக்கப்பட்டு, ஆட்சியும் முடிந்தது. கீரைப்பட்டிபுதூர் கிராம மக்கள் புதிய வீடுகள் கட்டித்தர வேண்டுமென்று இன்று வரையும் கோரிக்கை வைத்து வருகின்றார்கள். இந்த ஆட்சியிலாவது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிற பல்வேறு திட்டங்களின்கீழ் கீரைப்பட்டிபுதூர் கிராமத்தில் உள்ள பழங்குடியின மக்களுக்கு 22 புதிய வீடுகளைக் கட்டித்தர முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இருளர் இன மக்கள் வீடுகளைக் கட்டுவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள். அவர்கள் கடக்கால் வெட்டுவதற்கோ பல்வேறுபட்ட பணிகளைச் செய்வதற்கோ போதிய பணம் இல்லாமல் மிகவும் சிரமப்படுகிறார்கள். அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளும் இரத்து செய்யப்பட்டுள்ளன. எனவே, அவர்களுக்கு வங்கி மூலமாக முன்பணம் கொடுக்கவோ அல்லது ஆதி திராவிடர் துறையே கடன் கொடுத்து கட்டடப் பணிகளைத் துவக்குவதற்கோ முன்வருமா, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கு ஆவன செய்வார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி பழங்குடியின மக்களின்பால் அதிக அக்கறைகொண்டுள்ளது. ஏற்கெனவே 12 மாவட்டங்களுக்கு, அதாவது நீலகிரி மாட்டத்திற்கு 838.40 இலட்சம் ரூபாயும், கோயம்புத்தூர் மாவட்டத்திற்கு 67.20 இலட்சம் ரூபாயும், காஞ்சிபுரம் மாவட்டத்திற்கு 149.40 இலட்சம் ரூபாயும், வேலூர் மாவட்டத்திற்கு 144.40 இலட்சம் ரூபாயும், திருவள்ளூர் மாவட்டத்திற்கு 161.40 இலட்சம் ரூபாயும், தருமபுரி மாவட்டத்திற்கு 109.40 இலட்சம் ரூபாயும், திருவண்ணாமலை மாவட்டத்திற்கு 109.40 இலட்சம் ரூபாயும், கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு 84.40 இலட்சம் ரூபாயும், விழுப்புரம் மாவட்டத்திற்கு 109.40 இலட்சம் ரூபாயும், கடலூர் மாவட்டத்திற்கு 92.20 இலட்சம்



ரூபாயும், அரியலூர் மாவட்டத்திற்கு 67.20 இலட்சம் ரூபாயும், பெரம்பலூர் மாவட்டத்திற்கு 67.20 இலட்சம் ரூபாயும் ஆக மொத்தம் கிட்டத்தட்ட 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, வரும் நிதியாண்டில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆலோசனையைப் பெற்று ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. அருண் பாண்டியன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**27—**

### கூடுதல் பேருந்து

***6774—திரு. செ. அருண் பாண்டியன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேராவூரணி தொகுதி, பேராவூரணியிலிருந்து சென்னைக்கு கூடுதலாக விரைவுப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஏழைக் குடிசையில் வாழும் ஏழையருக்கும், ஓயாமல் சிந்தித்து உன்னத திட்டங்களை வழங்கி வரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திருக்கரங்களால் 2½ ஆண்டுகளில் 1,426 புதிய வழித்தடங்களில் பேருந்துகள் கொடி அசைத்து, துவக்கி வைக்கப்பட்டு, இன்று மக்களுடைய பயன்பாட்டில், மக்கள் சேவையை ஆற்றிக்கொண்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, 1–9–2012 முதல் பேராவூரணியிலிருந்து சென்னைக்கு தடம் எண் 246e பேருந்துகள் கூடுதலாக இயக்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2014 பிப்ரவரி 1

முற்பகல் 11–05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. அருண் பாண்டியன் அவர்கள்.

**திரு. செ. அருண் பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு அரசியல் அனுபவம் மிகவும் குறைவு. என்னுடைய Right hand side–ல் இருந்த ஒரு எம்.எல்.ஏ. ஒரு வருடத்தில் 200 கேள்விகள் கொடுத்தேன். ஆனால், பதில் கிடைக்கவில்லை என்று சொன்னார்கள். நான் 10 நியாயமான கேள்விகளைத்தான் கேட்டேன். அவற்றிலே 5 கேள்விகளுக்கு விடை கிடைத்துவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசைப் பாராட்டாமல் இருப்பது எப்படி என்று எனக்குப் புரியவில்லை. Such a dynamic Leader; She has the focus; (Thumping of desks) She has the determination; She has concentration; She is not selfish. தனக்காக எதுவும் பண்ணவில்லை. நிச்சயமாக தமிழ்நாட்டில் இருக்கிற மக்கள் மிகவும் கொடுத்து வைத்தவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவே பாராட்டும் அந்த நாள் வெகு தூரத்தில் இல்லை. எனக்கு ஒரே ஒரு சிறிய குறை மட்டும் இருக்கிறது. இந்தக் கேள்வியை நான் இன்னும் ஆறு மாதங்கள் கழித்து கேட்டிருந்தால், பேராவூரணியிலிருந்து டெல்லி வரைக்கும் பஸ் கிடைத்திருக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

வெளியே கூட்டணி அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். 300 சீட்டுகளுக்குத்தான் கூட்டணி அமைக்க வேண்டும். அவர்கள் மறந்து விட்டார்கள். 40 சீட்டுகளை மக்கள் ஏற்கெனவே முடிவு செய்துவிட்டார்கள். அந்த முடிவை மாற்ற மாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நிச்சயமாக வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் இந்த ஆட்சிதான் டெல்லியில் இருக்கும்.

அம்மா அவர்களிடத்தில் ஒரே ஒரு வேண்டுகோள். உங்கள் கம்பெனியால்தான் நாங்கள் உருவாக்கப்பட்டோம். இன்றைக்கு வரைக்கும் manufacturer நீங்கள். ஆனால், வேறு ஒரு brand–ல் இருக்கிறோம். அது எப்போது மாறும் என்று எங்களுக்குத் தெரியவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு நல்ல விடை கொடுத்தீர்களென்றால் நல்லது. எங்கள் 7 பேர்கள் சார்பில் மட்டுமல்ல, பேராவூரணி தொகுதி மக்கள் சார்பிலும் நான் மீண்டும் இந்த அரசுக்கும், அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு



2014 பிப்ரவரி 1]

முதல்வர் அவர்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**28—**

## வீட்டு வசதி

***32465—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மடத்துக்குளம் தொகுதி, அமராவதி நகர் மற்றும் திருமூர்த்தி நகர் பகுதிகளிலுள்ள மீனவர்களுக்கு வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மீனவர்களுக்கு மீன் வளத் துறையின்மூலம் வீடு கட்டும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர், நாளைய பாரதப் பிரதமர், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மடத்துக்குளம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள அமராவதி நகர் மற்றும் திருமூர்த்தி நகர் பகுதிகளிலுள்ள மீனவர்களுக்கு வீடுகள் கட்டித் தர வேண்டுமென்று கேட்டேன். கட்டித் தருவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லையென்று கூறினார்கள். அங்கே அதிக மக்கள் இல்லை. திருமூர்த்தி நகர் பகுதியிலே 8 குடும்பங்கள்

*[2014 பிப்ரவரி 1*

*தான் இருக்கின்றன. அமராவதி நகர் பகுதியிலே 20 குடும்பங்கள் தான் இருக்கின்றன. மலைவாழ் மக்களும் இருக்கிறார்கள். ஆகவே, அரசுமூலமாக கட்டடத்தைக் கட்டி வாடகைக்கு விடுவதற்கு மீன் வளத் துறைக்குச் சொந்தமான இடம் உள்ளது. மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலிப்பார்களா எனத் தங்கள்மூலமாகக் கேட்டு, அமருகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மடத்துக்குளம் தொகுதி, அமராவதி நகரிலே* pe*6 என்கிற அமராவதி வனச் சரகம் உள்ளது. மலைவாழ் மக்கள் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர். அமராவதி நகர் மற்றும் திருமூர்த்தி நகர் பகுதிகளிலே வாழும் மீனவக் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் பட்டாவுடன் விண்ணப்பித்தால், அவர்களது விண்ணப்பம் பரிசீலிக்கப்பட்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் திட்டமான பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின்மூலம் வீடுகள் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

**திரு. சி. சண்முகவேலு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்மூலமாக வீடுகள் கட்டுவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று கூறினார்கள். அந்தப் பகுதிகளிலே உள்ள மீனவர்களுக்கு பல்வேறு வசதிகள் அரசின்மூலமாக ஏற்கெனவே ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தாலும்கூட, வலைகளில் ஏற்படும் சிக்கலைப் பிரிப்பதற்கு இடமில்லை. அங்கு மீன்களை விற்பனை செய்வதற்கு இடவசதி இல்லை. 1965 ஆம் ஆண்டிலேயே மீன் தொட்டி மற்றும் மீன் வளர்ப்புக் கூடங்கள் ஆகியவை தேவையான அளவு கட்டப்பட்டிருந்தாலும்கூட, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான் இந்த இரண்டு அணைப் பகுதிகளிலும் சுமார் 60 இலட்சம் ரூபாய்க்கு மராமத்துப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு தொட்டிகள் சீரமைக்கப்பட்டன. அந்த மக்களுக்கு வீட்டோடு சேர்த்து மீதமுள்ள தொட்டிகளையும் சீரமைத்து, மீன் குஞ்சுகளை விடுவதற்குத் தேவையான வசதிகளையும் செய்துதர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள்மூலமாகக் கேட்டு அமருகிறேன்.*



*2014 பிப்ரவரி 1]*

*முற்பகல் 11—10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இரண்டாம் முறையாக தமிழகத்தின் முதல்வராக இருந்தபோது, சுனாமி பேரிடர் காலத்திலே, சுனாமியால் பாதிக்கப்பட்ட அனைத்து வீடுகளுக்கும் வீடு கட்டிக்கொடுத்தார். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருமூர்த்தி நகரிலும், அமராவதி நகரிலும் 20 மீனவ குடும்பங்கள்தான் இருக்கின்றன என்று குறிப்பிட்டார். அவர்கள் பட்டாவுடன் சேர்த்து விண்ணப்பித்தால், ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் துறையின் மூலமாக வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும். அத்துடன் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வலை பழுதுபார்க்கும் கூடம் ஒன்று கட்டித்தரவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். அதை ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**29—**

**தார்ச் சாலை**

***17420—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

*மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

[2014 பிப்ரவரி 1

(அ) மேட்டுப்பாளையம் தொகுதி, கோபனாரி பகுதியிலுள்ள மூணுகுட்டை மற்றும் அரக்கடவு கிராமங்களுக்கு தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் தொகுதி, கோபனாரி பகுதியிலுள்ள மூணுகுட்டை மற்றும் அரக்கடவு கிராமங்களிலுள்ள மண் சாலையை தார்ச் சாலையாக அமைக்கும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளர்வறியாத துணிவும், அசையா உறுதியும், திடமான முடிவும், தீர்க்கமான நடவடிக்கையும், தன்னிகரில்லாத தலைமைப் பண்பும் கொண்டு தமிழக மக்களைக் காத்துவரும் மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது மேட்டுப்பாளையம் தொகுதிக்குட்பட்ட கோபனாரியிலிருந்து அரக்கடவு வரை செல்கிற சாலை, மலைப்பகுதியிலே அமைந்திருக்கின்ற சாலை. இந்தச் சாலை சுமார் 8 கி.மீ. நீளமுள்ளது. இந்தச் சாலை மண் சாலையாக இருக்கிறது. அங்கே வாழ்கிற மக்கள் வசதியில்லாதவர்கள். நடந்து செல்கிற சூழ்நிலையில் இருக்கிறார்கள். கடந்த காலங்களில் இந்தச் சாலையை மேம்பாடு செய்ய வேண்டுமென்று சொன்னபோது, வனத் துறையினுடைய அனுமதி பெறாமல் செய்ய முடியாது என்று சொல்லி, காலம் தாழ்த்தப்பட்டது. அந்த நிலைமை இன்றும் தொடர்கிறது. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வனத் துறையின் அனுமதியைப் பெறுவதற்கு உரிய நடவடிக்கையை மேற்கொண்டு, வருகிற நிதியாண்டிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்களின்வாயிலாக அறிய விரும்புகிறேன்.



2014 பிப்ரவரி 1]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதி, தோலம்பாளையம், கோபனாரி சாலையிலிருந்து பிரிந்து செல்லும் அரக்கடவு மண் சாலையின் நீளம் 5 கி.மீ., அகலம் 3.5 மீட்டராகும். இதே சாலையில் மூணுகுட்டைப் பிரிவிலிருந்து மூணுகுட்டைக்குச் செல்லும் மண் சாலையினுடைய நீளம் 2 கி.மீ., அகலம் 3.5 மீட்டராகும். சாலையின் மொத்த நீளம் 7 கி.மீ., மொத்தப் பரப்பு 2.45 ஹெக்டேராகும். மேற்காணும் சாலை கோபனாரி காப்புக் காட்டின் வழியே செல்கின்றது. இக்காப்புக் காட்டு சாலைக்கு வழி உரிமை ஏதும் வழங்கப்படவில்லை. மேற்படி சாலையின் மொத்தப் பரப்பு 2.45 ஹெக்டேர் என்பதால் இச்சாலையை பழங்குடியினர் மற்றும் இதர மரபு வன வாழ்வினர் வன உரிமைகள் அங்கீகரித்தல் சட்டம், 2006—ன்படி பரிசீலிக்க இயலாது. மேற்படி சாலைகள் அமைந்துள்ள காப்புக் காடு, மரங்கள் அடர்ந்த வனப் பகுதியாகும். அதிக எண்ணிக்கையில் யானை, மான், காட்டெருமை மற்றும் இதர வன உயிரினங்கள் உள்ளதால், இந்தப் பகுதியில் தார்ச் சாலை அமைக்கப்பட்டால், வன உயிரினங்களின் இயல்பு வாழ்க்கைக்குக் குந்தகம் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, மேற்காணும் சாலைகளை தார்ச் சாலைகளாக மாற்ற இயலாது என மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ் அவர்கள்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையம் தொகுதி, மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் அமைந்திருக்கிற ஒரு தொகுதி. அங்கு ஏறத்தாழ 50—க்கும் மேற்பட்ட குக்கிராமங்களில் வாழ்கிற ஆதிவாசி மக்கள் செல்வதற்கு சாலை வசதி இல்லாமையால், 7 கி.மீ. அல்லது 8 கி.மீ. தூரம் மண் சாலையில் நடந்து செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. மேட்டுப்பாளையத்திலிருந்து பில்லூர் அணைக்குச் செல்வதற்கு தற்போது 60 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஒரு பாதை அமைக்கப்பட்டிருக்கிறது. மேட்டுப்பாளையத்திலிருந்து

பில்லூர் அணைக்குச் செல்வதற்கு மலைப் பகுதியின் வழியாக மண் சாலை ஒன்று உள்ளது. அந்த மண் சாலை சுமார் 9 கிலோ மீட்டர் நீளம் உள்ளது. ஆகவே, 9 கிலோ மீட்டர் நீளமுள்ள அந்தச் சாலையை தார்ச் சாலையாக அமைத்துத் தருகிறபட்சத்தில், பில்லூர் அணையைச் சுற்றி இருக்கின்ற 30–க்கும் மேற்பட்ட ஆதிவாசி குடும்ப மக்களுக்கு அது பயனுள்ளதாக இருக்கும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் பகுதியில் இருக்கிற ஆதிவாசி மக்களுக்கு நிரந்தரமாக சாலை வசதி ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுப்பார்களா எனத் தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

முற்பகல் 11–15

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1980 ஆம் ஆண்டுமுதல் பொது மக்களின் பயன்பாட்டில் இருக்கும் வனப் பகுதியிலுள்ள வழித்தடங்களை அதே பரப்பளவில் மேம்படுத்த, முறையான விண்ணப்பம் மாவட்ட வன அலுவலரிடம் சமர்ப்பித்தால், அதனை மத்திய அரசுக்கு அனுப்பி, அனுமதியைப் பெற்று, மேம்பாட்டுப் பணிகள் செய்திட, வனப் பாதுகாப்புச் சட்டம், 1980 வழிவகை செய்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வனப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் மத்திய அரசின் அனுமதி பெற உரிய விண்ணப்பத்தினை மாவட்ட வன அலுவலரிடம் சமர்ப்பித்தால், அதைப் பரிசீலனை செய்து மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று, மாண்புமிகு அம்மா அவர்களின் மேலான ஆணையைப் பெற்று, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.





**30—**

### மாணவர் விடுதி

***37113—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கலசப்பாக்கம் தொகுதி, காஞ்சி மற்றும் ஏலத்தூரில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைமூலம் மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நல விடுதிகள் ஒவ்வோர் ஆண்டும் தேவையின் அடிப்படையில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் துவங்கப்படுகின்றன. எனவே, புதிய விடுதிகள் திறப்பது குறித்து வரும் காலத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முடிவுகள் எடுக்கும்போது, திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், புதுப்பாளையம் ஒன்றியம், காஞ்சி என்னும் இடத்தில் புதிய பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி விடுதி துவக்குவது குறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டுசென்று பரிசீலிக்கப்படும்.

ஏலத்தூர் கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மட்டுமே செயல்பட்டு வருகிறது. அப்பள்ளியில் மொத்தம் 77 மாணவர்கள் பயின்று வருகின்றனர். பள்ளி விடுதியைப் பொறுத்தமட்டில், 4 ஆம் வகுப்பிலிருந்து மாணவர்கள் விடுதியில் அனுமதிக்கப்படுவதால், ஏலத்தூர் கிராமத்தில் புதிய விடுதி துவக்கப்படும்பட்சத்தில் போதிய மாணவர்கள் சேர வாய்ப்பில்லை. ஆகவே, அங்கே புதிய விடுதி துவங்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள்.

*[2014 பிப்ரவரி 1*

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் சட்டமன்றத் தொகுதி, காஞ்சி ஊராட்சியில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் மூலமாக மாணவர் விடுதி அமைக்க மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்று அறிவித்த அனைத்திந்திய அண்ணா திராவிட முனனேற்றக் கழகம் என்னும் ஆலயத்தின் ஆராதனைக்குரிய தெய்வமே! அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் 1½ கோடி தொண்டர்களின் நாடி நரம்புகளிலே சங்கநாதமிட்டுக்கொண்டிருக்கிற கழகத் தொண்டர்களின் காவல் தெய்வமே! 7 கோடி தமிழக மக்களின் உள்ளங்களிலே வசந்தத்தை பொதிகை மலைத் தென்றலாய் தந்து கொண்டிருக்கும் எங்களின் உயிர் ஓவியமே! எதிரிகளின் பாய்ந்து வருகின்ற ஈட்டிமுனை தாக்குதல்களைக்கூட நெஞ்சுரத்தோடு எதிர்கொள்கின்ற அறிவையும், ஆற்றலையும், வீரத்தையும், விவேகத்தையும் ஒருங்கே பெற்றிருக்கின்ற வீரத்தின் விளைநிலமே! வெற்றியின் திருமகளே! செந்தமிழை சீர்மணக்கச் செய்திட்ட செந்தமிழின் சந்தனமே! செந்தமிழ் நாடு சிறப்புறவே, செயல்படும் அறிவே, ஆற்றலே, வீரமே, விவேகமே! பொன்மனச் செம்மலின் புகழ் வடிவே! வரலாற்றுப் புகழ் தொடரே! பண்பின் தொகையே! பாசப் பெருமழையே! வளர்பிறையாய், முழு மதியாய் வந்துதித்த பெருந்தவமே! என் தாரக மந்திரமே! அடக்க நினைத்தால் ஆர்ப்பரிக்கும் சிங்கமாய், வணங்கித் துதித்தால் வரமளிக்கும் அன்னையாய், நிறைந்த புகழால் உயர்ந்து நிற்கும் தேசியத் தலைவியே! பகைவர்களின் கூடாரத்தை வேரோடும், வேரடி மண்ணோடும் வீழ்த்தி, போர் முரசு கொட்டி சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலேயிருந்து டெல்லி செங்கோட்டையிலே பூபாளம் பாட (மேசையைத் தட்டும் ஒலி) புறப்பட்டுவிட்ட எங்கள் பிரபஞ்சத்தின் வெற்றித் திருமகளே! ஏழ்மையும், இல்லாமையும், கல்லாமையும் தமிழக மக்களின் தலைவிதி என்றால், அதை மாற்றி அமைத்தவர் வாழும் பிரம்மா, எங்கள் அம்மா! அனைவருக்கும் விலையில்லா அரிசி வழங்கி அருட்பணிபுரியும் அன்னபூரணியே, இல்லாமை இல்லாத நிலை வேண்டி, நல்வளமை உருவாக்கும் எங்கள் அருந்தமிழே, தொட்டதை துலங்கவைக்கும் எங்களின் தூய தலைவியே, பார்வையில் பட்டதை ஒளிரவைக்கும் ஒப்பாரும், மிக்காரும் இல்லாத ஒப்பற்ற தலைவியே, அரசியலின் அகரமே, அறிவுலகின் சிகரமே, இன்றைய தமிழகமே, நாளைய பாரதமே, தாயே,



*2014 பிப்ரவரி 1]*

*(மேசையைத் தட்டும் ஒலி)* தமிழே, தன்னிகரில்லா தன்மானத் தலைவியே, தந்த வாய்ப்பிற்கு நன்றியோடு வணங்கி அமர்கின்றேன்.

*முற்பகல் 11–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

**[குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம். மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா திரு. ஆர். மனோகரன் அவர்கள்.

***திரு. ஆர். மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட இருக்கின்ற இந்த 2014 ஆம் ஆண்டு முதல் கூட்டத்தொடரில் ஆளுநர் உரையின்மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகின்ற அரிய வாய்ப்பினை எனக்கு வழங்கிய கழகத்தின் காவல் தெய்வம், கழக நிரந்தரப் பொதுச் செயலாளர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களைப் பணிந்து வணங்கி, எனது உரையைத் துவக்குகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களைப் பிளவுபடுத்தும் மதவாத அச்சுறுத்தல்களை வேரறுத்து, மாநிலத்தின் உரிமைகளை முன்வைத்து, முழுமையான மக்களாட்சியை உருவாக்க, புரட்சித் தலைவர் கண்டெடுத்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்னும் வைர வரி கழகத்தின் பெயருக்கான முழுமையான காரணம் நிறைவேற்ற, கழகத்தின் காவல் தெய்வமாய் விளங்கி வரும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் நாற்பதையும் வென்றெடுத்து, நாடாளும் பிரதமராகி, பாராளப் போகிறார் என்ற செய்தி

[திரு. ஆர். மனோகரன்] *[2014 பிப்ரவரி 1*

*(மேசையைத் தட்டும் ஒலி)* இந்த 2014 ஆம் ஆண்டின் வரலாற்றில் வரலாற்றுச் சுவடாக பதிவு பெறப் போகிறது என்பதைப் புத்தாண்டு செய்தியாக மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதங்கள் பணிந்து இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈழத் தமிழர்களின் ஓலக் குரல்கள் ஒலிக்கும்போது செவிடானவர்களையும், இரயிலே ஓடாத தண்டவாளத்தில் தலைவைத்துப் போராடியதாக ஏமாற்றியவர்களையும், உயிருடன் இருக்கும்போது உதாசீனப்படுத்திவிட்டு, உயிர் பிரிந்தபின் அவர்களுக்காக உருகி இரங்கற்பா எழுதியவர்களையும், அரசியல் சட்டத்தை எரிப்பேன் என்று வீர வசனம் பேசிவிட்டு, எரிந்த பின் தண்டனைக்குப் பயந்து எரித்தது நகல்தான் என்றவர்களையும், 'கூடவே இருக்கும் அன்பருக்கு என்றைக்கும் இரண்டாம் இடம்தான்', ஆனால் தான் கூடிப்பிறந்த மகனுக்கு மட்டுமே என்றும் முதல் இடம் என்பவர்களையும், பூப்பிளக்க வருகின்ற புற்றீசல்போல, பொல பொலவென குடும்பங்களைப் பெருக்கி, சென்னை–1, சென்னை–2, மதுரை, பெங்களூர் மற்றும் திகார் என கூடாரங்கள் அமைத்து, கூடா நட்பு என்று சொன்னவர்களோடு, கூட்டணி அமைத்து, தேவைப்பட்டால் 'மணிமேகலை' என்பது, தேவையில்லை என்றால் புழுதி வாரி தூற்றுவது என்னும் பழக்கத்தினர், அண்ணா நகர், பெரம்பலூர் என்று பழகியவர்களை எல்லாம் பரலோகம் அனுப்பி, குடும்பப் பிரச்சினைக்காக, பத்திரிகையாளர்களை பஸ்பம் ஆக்கி, தன் குடும்பத்தாரை மட்டும் டெல்லிக்கு அனுப்பி, உயர் பதவி அளித்து உச்சிமுகந்து பார்ப்பவர்கள், பெரியாருக்காக தலைவர் பதவியை அண்ணா காலியாக வைத்ததுபோல, மட்டி மடையர் கூட்டம் சேர்த்து மண்டலத்தையே குட்டிச் சுவராக்கியவர்கள், அனுபவித்த மண்டலப் பதவி வேறு யார்க்கும் கிடையாது, காலியாகவே இருக்கும் என்று அறிவிப்பது, கூவத்தை மிஞ்சும் குடும்ப இரகசியங்களை தன் கண்களை மட்டும் மூடிக்கொண்டு 'மறைத்துவிட்டேன், மறைத்துவிட்டேன்' என்று கோமாளித்தனம் செய்பவர்கள், இனித் தேர்தலில் நின்றால், என்ன நடக்கும் என்பதை அவர்களின் அஞ்சும் நெஞ்சன் சொன்னது போல, "அவர்கள் தாமாகவே தோற்றுவிடுவார்கள், அவர்களிடத்தில் ஜனநாயகம் செத்துவிட்டது" என்று கூறியதை நினைவுகூர்ந்து, வர இருக்கிற நாடாளுமன்றத் தேர்தலில் எத்தனை கட்சிகளுடன்



*2014 பிப்ரவரி 1]* [திரு. ஆர். மனோகரன்]

கூட்டு சேர்ந்தாலும், அவர்கள் அத்தனைபேரின் வாக்குகளை சேர்த்தாலும் அவர்களுக்கு டெபாசிட்கூட கிடைக்காது என்று *(மேசையைத் தட்டும் ஒலி)* தமிழக மக்கள் இந்த புத்தாண்டில் முடிவு செய்து இருக்கிறார்கள் என்ற செய்தியையும் நாட்டு நடப்பாக நான் அறிந்ததை இந்த அவையில் பதிவு செய்திட விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேதகு ஆளுநர் அவர்களின் உரை, மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் தொடரும் பல்வேறு மக்கள் நலத் திட்டங்களை இம்மி பிசகாமல் பிரதிபலிக்கும் துல்லியமான கண்ணாடி போல் எடுத்துக்காட்டுகிறது.

மாண்புமிகு அம்மாவின் ஆட்சியில் 'இல்லை' என்ற சொல் மட்டுமே இல்லை. மக்களுக்குத் தேவையான மற்றவை எல்லாமே இருக்கிறது. 2012–2013 ஆம் ஆண்டில் வறட்சியை சமாளிக்க உரிய நேரத்தில் 1,614 கோடி ரூபாயை வாரி வழங்கியவர் நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11–25*

பொருளாதாரத்திற்கு ஊக்கம் அளிப்பதற்காக 2013–2014 ஆம் ஆண்டிற்கான திட்டச் செலவினுடைய இலக்கை 37,128 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தியுள்ளதோடு, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டில் திட்ட அளவை 42,185 கோடி ரூபாய் அளவிற்கு *(மேசையைத் தட்டும் ஒலி)* மேலும் உயர்த்தியவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் பாதுகாப்புப் படைக்காக 10,500 பணியிடங்கள் உட்பட 24,500 கூடுதல் பணியிடங்களை காவல் துறையில் உருவாக்கியதோடு, தேடப்பட்டு வந்த தீவிரவாதிகளை ஆந்திர மாநிலம், புத்தூரில் சுற்றி வளைத்து கைது செய்ததன்மூலம் உள்நாட்டு பாதுகாப்பை உறுதிசெய்து வருபவர்கள் மாண்புமிகு அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் உள்ள தமிழர்களின் நலன்களுக்காகவும், தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் துன்புறுத்தப்படும்போதும், கைது செய்யப்படும்போதும், ஈரான் நாட்டு சிறைகளில் அல்லலுற்றபோதும், தமிழர்கள் மாநிலத்தின் எல்லை தாண்டி உத்திராகண்ட் மாநிலத்திலும், ஒடிசா மாநிலத்திலும் இயற்கைச்

[திரு. ஆர். மனோகரன்] [2014 பிப்ரவரி 1

சீற்றத்தினாலும், சமீபத்தில் அந்தமானில் படகு விபத்தினாலும் பாதிக்கப்பட்டபோதும் தாயுள்ளத்தோடு அரசின் உயர் அதிகாரிகளை அனுப்பி வைத்து, அவர்களின் துயரைத் துடைத்தவர் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வெள்ளிக்கிழமைதோறும் அரசு அலுவலர்கள் கிராமங்களுக்குச் சென்று பொதுமக்களுடைய குறைகளைக் குறுகிய காலத்தில் நிவர்த்தி செய்ய அறிமுகப்படுத்தப்பட்டுள்ள அம்மா திட்டத்தின், மூலம் பெறப்பட்ட (மேசையைத் தட்டும் ஒலி) 33.13 இலட்சம் மனுக்கள்மீது உடனடி நடவடிக்கை, சூரிய மின்சக்தி கொண்ட பசுமை வீடுகள் திட்டம், உலக தமிழாராய்ச்சி நிறுவனத்திற்கு நிருவாகக் கட்டடம் அமைத்திட 4.17 கோடி ஒதுக்கீடு செய்தவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அண்மையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில் 312 கருத்துருக்களுக்கும் ஒப்புதல் வழங்கி, ஆணை பிறப்பித்திருப்பதன்மூலம் தமிழகத்தில் அமைதி, வளம் மற்றும் வளர்ச்சிக்கு வலிமை சேர்த்திருப்பவர்கள் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலக அளவில் உயர் கல்வித் தரத்தை உயர்த்திட, ஸ்ரீரங்கம் தொகுதியில் இந்திய தொழில்நுட்ப நிறுவனம், தேசிய சட்டப் பள்ளி முதலான உயர் கல்வி நிறுவனங்கள் அமைத்தது, நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் பங்கினை தனியாருக்கு மத்திய அரசு விற்க முற்பட்டதைத் தடுத்து, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மாவின் அரசு அவற்றை வாங்கியது, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகம் ஒலிம்பிக் மற்றும் சர்வதேச போட்டிகளில் பங்கேற்கும் வகையில் ஐந்து சிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கணைகளை தயார்படுத்த அவர்களுக்கு தலா ரூ.25 இலட்சம் சிறப்பு உதவித் தொகை வழங்கும் திட்டம் உட்பட இளைஞர்களுக்கிடையே விளையாட்டுக்களை மேம்படுத்த பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டது மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. போதிய மின்சாரம் கிடைத்திடுவதை உறுதி செய்திட உரிய நடவடிக்கைகள், விவசாயிகளின் விளைபொருளுக்கு நியாயமான விலை, உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்ய இந்த நிதி ஆண்டில் மானியமாக 4,900 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தவர்



2014 பிப்ரவரி 1] [திரு. ஆர். மனோகரன்]

நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் பசியாற 290 அம்மா உணவகங்கள், தவிக்கும் வாய்க்கு அம்மா குடிநீர்த் திட்டம், சாலைகளை மேம்படுத்தவும், பாலங்கள் அமைக்கவும், இந்த நிதி ஆண்டில் 2,500 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு மூலதன உதவி மற்றும் கடனாக 3,060.74 கோடி ரூபாய், முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் ஒரு கோடியே 29 இலட்சம் குடும்பங்களுக்கு மருத்துவ காப்பீடு என தொடரும் மக்கள் நலத் திட்டங்கள் மாண்புமிகு அம்மா அவர்களால் செயலாக்கம் பெற்றுக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.

தற்போது தமிழகத்தில் ஒரு களவாணி கூட்டத்திற்குள் கைகலப்பு ஏற்பட்டு கன்னமிட்ட கதைகள் எல்லாம் களத்திற்கு வந்து கொண்டு இருக்கின்றன! அதாவது, பட்டப்பகலில் திருடர்களுக்குள் முட்டல், மோதல் ஏற்பட்டு, பங்கு பிரித்த கதைகள் எல்லாம் விரைவில் சந்திக்கு வரப்போகின்றன. கொள்ளைக் கும்பலுக்குள் குத்து வெட்டு ஏற்பட்டால், அவர்கள் கடந்த காலங்களில் யார் யாரை குத்தினார்கள் என்று உளற ஆரம்பித்து விடுவார்கள்.

களி தின்பது அவர்களுக்கு கை வந்த கலை, அது திகார் சிறைவரை நீளும். ஏனென்றால் இந்தியத் திருநாட்டை சுமார் 17 ஆண்டுகள் சுரண்டி, சுரண்டி, அலைவரிசை முதல் ஹார்லிக்ஸ் பாட்டில்கள் வரை கபளீகரம் செய்து, மானத்தை விற்று விமானம் வாங்கிய கூட்டம் அது, (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது கூட்டணி, கூட்டணி என்று கூவிக் கொண்டு இருக்கிறார்கள்.

முற்பகல் 11–30

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய் நாட்டை வழிநடத்தப் போகும் தமிழ்த்தாய் நம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) அத்துமீறும் சீனாவையும், அடங்க மறுக்கும் பாகிஸ்தானையும், இறுமாப்பு கொண்டுள்ள இலங்கையையும், ஒரே நாளில் அடக்கவல்ல தனிமனித இராணுவம் நம் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அன்னை ஆளும் தமிழகத்தில் அமைதி உண்டு. இனி அம்மா ஆளப்போகும் இந்தியாவிற்கு ஐ.நா. சபையில் நிரந்தர இடமும்

[திரு. ஆர். மனோகரன்] *[2014 பிப்ரவரி 1*

உண்டு. *(மேசையைத் தட்டும் ஒலி)* குடும்ப ஆட்சி இங்கே இல்லை, டெல்லியில் வரப்போவதும் இல்லை. இனி இந்தியா முழுமையிலும் மாண்புமிகு அம்மாவின் ஆட்சிதான். இதற்கு, வரும் நாடாளுமன்றத் தேர்தலே சாட்சி. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்கிழக்கு ஆசியாவை வீரத்தால் வென்றெடுத்த பண்டைத் தமிழ் அரசர்கள், வடஇந்தியாவை வென்றெடுக்க முழு முயற்சி எடுக்கவில்லை. ஏனென்றால், இந்தியாவை முழுமையாக ஆளுவதற்கு, வீரத்தின் விளைநிலம், வாழும் வேலுநாச்சியார், மாண்புமிகு அம்மா அவர்கள்தான் 2014—ல் வென்றெடுக்க வேண்டுமென்று அன்றே முடிவு செய்திருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களுடன்தான் கூட்டணி என்று உளறிக்கொண்டு, நீதிமன்றத்திற்குள் தள்ளாடுவதையும், துக்கம் விசாரிக்கப் போன இடத்தில் நன்றி சொல்வதையும் பழக்கமாகக் கொண்டவர்கள் சிலர் இருக்கிறார்கள். அவர்கள் படித்த 'class—ஐ'விட அடித்த 'glass' அதிகம். *(மேசையைத் தட்டும் ஒலி)* தனியாக நிற்பேன் என்பார்கள். ஆனால், தண்ணியில் தள்ளாடுவார்கள். ஆல் இந்தியா தலைவருக்கும், ஆல்கஹால் தலைவருக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள், பித்தம் உச்சிக்குப் போய் என் தலைமையை ஏத்திக்கினாத்தான் கூட்டணி என்பார்கள். அப்படி ஏத்திக்கினா வேட்பாளரை மக்கள் மத்தியில் போட்டு நையப்புடைப்பார்கள். இதனால் கூட்டணி வைக்கவே எல்லோரும் யோசிக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தென்னை மரத்தில் தேள் கொட்டினால், பனை மரத்தில் நெறி கட்டும்' என்ற கூற்றை கூத்துக்காக, சிலர் சொல்லுவார்கள். அதுபோல, ஏற்காட்டில் இடைத்தேர்தல் என்றவுடன், அங்கே போட்டி போடாமல் டெல்லிக்குப் போய் டெபாசிட் கட்டினார்கள். இங்கே கிடைக்காத டெபாசிட் அங்கே போயா கிடைக்கும்? டெபாசிட்கள் பறிபோனதுதான் மிச்சம். இப்பொழுது மீண்டும் டெல்லி என்று, ரவுண்டு ரவுண்டாக மலேசியா வரை சென்று கூட்டணி பேரம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எத்தனை ரவுண்டு போட்டு கூட்டு சேர்ந்தாலும், தள்ளாடி கூண்டோடு கைலாசத்திற்குத்தான் செல்ல முடியுமே தவிர டெல்லி செங்கோட்டைக்கு நிச்சயமாக அவர்களால் போக முடியாது. *(மேசையைத் தட்டும் ஒலி)*



*2014 பிப்ரவரி 1]* [திரு. ஆர். மனோகரன்]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழி துஞ்சாது மக்கள் நலனே தன் நலன் என்று அயராது பாடுபட்டு வரும் மாண்புமிகு அம்மா அவர்கள், தேர்தலைப் பற்றியோ, கூட்டணியைப் பற்றியோ கவலைப்படுவதே கிடையாது. ஏனென்றால், மாண்புமிகு அம்மா அவர்களின் வெற்றி, மக்களால் ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டுவிட்டது. *(மேசையைத் தட்டும் ஒலி)* தமக்கென வாழாது, பிறருக்கென வாழும் தாயுள்ளம் கொண்ட தலைவி, தடைகள் தாண்டி, படைகள் பல வெல்லும் தளராத போராளி. சட்டத்தின் துணை கொண்டு இதுவரை சாதிக்க முடியாததையெல்லாம் சாதித்துக் காட்டும் துணிவுமிக்க தலைவி. சதிகளையெல்லாம் மதிகொண்டு சாய்க்கின்ற சத்தியத் தலைவி. ஒப்பிட முடியாத தங்கத் தமிழ் தாரகை. இன்றுவரை தமிழினம் காத்து, நாளை முதல் இப்பாரதத்தை பாதுகாக்கப் போகும் பாசறைத் தலைவி. நம் மாதரசியின் வருகைக்காக மாதவம் கொண்டிருக்கிறது டெல்லியின் செங்கோட்டை. நாடாளுமன்றத் தேர்தலுக்குப்பின் கதர் இருக்காது. அன்று ஈகை கொண்ட எங்கள் தாயின் ஈர் இலை மட்டுமே இந்த தேசத்தை ஆளும். *(மேசையைத் தட்டும் ஒலி)* மதம் பிடித்து அலைபவர்களுக்கு இனி மகுடம் கிடையாது. பணப்பித்து பிடித்து அலைபவர்களுக்கு இனி மத்தியில் பதவியும் கிடையாது. மக்களால் நான், மக்களுக்காகவே நான் என்று தினம் உழைக்கும் *(மேசையைத் தட்டும் ஒலி)* திருவரங்க திருத்தாய்க்குத்தான் இனி டெல்லியின் மணி மகுடம் என்று மக்கள் முடிவு செய்துவிட்டார்கள் *(மேசையைத் தட்டும் ஒலி)* என்று கூறி, மேதகு ஆளுநர் உரைமீது நன்றி தெரிவித்துப் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை மீண்டும் வணங்கி, மேதகு ஆளுநர் அவர்களுடைய உரையை வரவேற்று, எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

*முற்பகல் 11—35*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கிற தீர்மானத்தின்மீது எங்களது கருத்துகளை வழங்குகிற வாய்ப்புகளைத் தந்திருக்கிற தங்களுக்கு முதலிலே எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2014 பிப்ரவரி 1

பல இலட்சம் ஆண்டுகளாக வாழ்ந்துகொண்டிருக்கிற மனித சமுதாயத்திலே சிலர் மட்டுமே எவ்வளவு ஆண்டுகாலம் மனித சமுதாயம் வாழ்கிறதோ, அவ்வளவு ஆண்டுகாலம், அந்த வாழ்வோடு இணைந்து வாழ்கிற ஒரு தனித் தன்மையை, புனிதத்தைப் பெறுகிறார்கள். அவர்கள் மிகப் பெரிய சாதனையாளர்களாய், மிகப் பெரிய சிந்தனையாளர்களாய், மிகப் பெரிய ஆற்றல் உடையவர்களாய், மனித சமுதாயத்தையே மாற்றி அமைக்கக்கூடிய புரட்சியாளர்களாய் இருந்திருக்கிறார்கள். அதுதான் அவர்களுக்கு இருக்கிற பெருமை. வரலாற்றையே திருப்பிப் போடுகிற புரட்சியாளர்களாய் இருக்கிற அந்தத் தனித் தன்மை மிக்க நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்தப் புனித மாதத்திலே, (மேசையைத் தட்டும் ஒலி) பிப்ரவரி மாதத்திலே பிறந்திருக்கிறார்.

பொதுப் பெயரையே தனிப் பெயராக்கிக்கொண்ட நம்முடைய திராவிட இயக்க மூத்த தலைவர்கள் தமிழகத்திலே பெருமையோடு வாழ்ந்திருக்கிறார்கள். பெரியார் என்பது ஒரு பொதுப் பெயராக இருந்தாலும், பெரியார் என்றால், அது பெரியார் ஈ.வெ.ரா.—வைத்தான் குறிக்கும். அண்ணா என்பது குடும்ப உறவான பொதுப் பெயராக இருந்தாலும், அண்ணா என்றால், அது பேரறிஞர் சி.என். அண்ணாதுரை அவர்களைத்தான் குறிக்கும். தமிழகத்தினுடைய திரையரங்குகளையெல்லாம் திறந்தவெளி பல்கலைக்கழகமாக உருவாக்கிய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், வாத்தியார் என்று சொல்கிற, ஆசிரியர் என்று சொல்கிற அந்தத் தொழில் பெயரையே தன் பெயராகக் கொண்டுள்ளார். வாத்தியார் என்று சொன்னால், அது புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைத்தான் குறிக்கும்.

அதுபோல, தமிழகம் வாழும் வரை, தமிழ்மொழி இருக்கும் வரை, தமிழினம் இருக்கும் வரை, (மேசையைத் தட்டும் ஒலி) கடைசி தமிழ் உணர்வு இருக்கிற வரை, அம்மா என்று சொன்னால், அது புரட்சித் தலைவி அம்மா அவர்களைத்தான் குறிக்கும். நாளைய வாழ்வும், நாளைய மானுடமும் நிலைத்து நிற்கும் புகழைப் பெற்றிருக்கிற புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த பிறந்தநாள் வாழ்த்துகளை, இந்தத் தொடக்க நாளிலே, பிப்ரவரி மாதத்திலே உரித்தாக்கி, என்னுடைய உரையை நான் தொடங்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



2014 பிப்ரவரி 1] [முனைவர் செ.கு. தமிழரசன்]

ஆளுநர் உரை என்பது ஒரு மரபு. ஒவ்வோர் ஆண்டின் தொடக்கத்திலே நம்முடைய ஜனநாயக அமைப்பான சட்டமன்றத்திலே, நாடாளுமன்றத்திலே ஆளுநர் உரை நிகழ்த்துவதும், குடியரசுத் தலைவர் உரை நிகழ்த்துவதும் ஒரு மரபு. அந்தவகையிலே, நம்முடைய ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தை இந்த மாமன்றம் இப்போது நிகழ்த்திக்கொண்டிருக்கிறது. இந்த ஆளுநர் உரையிலே என்ன இருக்கிறது, என்ன புதிய கொள்கை இருக்கிறது, என்ன புதிய திட்டம் இருக்கிறது, ஏன் விரிவான விவாதம் இல்லை, மூன்று நாள் போதுமா என்றெல்லாம் வெளியிலே இருந்து சிலர் பேசிக்கொண்டிருக்கிறார்கள். ஒரு நல்ல நூலுக்கு முன்னுரை இருக்கும் அல்லது அணிந்துரை இருக்கும் அல்லது அறிமுக உரை இருக்கும். ஆனால், மிகச் சிறந்த நூலாசிரியர்கள் எழுதிய நூல்களுக்கெல்லாம் அறிமுக உரையோ, முன்னுரையோ, வேறு எந்த உரையோ இருக்காது, மதிப்புரைதான் இருக்கும். கம்பராமாயணத்திற்கு முன்னுரை எழுதமுடியுமா? மகாபாரதத்திற்கு முன்னுரை எழுதமுடியுமா? மதிப்புரை எழுதலாம் மூன்று ஆண்டுகால அம்மா அவர்களுடைய ஆட்சிக்கு, அந்தச் சாதனைகளுக்கு மாண்புமிகு ஆளுநர் அவர்கள் மதிப்புரை தந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) சொன்னதையே சொல்லியிருக்கிறார்களே, பேசியதையே பேசியிருக்கிறார்களே, குறிப்பிட்டதையே குறிப்பிட்டிருக்கிறார்களே என்றெல்லாம் சொல்கிறார்கள், சுதந்திர இந்திய நாட்டிலே 65 ஆண்டுகாலமாக வறுமையை ஒழிக்கிறோம் என்றுதான் பேசிக்கொண்டிருக்கிறோம். பாராளுமன்றம் ஆனாலும், சட்டமன்றம் ஆனாலும், ஏழ்மையை ஒழிக்கிறோம் என்றுதான் குரல் கொடுத்துக்கொண்டிருக்கிறோம். வறுமையும், ஏழ்மையும் ஒழியாத வரையிலே, அதைப்பற்றித்தானே பேசிக்கொண்டிருப்போம். ஆகவே, பேசியதையே பேசிக்கொண்டிருக்கிறோம், சொன்னதையே சொல்கிறோம் என்றெல்லாம் யாராவது சொன்னால், அவர்கள் அடிப்படைக் கொள்கைக்கே அர்த்தம் தெரியாதவர்கள், அடிப்படை ஜனநாயகத்திற்கு அர்த்தம் தெரியாதவர்கள் என்றுதான் சொல்லமுடியும். இதில் என்ன இல்லை, கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு ரூபாய் 5,600 கோடி திட்ட மதிப்பீடு அதிகமாகி இருக்கிறதே, இந்த ஒரு வரி போதாதா, இதில் எல்லாமும் அடங்குமே. கடந்த நிதியாண்டை விட இந்த நிதியாண்டில் ரூபாய் 5,600 கோடி, திட்ட மதிப்பீட்டுக்கு அதிகமாக தொகை

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2014 பிப்ரவரி 1

ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஒரு வரியிலே எல்லாமே அடக்கம். ரூபாய் 5,600 கோடி அளவு உயர்ந்திருக்கிறது என்றால், இதில் எல்லாமே அடக்கமாயிற்றே. இதில் எது இல்லை, வேலைவாய்ப்பு பற்றி இல்லையா, கல்வி வளர்ச்சி பற்றி இல்லையா, வேளாண்மை பற்றி இல்லையா, மருத்துவ வசதி பற்றி இல்லையா, மக்கள் நலத் திட்டங்கள் பற்றி இல்லையா, எது இல்லை. எல்லாவற்றிலுமே இன்றைக்கு இந்தியாவுக்கு ஒரு முன்னுதாரணமாக நம்முடைய மாநிலம், தமிழக மாநிலம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே ஒளிர்ந்து கொண்டு இருக்கிறது, ஓர் உதாரணமாக இருந்து கொண்டிருக்கிறது என்பதுதானே உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) இப்படி இல்லாமல் பார்க்கிற பார்வையிலே இதிலே எதுவுமே இல்லை என்று சொன்னால், கிராமத்துப் பழமொழியைப் போல, காமாலைக்காரனுக்கு கண்டது எல்லாம் மஞ்சளாகத் தெரியுமே தவிர, அதிலுள்ள உண்மையான நிறங்கள் தெரியப்போவதில்லை. காமாலைக் கண்களுக்கு மஞ்சள்தான் தெரியும்.

*முற்பகல் 11–40*

கடந்த ஆண்டு உணவு உற்பத்தியிலே நம்முடைய மாநிலம் மத்திய அரசிடம் பரிசுகள் பெற்றிருக்கிறது. முதல் மாநிலம் என்று பரிசுகள் பெற்றிருக்கிறது. மருத்துவத்தை எடுத்துக்கொண்டால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னதைப்போல, இந்தியாவிற்கு டெல்லி வேண்டுமானால் தலைநகரமாக இருக்கலாம். மருத்துவத்திற்கு சென்னைதானே தலைநகரமாக இருக்கிறது! (மேசையைத் தட்டும் ஒலி) பிற மாநிலங்களிலிருந்து நோயாளிகள் சென்னையை நோக்கித்தானே வந்துகொண்டிருக்கிறார்கள். பிற நாட்டிலிருந்தும் வந்து கொண்டிருக்கிறார்கள். கல்வி வளர்ச்சியை எடுத்துக்கொண்டால் பிற மாநிலங்களைவிட நம்முடைய மாநிலம் எவ்வளவு விகிதம் இன்றைக்கு உயர்ந்து இருக்கிறது? உயர் கல்வியானாலும், தொழில்நுட்பக் கல்வியானாலும், வங்காளத்தைவிட, கேரளாவை விட நம்முடைய மாநிலம் எவ்வளவு வேகமாக வளர்ந்து இருக்கிறது. வேளாண்மைத் துறையைப் பொறுத்தவரையிலே, வறட்சி ஏற்பட்டு, 14 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேலே நிதியை ஒதுக்கி, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வறட்சியினால் ஏற்பட்ட பாதிப்பை இன்றைக்கு சரி செய்ததனால், வேளாண்மைத் துறையிலே, உணவு தானிய உற்பத்தியிலே நம்முடைய மாநிலம்



2014 பிப்ரவரி 1] [முனைவர் செ.கு. தமிழரசன்]

முதல் மாநிலமாக விளங்குகிறது அதைப்போலவே PDS என்று சொல்லப்படுகிற பொது விநியோகத் திட்டத்திலே இந்தியாவிலேயே முதல் மாநிலமாக நம்முடைய மாநிலம் திகழ்கிறது. இங்கே மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்குகிற திட்டத்தை உத்தரப் பிரதேச மாநிலத்தில் நடைமுறைப்படுத்துவது எப்படி என்று யோசிக்கிறார்கள். அம்மா தந்த மிதி வண்டித் திட்டத்தை மத்தியப் பிரதேசத்தில் நடைமுறைப்படுத்த முடியுமா என்று பார்க்கிறார்கள். அம்மா அறிமுகப்படுத்திய அம்மா உணவகத் திட்டத்தை ராஜஸ்தான் மாநிலத்திலிருந்து இங்கே வந்து பார்த்துவிட்டுப் போகிறார்கள். பக்கத்திலே இருக்கிற கர்நாடகாவிலே நடைபெற்ற சட்டமன்றப் பொதுத் தேர்தலின்போது அளிக்கப்பட்ட தேர்தல் வாக்குறுதியிலே தமிழ்நாட்டிலே வழங்கப்பட்டதையெல்லாம் வழங்குவோம் என்று சொன்னார்கள்.

தொட்டில் குழந்தைத் திட்டத்தை உலகமே இன்றைக்கு பாராட்டுகிறது. பெண் சிசுக் கொலை அறவே ஒழிந்த மாநிலங்களிலே நம்முடைய மாநிலம் முன்னிலையில் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இங்கே தொடங்கப்பட்ட பெண்கள் காவல் நிலையம் பாகிஸ்தானிலும் ஏற்படுத்தப்படுவதற்கு முன்னுதாரணமாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பாகிஸ்தான் அதிபர் இதைப் பின்பற்றுகிறார். உத்தரப் பிரதேசத்திலும், கர்நாடகத்திலும், மத்தியப் பிரதேசத்திலும், ராஜஸ்தானிலும், ஏன் டெல்லியில்கூட அம்மா அவர்கள் தொடங்கிய அம்மா உணவகத்திற்கு பெரிய வரவேற்பு உள்ளது. ஒரு வார காலத்தில் எத்தனை இலட்சம் இட்லிகள் விற்றதாகக் கணக்கு காட்டப்பட்டுள்ளது தெரியுமா! (மேசையைத் தட்டும் ஒலி) டெல்லி தமிழ்நாடு இல்லத்திலே தொடங்கப்பட்ட நம்முடைய அம்மா உணவகத்திலே உணவு உண்பதற்கு வட இந்தியாவிலே இருக்கிறவர்கள் எல்லாம் இன்றைக்கு டெல்லி, தமிழ்நாடு இல்லத்தை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்கள். பொது விநியோகத் திட்டத்தின்கீழ் அம்மா ஆரம்பித்த விலையில்லா அரிசி வழங்கும் திட்டம் இந்தியாவுக்கே வழிகாட்டுகிற திட்டமாக இருக்கிறது. அம்மா அவர்கள் ஆரம்பித்த விலையில்லா அரிசி வழங்கும் திட்டம், இன்றைக்கு மத்திய அரசினுடைய உணவுப் பாதுகாப்புக் கொள்கையாக மலர்ந்து விரிவாக்கம் செய்யப்பட்டு இருக்கிறது. இந்தியாவுக்கே திட்டம் தருகிற சிறப்பு (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு நம்முடைய முதலமைச்சருக்கு இருக்கிறது.

[முனைவர் செ.கு. தமிழரசன்] *[2014 பிப்ரவரி 1*

*மேதகு ஆளுநர் உரையிலே என்ன இல்லை? வேலைவாய்ப்பில் புதிய முயற்சியை மேற்கொள்வதற்காக இணையதளத்தைத் தொடங்குவோம், அதன்மூலம் பல இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவோம் என்று ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருப்பது ஒரு புதிய முயற்சி இல்லையா? ஒடுக்கப்பட்ட மக்களுடைய உயர் கல்விக்காக கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 600 கோடி ரூபாய் கூடுதலாக ஒதுக்கியிருக்கிறார்களே, இது ஒடுக்கப்பட்ட மக்களுடைய நலனிலே அக்கறை உள்ளவர்களுடைய கண்களுக்குத் தெரியவில்லையா?*

*வட சென்னை என்றாலே ஒதுக்கப்படுகிற ஒரு பகுதி என்கிற நிலைமையை மாற்றியமைப்பதற்காக, வட சென்னையையும் வளரச் செய்கிற முயற்சிக்கு வித்திடுவதற்காக மெட்ரோ இரயில் திட்டத்தை வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர் வரை நீட்டிக்க நாங்கள் மத்திய அரசிடம் போராடி பெற்றுத் தருவோம் என்று சொல்லியிருக்கிறார்களே, இது ஒரு புதிய முயற்சியாகத் தெரியவில்லையா, இதையெல்லாம் புதிய முயற்சி என்று சொல்லிவிட முடியாதா?*

*முற்பகல் 11–45*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு மத நல்லிணக்கம், சமூக நல்லிணக்கம், தொழில் அமைதி இவையெல்லாம் நிலைத்து நிற்கின்ற, தழைத்து ஓங்குகின்ற, ஒரு கட்டுக்குள் இருக்கின்ற, அம்மா அவர்களின் சுண்டு விரலுக்குக் கட்டுப்பட்டு இருக்கின்ற ஒரு மாநிலமாக இந்த மாநிலம் இருக்கிறதே! (மேசையைத் தட்டும் ஒலி) ஆந்திராவைப்போல, அன்றாடம் வெளியில் போனவன் திரும்பி வர முடியுமா என்கிற பிரச்சினையா, பீகாரைப்போல, ஒரு பெட்டியோடு போனவன் திரும்பி வர முடியுமா என்கிற ஓர் அவலமா. பிற மாநிலங்களைப்போல தீவிரவாதமோ, வன்முறையோ, இன வேறுபாடோ, மத மோதல்களோ இவையெல்லாம் நிகழ்ந்துகொண்டிருக்கிற ஒரு மாநிலமாகவா இந்த மாநிலம் இருக்கிறது? ஒரு சின்ன பொறி விழுந்தால், அந்தப் பொறி காட்சி அளிப்பதற்கு முன்பாகவே அதை அப்படியே அழுத்தி, அது இருந்த இடம் தெரியாமல், அதன் சுவடு தெரியாமல், அடக்கி வைக்கின்ற ஆற்றல் பெற்ற ஓர் ஆளுமை யாரிடம் இருக்கிறது? (மேசையைத் தட்டும் ஒலி) எவ்வளவு பேர் முயற்சித்தார்கள், எவ்வளவு பேர் இதிலே முனைப்புக்*



*2014 பிப்ரவரி 1]* [முனைவர் செ.கு. தமிழரசன்]

*காட்டினார்கள், வேரோடும் வேரடி மண்ணோடும் அழித்து அமைதியை நிலைநாட்டிக் கொண்டிருக்கிற ஓர் ஆட்சி நிலவுகிற ஒரு மாநிலமாக நம்முடைய மாநிலம் இருந்து கொண்டிருக்கிறதே! ஆகவே, இதையெல்லாம் பாராட்ட வேண்டும். கடந்த மூன்று ஆண்டு காலம் நிறைவேற்றப்பட்ட முத்தான திட்டங்களெல்லாம் ஏழையெளிய அடித்தளத்து, ஒடுக்கப்பட்ட, நலிந்த மக்களுக்கு நாள்தோறும் மேலும் கிடைப்பதற்கு, இந்த ஆளுநர் உரையிலே பல்வேறு கூறுகள் இருக்கின்றன என்பதை நான் பாராட்டியாக வேண்டும்.*

*குடியரசுத் தலைவர் அவர்கள் தன்னுடைய குடியரசு தின விழாவில் ஆற்றிய உரையிலேயே எவ்வளவு முரண்பாடுகளை எடுத்துரைத்திருக்கிறார்கள் என்பதை இந்த நாடு அறியும். நாம் குடியரசு நாடாகி 63 ஆண்டுகளைக் கடந்து இருக்கிறோம். குடியரசுச் சட்டம் மலர்ந்தபோது அரசியல் சட்டத் தந்தை பாபாசாகிப் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் ஒரு வரியைச் சொன்னார்கள், "நாடு குடியரசாக ஆகியிருக்கிறது, சுதந்திர குடியரசாய் மலர்ந்திருக்கிறது, குடியரசுத் தலைவரிலிருந்து சாதாரண கடைசி குடிமகன் வரையிலே ஒருவனுக்கு ஒரு வாக்கு என்கிற அதிகாரத்தை நாம் அளித்திருக்கிறோம். இந்த வாக்கு என்கிற உரிமையைத் தந்திருக்கிறோம், இது பெருமை. ஆனால், என்றைக்கு ஒரு மனிதனுக்கு ஒரு மதிப்பு என்கிற நிலைமை உருவாகிறதோ அப்போதுதான் முழுமையான சுதந்திர நாடாக இது மலரும்." ஒருவனுக்கு ஒரு வாக்கு என்பது அல்ல, ஒருவனுக்கு ஒரு மதிப்பு. அந்த மதிப்பை உருவாக்குகின்றவகையிலே "விஷன் 2023" என்று ஒரு நீண்டகால திட்டத்தைப்போட்டு, தனி நபர் வருமானத்தை தமிழ்நாட்டிலே பத்து மடங்கு உயர்த்திக் காட்டுவேன் என்று சபதமேற்று, (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக தன்னை முழுமையாய் அர்ப்பணித்து, செயலாற்றி வருகின்ற ஒரு தலைமை இன்று தமிழகத்திலே போற்றுதலுக்குரிய புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமை. அதற்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து, தமிழ் மண்ணை இந்தியாவின் முதல் மாநிலமாய், உலகத்தின் முதல் மாநிலமாய், ஒரு வழிகாட்டி மாநிலமாய் உருவாக்கிக் காட்டுவேன் என்று சபதமேற்று உழைத்து, அதிலே படிப்படியாக உயர்ந்து கொண்டிருக்கிறோமே, முன்னேறிக் கொண்டிருக்கிறோமே இவையெல்லாம் மகிழ்ச்சி நிறைந்த நடவடிக்கை இல்லையா, பாராட்டத்தக்க நடவடிக்கைகள் இல்லையா?*

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2014 பிப்ரவரி 1

நான் இந்தச் சந்தர்ப்பத்திலே ஒருசில செய்திகளை மாண்புமிகு அம்மா அவர்களின் பார்வைக்குக் கொண்டு போவதாலே, இந்தப் பிரச்சினைகளுக்கெல்லாம் ஒரு தீர்வு காணப்படும் என்பதால் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சமூக நிதிக்கு இன்றைக்கு பங்கம் ஏற்பட்டிருக்கிறது. மருத்துவமனைகளிலே உயர் பதவிகளில் இடஒதுக்கீடு இல்லை. ஆசிரியர் தேர்வு வாரியத்திலே ஒடுக்கப்பட்ட மக்களுக்கு, மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு பங்கம் விளைந்திருக்கிறது. அதிலே உரிய இடஒதுக்கீடு கிடைக்கவில்லை என்றெல்லாம் வேறுசிலர் வீராப்புப் பேசுகிறார்கள். அந்த வீராப்புக் கதைகளுக்கெல்லாம் சமூக நீதி காத்த வீராங்கனை, அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) 69 சதவிகித இடஒதுக்கீட்டுக்காக அரசியல் பாதுகாப்பு எப்படி முடியும் என்று கேட்டவர்கள், ஏளனம் பேசியவர்கள், இந்தச் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றிவிட்டால் மட்டும் இது நிறைவேறிவிடுமா, சட்டமன்றத்திற்கு அதிகாரம் இருக்கிறதா என்றெல்லாம் ஏளனம் பேசியவர்கள், ஏகடம் பேசியவர்கள் மத்தியிலே, நாடாளுமன்றத்திலே அரசியல் சட்டத்திலே அதற்குப் பாதுகாப்பை ஏற்படுத்தித் தந்து சாதனை புரிந்தவர் நம்முடைய சமூக நீதி காத்த வீராங்கனை புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதைச் செய்தும் காட்டினார்கள். 69 சதவிகித இடஒதுக்கீடு இன்று அமல்படுத்தப்பட்டு வருகிறது. 15 ஆண்டுகளுக்கு மேலாக பங்கம் இல்லாமல், குறையில்லாமல் நிறைவேற்றப்பட்டு வருகிறது. வேறு எந்த மாநிலத்திலும் நிறைவேற்றப்படவில்லை. கர்நாடகத்திலே எத்தனை நீதிமன்ற வழக்குகள் தீர்ப்பு கிடைத்த பின்னால்கூட முடியவில்லையே. ஆனால், இங்கே நிறைவேற்றப்பட்டு வருகிறது. சாதி என்பதை நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தம்முடைய சிந்தையிலேகூட நினைத்திருக்க மாட்டார்கள். சிந்தையிலேகூட இப்படி ஒரு சாதிய உணர்வு, சாதி என்றால் achieve என்கிற அந்த ஆங்கிலப் பொருள் வேண்டுமானால் அம்மாவிற்குத் தெரியுமே தவிர, சாதி என்றால் caste என்பதை அவர்கள் கனவிலேகூட, சிந்தையிலேகூட நினைத்திருக்க மாட்டார்கள்.

முற்பகல் 11—50

ஆசிரியர் தேர்வு பிரச்சினையிலே சமூக நீதி மறுக்கப்பட்டுவிட்டது. தத்தளிக்கிறவனுக்கு ஏதாவது ஒரு துரும்பு கிடைக்காதா என்று ஏங்கிய நேரத்தில் தேர்ச்சி பெற்றாலே போதும் என்று அறிவித்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். மற்ற மாநிலங்களிலெல்லாம் ஆசிரியர் பயிற்சி பெற வேண்டுமானால், குறைந்தபட்சம் 50 மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும். ஆனால், தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே, தேர்ச்சி பெற்றாலே அவர்கள் ஆசிரியர் பயிற்சிக்குப் போகலாம் என்கிற அளவிற்கு முழு மதிப்பெண் தகுதியை இரத்து செய்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், ஆசிரியர் பயிற்சிக்குப் போக வேண்டுமானால், அதற்கு பிற மாநிலங்களைப்போல 50 மதிப்பெண்கள் தேவையில்லை. அதைப்போலவே, பொறியியல் கல்லூரிகளிலே தாழ்த்தப்பட்ட மாணவர்கள் சேர வேண்டுமென்று சொன்னால், தேர்ச்சியடைந்திருந்தால் போதும். 35 மதிப்பெண்கள் பெற்று, தேர்ச்சி பெற்றிருந்தாலே அவர்கள் பொறியியல் கல்லூரிகளிலே பயிலலாம், அறிவைப் பெறலாம் என்று அதற்காக வழிவகுத்தவர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.



2014 பிப்ரவரி 1] [முனைவர் செ.கு. தமிழரசன்]

கடந்த சில மாதங்களுக்கு முன்னால் செங்கல்பட்டிலிருந்து சரவணன் என்ற ஒரு மாணவன், ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த மாணவன் அவன். இலண்டனுக்குப் போய் மேல் படிப்பு படிக்க வேண்டும். ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொள்ள வேண்டும். அதற்கு அவனுக்கு ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய் தேவைப்பட்டது. இதிலே நடைமுறை சிக்கல்கள் உருவானது. இங்கேயிருக்கிற பொதுவுடைமை கட்சித் தோழர்களும், என்னைப் போன்றவர்களும் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடம் கோரிக்கை மனு தந்தபோது, ஒரு தனிப்பட்ட ஆதி திராவிட மாணவனுக்கு, இலண்டனுக்குப் போய் உயர் கல்வி படிப்பதற்கு, இதுவரையிலே தமிழக வரலாற்றிலேயே (மேசையைத் தட்டும் ஒலி) இல்லாத அளவிற்கு ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாயை ஈன்றளித்த பெருமை நம்முடைய தமிழக முதலமைச்சரையே சாரும். ஒரு கோடியே 20 இலட்சம் ரூபாய், எண்ணிப் பார்க்க முடியுமா? நினைத்துப் பார்க்க முடியுமா? கனவிலேகூட நினைக்க முடியுமா? ஒரு கோடியே 20 இலட்சத்தை பார்த்திருப்பானா அவனுடைய வாழ்நாளிலே. அப்படி ஈன்றளித்த பெருமை நம் அம்மா அவர்களுக்கு உண்டு. ஆசிரியர் தகுதித் தேர்விலே தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு மதிப்பெண்ணிலே விலக்குத் தர வேண்டுமென்கிற ஒரு கோரிக்கைமுன் வைக்கப்பட்டது. இதை அரசியலாக்க வேண்டுமென்று பலர் வெளியே அரங்கங்களிலே முயற்சித்து வருகிறார்கள்.

நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பொறுத்தவரையிலே, ஒடுக்கப்பட்ட மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் உயர் கல்வி பெறுவதில், இந்த மாநிலத்தை முன்னுதாரணமாக ஆக்குவதிலே அவர்கள் முதல் இடத்தில் இருப்பவர்கள் என்பதற்கு ஒரு சான்று, பொறியியல் கல்லூரிகளிலோ, தொழில் கல்லூரிகளிலோ, மருத்துவக் கல்லூரிகளிலோ, குறைந்தபட்சம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரிகளிலோ அல்லது நர்சிங் படிக்கிற செவிலியர் கல்லூரிகளிலோ எந்தக் கல்லூரியானாலும் தனியார் துறையில் இருக்கிற கல்லூரிகளிலேகூட, நிருவாகப் பிரிவிலேபோய் சேர்ந்தால்கூட, அந்த மாணவர்களுடைய கல்விக் கட்டணத்தை அரசே ஏற்றுக்கொள்ளும் என்று கடந்த ஆண்டு அறிவித்து, அதற்காக 80 கோடி ரூபாய் வரையிலே (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செலவழித்திருக்கிறார்கள். இப்போதும்கூட நம்முடைய கொள்கை, அரசினுடைய கொள்கை, அது அல்ல. பாரதியார் பல்கலைக்கழகத்தில் ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு மதிப்பெண் குறைவோடுதான் இடஒதுக்கீடு வழங்கப்படுகிறது.

ஆசிரியர் தகுதி கல்வி வாரியத்திலும் இதையே வற்புறுத்துகிறார்கள். இதிலே சில ஒடுக்கப்பட்ட மக்களைப் பொறுத்தவரையிலே, மிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், சீர் மரபினர், இஸ்லாமிய 5 சதவிகித இடஒதுக்கீடு உள்ளவர்கள் இவர்களிலே சில பற்றாக்குறைகள், பின்னடைவுகள் உருவாகியிருக்கின்றன. இது ஒரு பொதுப் பிரச்சினை. இந்த பின்னடைவுகளை அடைக்கிற வகையிலே, முதல் முறை தேர்வு நடத்தியபோது ஆறு இலட்சம் பேர் எழுதியதிலே 2 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள்தான் தேர்ச்சி பெற்றார்கள் என்றால் ஒரு சதவீதத்திற்குகூட இல்லை. ஆக உயர் கல்வியின் தரம் உயர்த்தப்பட வேண்டுமென்கிற உணர்வு நிரம்பிய நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், நிச்சயமாக இதற்கும் ஒரு தகுந்த வழியை உருவாக்குவார்கள் என்கிற நம்பிக்கையோடு இதனை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுசெல்கிறேன்.

*முற்பகல் 11–55*

நேரம் அதிகம் இல்லாத காரணத்தாலே, ஒன்றே ஒன்றை மட்டும் இங்கே குறிப்பிட்டுக்காட்டி, எனது உரையை நிறைவு





செய்கிறேன். ஆளுநர் உரையிலே ஒன்றுமேயில்லை, ஒன்றுமேயில்லை என்று வெளியே வாய் கிழியக் கூச்சலிடுகிறவர்களுக்கு நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். ஒரு நல்ல விருந்து படைப்பவர்கள், அந்த விருந்தில் முதலிலே மோர் தருவார்கள் அல்லது பழரசம் தருவார்கள், வேறு சிலர் இளநீர் தருவார்கள், இப்போதெல்லாம் ஆங்கிலேயர்கள் பாணியிலே 'சூப்'–கூடத் தருகிறார்கள். ஆத்திரக்காரர்கள், ஆஹா, இதில் ஒன்றுமேயில்லையா, ஒன்றுமேயில்லையா என்று அங்கலாய்த்துக் கொண்டிருந்தால், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தரும் விருந்து, வருகிற நிதிநிலை அறிக்கையிலே வரும், அடுத்துவரும் கூட்டத் தொடரிலே வரும். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த விருந்திலே 63 சுவை அல்ல, 6,000 சுவைகள் வரும், வரும், வரும். அப்போது நீங்கள் வயிறுமுட்டி, வாயைத் திறப்பதற்குக்கூட முடியாமல் இருப்பீர்கள். அதுவும் வரும், வரும் என்ற என்னுடைய வாழ்த்துகளோடு, தமிழகம் பெறுகிற இந்த நலத் திட்டங்கள் இந்தியத் துணைக் கண்டம் பெறவேண்டும்; அந்த நாள் வரவேண்டும்; அந்த நாள் வரவேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற என்னுடைய வாழ்த்துகளோடு, வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் குறிப்பிடுகிறபோது, இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுடைய விலையில்லா அரிசி திட்டம்தான் மத்திய அரசின் உணவுப் பாதுகாப்புத் திட்டம் என்று சொன்னார்கள். மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், முதல் கையெழுத்தில், ஒரே கையெழுத்தில் தமிழகத்தில் இருக்கும் ஒரு கோடியே 85 இலட்சம் குடும்பங்களின் பசியைப் போக்கிய தலைவி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், இன்றைக்கு மத்திய அரசு கொண்டு வந்திருக்கிற உணவுப் பாதுகாப்புத் திட்டம், நகர்ப்புறங்களில் உள்ள 50 சதவிகித மக்களும், கிராமப்புறங்களில் உள்ள 75 சதவிகித மக்களும் பயன்பெறுகிற அளவிலேதான்

[திரு. இரா. காமராஜ்] *[2014 பிப்ரவரி 1*

கொண்டுவரப்பட்டிருக்கிறது. இன்னும் அதிலே கூடுதலான தகவல் என்னவென்று சொன்னால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விலையில்லாத அரிசியைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு, உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் அரிசியின் விலை மூன்று ரூபாய் என்ற அளவிலும், கோதுமையின் விலை இரண்டு ரூபாய் என்ற அளவிலும், பிற தானியங்களின் விலை ஒரு ரூபாய் என்ற அளவிலும்தான் கொடுக்கிறது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

*__திரு. பி.வி. கதிரவன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு எங்களது அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி நன்றி தெரிவித்துக்கொள்கிறது. மேதகு கவர்னர் அவர்கள், தனது உரையில் இங்கே மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் குறிப்பிட்டுச் சொல்லும்பொழுது, மூன்று ஆண்டு காலமாகப் பொறுப்பேற்று அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சித் திட்டங்களை, தொலைநோக்குப் பார்வைகொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொண்டுவந்ததன் காரணமாகத்தான், இது சாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். உண்மையிலேயே அவருடைய திறமையை, அவர்களுடைய நினைப்பை எப்படி பூர்த்தி செய்திருக்கிறார் என்ற எண்ணத்தோடு கவர்னர் உரையைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்த காலத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி ஆரம்பித்த காலத்தில், தமிழக மக்களுக்கு மின்வெட்டு எவ்வளவு பிரச்சினைக்குரியதாக இருந்தது; ஒவ்வொரு மணி நேரமும் எவ்வளவு சிரமப்பட்டார்கள் என்பது தமிழக மக்களுக்குத் தெரியும். மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன், இந்த ஆட்சிக்கு அது ஒரு மிகப்பெரிய



*2014 பிப்ரவரி 1]* [திரு. பி.வி. கதிரவன்]

சவாலாக இருந்தது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்கள் '2013—ல் நிச்சயமாக மின் தட்டுப்பாடு இல்லாத மாநிலமாக தமிழகத்தை மாற்றுவேன்' என்ற உறுதிமொழியை இந்தச் சட்டமன்றத்தில் கொடுத்தார்கள். அதேபோன்று, 2013 ஆம் ஆண்டு இறுதிக்கட்டத்திலே, இப்போது ஜனவரி 2014 நடந்து கொண்டிருக்கிறது. தமிழகத்தை மின் தட்டுப்பாடு இல்லாத மாநிலமாக மாற்றிய பெருமை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சேரும் என்பதை இந்த நேரத்தில் நான் பெருமையோடு சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த நிதியாண்டில் பருவமழை பொய்த்து, தஞ்சை டெல்டா பகுதிகளிலே விவசாயிகள் பெரிதும் பாதித்திருந்த காலத்தில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் டெல்டா பகுதி விவசாயிகளுக்குமட்டுமல்லாது, தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து விவசாயிகளுக்கும் நிவாரணம் கொடுக்கின்ற வகையிலே, 1,614 கோடி ரூபாயை விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கொடுத்த பெருமை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவைச் சாரும் என்பதை நான் பெருமையோடு இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*நண்பகல் 12—00*

இலங்கைத் தமிழர்கள், நம்முடைய தொப்புள்கொடி உறவுகள், திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில், 2009 இல் கொத்துக்கொத்தாக செத்துக் கொண்டிருந்தபோது, மாநில அரசும் மத்தியிலே ஆண்டு கொண்டிருந்த காங்கிரஸ் அரசும் இதையெல்லாம் கண்டுகொள்ளாமல் விட்டுவிட்டார்கள். ஆனால், மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன், இலங்கை அதிபர் இராஜபக்சேவை போர்க் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட நான்கு தீர்மானங்களை இந்தச் சட்டமன்றத்திலே நிறைவேற்றி, உலகம் முழுவதும் இருக்கும் தமிழ் மக்கள் என்ன செய்ய நினைத்தார்களோ அதை நிறைவேற்றிய பெருமை, மாண்புமிகு முதல்வர் அவர்களைச் சாரும் என்பதை இந்த நேரத்திலே பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழக மீனவர்கள், இலங்கைக் கடற்படையினரால் ஒவ்வொரு முறையும் தாக்கப்படுவதாக வரும் வேதனைக்குரிய செய்திகளை தினமும் பத்திரிகைகளில் பார்த்துக் கொண்டிருக்கிறோம். தமிழக

[திரு. பி.வி. கதிரவன்] [2014 பிப்ரவரி 1

முதல்வர் அவர்கள் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையிடமிருந்து காப்பாற்ற வேண்டுமென்று நம்முடைய பிரதமருக்கு பலமுறை கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதன்முடிவாக, இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 295 மீனவர்களையும், 45 விசைப் படகுகளையும் மீட்டுத் தந்த பெருமை, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களையே சாரும் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்றைக்குக்கூட, பிரதமருக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். இன்று 38 மீனவர்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். 6 விசைப் படகுகள் பறிக்கப்பட்டிருக்கின்றன. அதை உடனே பெற்றுத்தர வேண்டுமென்று, மாண்புமிகு பிரதமருக்கு முதல்வர் அவர்கள் கடிதம் எழுதி, தமிழக மீனவர்களைக் காப்பாற்றுகின்ற வகையிலே, அவர்களை மீட்பதற்கான சிறந்த நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுமட்டுமல்ல, கச்சத் தீவை மீண்டும் தமிழகத்துக்கு மீட்டுத் தர வேண்டுமென்பதில் அக்கறையோடு செயல்பட்டு வருகிறார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமே உச்ச நீதிமன்றத்தில் ஆஜராகி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தை உச்ச நீதிமன்றத்தில் உள்ள வழக்கில் ஒரு பார்ட்டியாகச் சேர்த்திருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன், தமிழக அரசும் அந்த வழக்கிலே வாதாடி, மீண்டும் கச்சத் தீவை பெறுவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்டு வருவதை நான் இந்த நேரத்திலே பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உலகளவில் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்துள்ளது. உலகப் பங்குச் சந்தையில் ஸ்திரத்தன்மையில்லாத நிலையிலும், தமிழகத்தை பொருளாதார ரீதியாக புத்துயிரூட்டும் வகையிலே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய கூர்ந்த மதிநுட்பத்தால் இந்த ஆண்டுக்கு மட்டும் 42 ஆயிரத்து 185 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அதாவது, தமிழகம் முன்னிலையில் இருக்க வேண்டுமென்று, கடந்த ஆண்டைக் காட்டிலும் 5 ஆயிரம் கோடிக்குமேலாக ஒதுக்கி, திட்டங்களைத் தீட்டியிருப்பதற்காக நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.



2014 பிப்ரவரி 1] [திரு. பி.வி. கதிரவன்]

மாண்புமிகு முதல்வர் அவர்கள், 'தொலைநோக்குத் திட்டம் 2023'—ஐத் தீட்டி, இந்தியாவிலேயே தமிழகம் முதல் மாநிலமாக வர வேண்டுமென்று, அதற்கான நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் 217 முன்னுரிமை கட்டமைப்புத் திட்டங்களை செயல்படுத்துகின்ற வகையிலே, தொலைநோக்குத் திட்டம் 2023 இல் வழிவகை செய்துள்ளதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த தி.மு.க. ஆட்சிக்காலத்திலே, கல்வி ரீதியாக, பொருளாதார ரீதியாக, சமூக ரீதியாக பின்தங்கியிருக்கிற சீர் மரபின மக்களுக்கென வாரியம் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு போராட்டத்தை ஆரம்பித்தார்கள். அந்தப் போராட்டம் நடப்பதற்கு முதல் நாளே, தி.மு.க. ஆட்சியாளர்கள், சீர் மரபினர் நல வாரியத்தை பெயரளவிலே ஆரம்பித்தார்கள். ஆனால், அதில் எந்த புதிய நோக்கமும், புதிய திட்டமும் இல்லை. சீர் மரபினர் நல வாரியத்தில் நல்ல புதிய திட்டங்களைக் கொண்டு வர வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களை இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12—05

சீர் மரபினர் குற்றப் பரம்பரை சட்டத்தில் இருந்து வந்தவர்கள். 1914 ஆம் ஆண்டு இந்தக் குற்றப் பரம்பரை சட்டம் சீர் மரபின மக்கள் மீது பாய்ந்தது. நாம் 2014 ஆம் ஆண்டில் இருக்கிறோம். 100 ஆண்டுக்காலம், 50 ஆண்டுக்காலம் குற்றப் பரம்பரை சட்டத்தினால் அவர்கள் பாதிக்கப்பட்டார்கள். விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமென்று 100—வது ஆண்டு விழாவினை சீர் மரபினர் சார்பில் நடத்த இருக்கிறார்கள். ஒரு காலத்திலே சீர் மரபினர் Denotified Tribes என்று அழைக்கப்பட்டனர். 1979 ஆம் ஆண்டு வரை Denotified Tribes என்று வகைப்படுத்தி, கல்வி ரீதியாக, பொருளாதார ரீதியாக, சமூக ரீதியாக அவர்களை முன்னேற்ற வேண்டுமென்பதற்காக பல சலுகைகள் வழங்கப்பட்டு, அவர்கள் நலனுக்காக நிறைய நலத் திட்டங்கள் இருந்தன. ஆனால், 1979 ஆம் ஆண்டு அந்தத் திட்டங்கள் மறுக்கப்பட்டு Denotified Community ஆக மாற்றப்பட்டது. அதனால் அவர்கள் பலமுறை அரசுக்குக் கோரிக்கை வைத்து வருகிறார்கள். வருகிற பட்ஜெட் தொடரிலே இந்த Denotified Community—ஐ Denotified Tribe—ஆக

மாற்றுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

விளையாட்டுத் துறையிலே மாண்புமிகு முதல்வர் அவர்கள் புரட்சியை செய்து கொண்டிருக்கிறார்கள். உலக சதுரங்கப் போட்டியைத் தமிழகத்தில் நடத்தி பெருமை சேர்த்திருக்கிறார்கள். கிராமங்கள்தோறும் விளையாட்டுப் போட்டிகளை நடத்த வேண்டுமென்று, ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் பணம் ஒதுக்கி, இளைஞர்களை நல்ல உறுதியான மனதோடு வாழ வைக்க வேண்டுமென்று நல்ல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, உலகக் கபடிப் போட்டியை தமிழகத்தில் நடத்துவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருப்பதற்கு, நான் கபடிக் கழகத்தில் உறுப்பினராக இருப்பதால் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அருமையான திட்டம், பசுமை வீடுகள் திட்டம். இத்திட்டத்தின்கீழ், மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூ.1,80,000 ஒதுக்கியிருந்தார்கள். தற்போது விலைவாசி உயர்ந்துள்ளதால் ரூ.2,10,000 என உயர்த்தியிருக்கிறார்கள். இதுவரை 1,80,000 வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. 1,20,000 வீடுகள் இரண்டாண்டு காலங்களில் கட்டுவதற்கு முனைப்போடு இருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்திரா வீடு கட்டும் திட்டத்திற்கு ரூ.1,00,000 என்று இருந்ததை, ரூ.1,20,000 ஆக மாண்புமிகு முதல்வர் அவர்கள் உயர்த்திக் கொடுத்ததை பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேநேரத்தில் அந்த வீடுகளைக் கட்டுவதற்குத் தேவையான கட்டுமானப் பொருட்களான செங்கல், மணல் போன்றவை கிடைப்பதில் தட்டுப்பாடு இருக்கின்றது. கிராமங்களில் செங்கல் சூளைகளை ஏற்படுத்தி வருகிறார்கள். அந்த செங்கல் சூளைகளை ஏற்படுத்துவதிலே அங்கே பல கட்டுப்பாடுகளை விதிக்கிறார்கள். கனிமவளத் துறையிலிருந்து அனுமதி வாங்க வேண்டுமென்ற கட்டுப்பாட்டை விதிக்கிறார்கள். அதாவது, கிரானைட் கற்களை வியாபாரம் செய்வதில் எப்படி சட்டங்கள் இருக்கின்றனவோ, அதேபோல செங்கல் சூளையை நடத்துவதற்கும் சட்டங்கள் இருக்கின்றன. அதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிசீலனை





செய்து, விதிவிலக்கு அளிக்க வேண்டும். செங்கல் சூளையிலே பணிபுரிபவர்கள் இலட்சக்கணக்கானவர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அனுமதி பெறுவதிலிருந்து விதி விலக்கு அளித்து, மீண்டும் செங்கல் சூளையை நடத்துவதற்கு அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் பாரதிய ஜனதா கட்சியினர் அவர்களுடைய திட்டங்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இந்த விளம்பரத்திற்காக 500 கோடி ரூபாய்க்கு ஜப்பான் கம்பெனியுடன் ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள். அதேபோன்று, நாங்கள் உங்களுக்கு சளைத்தவர்களா என்று காங்கிரஸ் கட்சியும் நாங்களும் 500 கோடி ரூபாய்க்கு ஜப்பான் நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு ஒப்பந்தம் போட்டிருக்கிறோம் என்று சொல்கிறார்கள். அதற்கெல்லாம் என்ன காரணம்? காங்கிரஸ் கட்சி 10 ஆண்டுகள் இந்தியாவை ஆண்டிருக்கிறது. ஆனால், 10 ஆண்டுக்காலத்தில் அவர்கள் செய்த சாதனைகள் மக்களுக்குத் தெரியவில்லை. அதைத் தெரிவிக்க வேண்டுமென்று இப்போது புதிய திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார்கள். அதேபோன்று, பாரதிய ஜனதா கட்சியினர் நாங்கள் வருங்காலத்தில் அந்தத் திட்டத்தைச் செய்வோம், இந்தத் திட்டத்தைச் செய்வோம் என்று நினைக்க முடியாத, நிறைவேற்ற முடியாத திட்டங்களையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் எந்த நினைப்பில் சொல்கிறார்கள்? மக்களோடு அவர்கள் இணைந்து பணியாற்றவில்லை என்பதனால் பிரச்சாரத்தை நம்பி இருக்கிறார்கள், விளம்பரத்தை நம்பி இருக்கிறார்கள். ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் நிச்சயமாக இந்த பாராளுமன்றத் தேர்தலில் எந்தப் பிரச்சாரமும் செய்யாமல் வெற்றி பெறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மக்கள் மத்தியில் இருக்கின்றன என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்றால், இன்று தமிழகத்தில் ஒவ்வொரு பகுதியாக மிக்சி, கிரைண்டர் கொடுக்கிறோம், மக்களை சந்திக்கிறோம்; ஆடுகள் கொடுக்கிறோம், மாடுகள் கொடுக்கிறோம், மக்களை சந்திக்கிறோம்.

பிற்பகல் 12—10

இங்கே வருவாய்த் துறையின்மூலம் அம்மா திட்டம் சிறப்பாக நடைபெறுகிறது. வருவாய்த் துறை அதிகாரிகள் ஒவ்வொரு

வெள்ளிக்கிழமையும் மக்களை நோக்கி கிராமங்களுக்குச் சென்று, அந்தப் பகுதி மக்களுக்குத் தேவையான சௌகரியத்தை, அவர்களுக்குத் தேவைப்படுகின்ற வீட்டுமனைப் பட்டாக்கள் மற்றும் அவர்களுக்குத் தேவையான Certificates வழங்கப்படுகிற திட்டம். இதுபோன்ற வசதிகளை அந்தப் பகுதியிலே உள்ள மக்களுக்கு செய்து கொடுக்கிறார்கள்.

அம்மா உணவுத் திட்டத்திற்கு இன்று தமிழகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் உள்ள மக்களிடமிருந்து வரவேற்பு கிடைத்திருக்கிறது. எல்லா மக்களும் வரவேற்கிற திட்டமாக, இன்னும் சொல்லப்போனால், வேறு மாநிலங்களிலும் எதிர்பார்க்கிற திட்டமாக, அம்மா திட்டம் அமைந்திருக்கிறது. அதுமட்டுமல்ல, மாணவர்களுக்கு 14 வகையான சலுகைகள் வழங்கப்படுகின்றன. தாய்மார்கள் அங்குபோய் அந்த மகனுக்காகவோ அல்லது மகளுக்காகவோ சலுகைகளை பெற்றுக் கொள்ளும்போது அந்த மக்களே இந்த அரசு என்ன உதவிகளைச் செய்கிறது என்பதை நேரடியாகத் தெரிந்துகொள்கிறார்கள்.

பசுமை காய்கறிகள் திட்டம் மற்றும் தாய்த் திட்டம். கிராமங்களில் அடிப்படை வசதிகளை நிறைவேற்றுகின்ற வகையிலே தாய்த் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதுபோன்ற திட்டங்களையெல்லாம், மாண்புமிகு முதல்வர் அவர்களின் அரசு இந்தப் புதிய திட்டங்களை, சிறந்த திட்டங்களை மக்களிடையே செல்கின்ற திட்டமாக அறிவித்து, அது மக்களுக்கு பயன்படக்கூடிய திட்டங்களாக இருப்பதால், நிச்சயமாக அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு விளம்பரம் தேவையில்லை. மக்களே அதைப் புரிந்துகொள்வார்கள்; மக்களே அவற்றைப் பற்றி தெரிந்திருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தமிழகத்தில் உள்ள மருத்துவமனைகளுக்கெல்லாம் நாங்கள் செல்கிறோம். இப்போது அரசு மருத்துவமனைகள் சுத்தமாகவும், சுகாதாரமானதாகவும் வைக்கப்பட்டிருக்கின்றன. அங்கே பணியாற்றும் மருத்துவ அதிகாரிகள், அதாவது டாக்டர்கள் அவர்களின் பணியைச் செவ்வனே செய்து வருகிறார்கள் என்பதை நான் பெருமையோடு இந்த நேரத்திலே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.





மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கிட்டத்தட்ட 5,84,584 பேருக்கு 1,285.85 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டு இருக்கிறது என்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதேபோன்று, என்னுடைய உசிலம்பட்டி தொகுதியில் உள்ள மருத்துவமனையை விரிவுபடுத்துவதற்காக நான்கரை கோடி ரூபாய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதி கொடுத்து பெருமைப்படுத்தி இருக்கிறார்கள் என்பதற்காக இந்த நேரத்திலே நன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பள்ளிக் கல்வித் துறைக்கு இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு கடந்த ஆண்டு 17,000 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், உண்மையிலேயே அதைப் பாராட்டுவது என்னுடைய கடமை. அதுமட்டுமல்ல, ஒருவன் உண்மையான முயற்சியை, உண்மையான நிலையை எடுத்துச் சொல்வதற்கு, உண்மையான வளர்ச்சி அடைவதற்கு கல்விதான் சிறந்ததாக இருக்கும் என்பதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் கிட்டத்தட்ட 17,000 கோடி ரூபாயை கல்வித் துறைக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, தனியார் பள்ளிகளைக் காட்டிலும் இன்று அரசுப் பள்ளிகள் மிகவும் சிறப்பாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. பள்ளிகளை சுத்தமாக வைத்திருக்கிறார்கள். நேர்த்தியாக வைத்திருக்கிறார்கள். கடைக்கோடியில் வாழ்கிறவர்களுக்கும் கல்வி கிடைக்க வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில், நல்ல திட்டங்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் கொண்டுவந்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். தனியார் பள்ளிகளைக் காட்டிலும் அரசுப் பள்ளிகள் சிறப்பாக நடைபெறுகின்றன.

பால் உற்பத்தித் துறை. பால் உற்பத்தித் துறையிலே இப்போதுகூட பால் உற்பத்தியாளர்களுக்கு ஒரு லிட்டருக்கு மூன்று ரூபாய் உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் Consumer–க்கு, அதைப் பருகுபவர்களுக்கு விலை உயர்த்தப்படவில்லை. அதற்குக் காரணம், உற்பத்தியாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள், சிரமப்படுகிறார்கள் என்பதால் பால் உற்பத்தியாளர்களுக்கு மட்டும் கொள்முதல் விலையை உயர்த்தியிருக்கிறார்கள். அதேநேரத்தில், பருகுபவர்களுக்கு உயர்த்தப்படவில்லை என்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பொது விநியோகத் திட்டம். உண்மையிலே பொது விநியோகத் திட்டம் இந்தியாவிலேயே தமிழகத்தில்தான் முறையாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு கோடியே 86 இலட்சம் குடும்ப அட்டைதாரர்கள் உண்மையிலேயே பயன்பெறுகிறார்கள். கடந்த தி.மு.க. ஆட்சிக்காலத்தில் அரிசி வாங்கும்போது சரியில்லாத அரிசி, சரியில்லாத பருப்பு என்று செய்திகள் வரும். ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசில் எங்கிருந்தாவது அப்படிப்பட்ட செய்தி வந்திருக்கிறதா? அதற்குக் காரணம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்தத் துறை சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்ற நல்ல சிந்தனையோடு, சிறப்பாகச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதெல்லாம் பாராட்டப்படக்கூடியது. அதுமட்டுமல்ல, இன்றைக்கு 4,900 கோடி ரூபாய் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை நான் பெருமையோடு பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். நமது ஆளுநர் அவர்களின் உரை உண்மையிலேயே பாராட்டக்கூடியது. தமிழக முதல்வர் அவர்கள், அவ்வளவு திட்டங்களையும் ஒவ்வொன்றையும் யோசித்து, இந்த மக்களுக்கு என்ன செய்ய வேண்டுமென்று யோசித்து, சிறப்பாகச் செய்து இருக்கின்றார்கள் என்பதை நான் பாராட்டி, வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 12—15

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள் பேசியபோது, "செங்கற்சூளை நடத்துவதற்கு சுற்றுச்சூழல் துறையிடமிருந்து அனுமதி பெற வேண்டும் என்ற நிலை இருப்பதால், அத்தொழில் பாதிக்கப்படுகிறது" என்று கூறினார். அது மாநில அரசால் உருவாக்கப்பட்டது அல்ல; உச்ச நீதிமன்ற ஆணை என்று கடந்த சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடரின்போதே கூறியிருக்கின்றேன். ஒரு எக்டேர் அளவிற்கு நிலம் எடுத்தாலும்கூட, மாநில சுற்றுச்சூழல் துறையிடமிருந்து அனுமதி பெற வேண்டும் என்று உச்ச நீதிமன்ற ஆணை இருக்கின்ற காரணத்தால், ஆணை பெற வேண்டியிருக்கின்றது. மத்திய அரசும் இதுகுறித்து சுற்றறிக்கை ஒன்று



அனுப்பியிருக்கின்றது. இருப்பினும், யார் யாரெல்லாம் மனுக்கள் கொடுக்கின்றார்களோ அந்த மனுக்களெல்லாம் உடனடியாக பரிசீலிக்கப்பட்டு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசினால் ஆணைகள் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, செங்கற்சூளை தொழிலை கிராமப் பகுதிகளில் இருப்பவர்கள் சிறு தொழிலாக நடத்தி, அதன் மூலமாக 10, 15 பேருக்கு வேலை கொடுத்து வருகிறார்கள். கிரானைட் கற்கள் தொழில் நடத்துவதற்கு உள்ள சட்டம் போன்று செங்கற்சூளை தொழிலுக்கும் வருகின்றது. அது, அகில இந்திய அளவில் கொண்டு வரப்பட்டுள்ளது; அதை மறுக்கவில்லை. எனினும், தமிழகத்தில் அதற்கு விதிவிலக்கு அளிக்கப்பட வேண்டும். ஏனெனில் குடிசைத் தொழில் பாதிக்கப்படுகிறது என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உச்ச நீதிமன்றத்தின் உத்தரவை நாம் மாற்ற முடியாது என்பது மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரியவில்லை என்று நினைக்கின்றேன். நீங்கள் சொல்வதைப்போல மேஜர் மினரல்ஸ்க்கு 5 எக்டேருக்கும் கீழே இருந்தால் அனுமதி தேவையில்லை என்று உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணை இருக்கின்றது. ஆனால், மைனர் மினரல்ஸ் என்று சொல்லக்கூடிய செங்கற்சூளையாக இருந்தாலும், மற்ற மண்ணாக இருந்தாலும் சுற்றுச்சூழல் துறையிடமிருந்து அனுமதி பெற்றுத்தான் அள்ள வேண்டும் என்று உச்ச நீதிமன்ற உத்தரவு இருக்கின்றது. ஆனால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் செங்கற்சூளை நடத்துவதற்காக யார் மனுவை கொடுக்கின்றாரோ, அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டு, உடனடியாக அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. மேலும், கடந்த காலத்தில், அதற்காக ஒரு இலட்சம் ரூபாய்

[திரு. பி. தங்கமணி] [2014 பிப்ரவரி 1

என்று இருந்ததை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இப்பொழுது 10,000 ரூபாய் என்று குறைத்து, அந்த மனுக்கள்மீது விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று ஆணையிட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 14—வது சட்டமன்றப் பேரவையின், 2014 ஆம் ஆண்டின் முதல் கூட்டத்தொடரில், தமிழக மக்களுக்கு புத்தாண்டு வாழ்த்துகளோடு, மேதகு ஆளுநர் அவர்கள் ஆற்றியிருக்கும் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு தங்களுக்கு முதற்கண் நன்றியினை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள், கடந்த 15—8—2013 அன்று நடைபெற்ற சுதந்திர தின விழாவின்போது, தலைமைச் செயலகக் கோட்டைக் கொத்தளத்தில் தேசியக் கொடியை ஏற்றி வைத்து, "தமிழகமே எனது குடும்பம், தமிழ்நாட்டு மக்களே என் பிள்ளைகள், தமிழக மக்களின் நலனே என் நலன்" என்று கூறினார்கள். அவர் சொல்லிய வார்த்தைகள் வெறும் வார்த்தைகளாக இல்லாமல், செயல் வடிவம் பெற்றிருக்கும் உண்மையின் உரை கல்லாக, ஆளுநர் உரையாக அமைந்திருக்கிறது என்றால், அது மிகையாகாது. (மேசையைத் தட்டும் ஒலி) தேர்தல் நேரத்தில் வாக்குகளைப் பெறுவதற்காக மட்டுமே வாக்குறுதிகளை அள்ளி வீசும் வழக்கமான அரசியலாக இல்லாமல் தினம் தினம், புதிது புதிதாய் மக்களுக்காக சிறந்த திட்டங்களை அறிவித்து, அவற்றையெல்லாம் முறையாக நடைமுறைப்படுத்தி, இந்தியாவிலேயே தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்கிட, தொலைநோக்குச் சிந்தனையோடு செயல்பட்டுக் கொண்டிருப்பவர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள். இந்த நல்லாட்சி நாளுக்குநாள் மெருகேறிக் கொண்டேயிருக்கின்றது; ஆண்டுக்காண்டு புதுப் பொலிவும், புதுமையும், புரட்சியும் கூடிக்கொண்டேயிருக்கின்றது. வடக்கு வாழ்கிறது; தெற்கு தேய்கின்றது என்ற நிலை மாறி, தெற்கையும் வாழ வைத்து, தெற்கிலிருந்து ஒரு சக்தி இந்த தேசம் முழுவதையும் வாழ வைக்கப்



2014 பிப்ரவரி 1] [திரு. ரா. சரத்குமார்]

போகிறது என்பதை உணர்த்திக் கொண்டிருக்கும் நல்லாட்சிதான் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி)

இன்று எனக்கு முன்பு பேசிய அன்புச் சகோதரர்கள் செ.கு. தமிழரசன் அவர்களும், பி.வி. கதிரவன் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களின் செயல்திறன், செயலாற்றல், தொலைநோக்குச் சிந்தனை ஆகியவற்றைப் பற்றியெல்லாம் எடுத்துரைத்தார்கள். இந்த ஆளுநர் உரை பற்றி பொதுவாகப் பேசுவதற்கு முன்பு, இந்த ஆளுநர் உரையில் என்ன இருக்கிறது என்று பத்திரிகை வாயிலாகவே அரசியல் நடத்திக் கொண்டு, இதில் என்ன இருக்கிறது, இவையெல்லாம் நாங்கள் ஏற்கெனவே அறிவித்த திட்டங்கள்தானே என்று ஒவ்வொரு முறையும் சொல்லிக் கொண்டிருக்கிறவர்கள், அதை முடித்து இருக்கிறார்களா அல்லது சொன்ன திட்டங்களெல்லாம் செயல்படுத்தப்பட்டிருக்கிறதா என்றால், அது இல்லை என்றுதான் பொருள். இது எப்படியிருக்கிறது என்றால், ஓட்டப்பந்தயத்தில் நாங்களும் கலந்து கொண்டோம் என்று சொல்வதைப் போல இருக்கிறது. ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஓட்டப்பந்தயத்தில் கலந்துகொண்டால், அதில் தங்கப் பதக்கத்தை வெல்கின்ற திட்டங்களைத்தான் அறிவித்து, செயல்படுத்துகிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரிய வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு திட்டத்தை ஏதோ வாக்குறுதியைப்போல கொடுத்துவிட்டு செல்ல முடியாது. அந்தத் திட்டத்திற்கான நிதி ஒதுக்கி, அதைச் செயல்படுத்தி, அது சிறப்பாக மக்களுக்குச் சென்றடையச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தை பதிவு செய்கின்ற ஒரு ஆட்சியாளர்தான் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12—20

ஆக, இங்கு என் அருகே இருக்கிற அன்புச் சகோதரர்கள்கூட அதைப் பற்றி கோபப்பட்டு கூறுகிறார்கள். எதற்காகக் கூறுகிறார்கள் என்று புரியவில்லை. தவறாக நினைத்துக்கொள்ள வேண்டாம். நல்லவை நடக்கும்போது அதை வரவேற்கத் தெரிய வேண்டும். ஒரு கூட்டணியில் இருந்துகொண்டு, சிறந்த ஆட்சி நடைபெற வேண்டுமென்பதற்காக, மக்களுக்காக வாக்குறுதிகள் கொடுத்து, மக்களுக்கு நாம் சிறந்த சேவை செய்ய வேண்டும். மக்களுக்குக்

[திரு. ரா. சரத்குமார்] [2014 பிப்ரவரி 1

கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டுமென்ற உறுதியோடு நாம் இங்கு வந்திருக்கிறோம். சட்டமன்றத்திற்கு வருவது, முதல் கடமை. இங்கே பார்த்தால் இருக்கைகள் எல்லாம் காலியாக இருக்கின்றன. மக்களின் கருத்துகளை இங்கே சொல்வதற்காகத்தான் உங்களுக்கு வாக்களித்து சட்டமன்றத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். ஆக, சட்டமன்றத்தில் நீங்கள் சோதனைகளை சந்திக்கலாம், வேதனைகளை சந்திக்கலாம். அதேநேரத்தில், எடுத்துரைக்க வேண்டியவற்றை எடுத்துரைத்து சாதிக்க வேண்டியது உங்கள் கடமை. அதை செய்யத் தவறிவிட்டார்கள், ஏனென்றால் அவர்களால் முடியாது. இயலாமைதான் காரணம். ஆகவே, இயலாமை இருக்கும்போது எதையும் இங்கு வந்து பேசுகின்ற தைரியம் அவர்களுக்குக் கிடையாது. ஏனென்றால், அவர்கள் தளபதி என்றெல்லாம் பெயர் வைத்துக்கொள்வார்கள். ஆனால், சாதிக்க வேண்டியவர்கள் இங்கு வந்து சாதிக்க வேண்டும். பத்திரிகையின் வாயிலாக அரசியல் நடத்துவது அவர்களின் கொள்கை. ஆகவே, அவர்கள் சொல்வது எதையும் நாம் எடுத்துக்கொள்ள வேண்டாம். காரணம், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சிறந்த ஆட்சி இங்கு நடந்து கொண்டிருப்பதை நாம் மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி)

இரண்டு ஆண்டு கால சாதனைகளை சில சமயம் நான் ஒவ்வொன்றாக நினைத்துப் பார்ப்பேன். நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உதகமண்டலத்திற்குச் சென்று, ஓய்வு எடுக்கிறார்கள் என்று சிலர் சொன்னாலும், நாம் அவர்கள் ஓய்வுதான் எடுக்கிறார்கள் என்று நினைத்தால் அது தவறு. தினமும் அமைச்சர்களை அழைத்து, என்ன செய்ய வேண்டும், (மேசையைத் தட்டும் ஒலி) எப்படி திட்டங்களைத் தீட்ட வேண்டும் என்று அங்கு சென்றும் அரசுப் பணிகளைத்தான் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆக, அல்லும், பகலும் மக்களுக்காகவே உழைத்துக் கொண்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நாம் பெற்றிருக்கிறோம் என்பதை பெருமையாகக் கருத வேண்டும். இப்படிப்பட்ட முதலமைச்சரை நாம் இழக்க வேண்டிய சூழ்நிலை இருந்துகொண்டிருக்கிறது. காரணம், அவர்கள் பாரதப் பிரதமராக அமரப் போகிறார்கள் என்ற பெருமை நமக்கு வரப்போகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நான் மக்களை சந்திக்கும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு சிறந்த ஒரு வரவேற்பு இருக்கிறது என்பதைக் காண



2014 பிப்ரவரி 1] [திரு. ரா. சரத்குமார்]

முடிகிறது. எதற்காக அவர்களுக்கு வரவேற்பு இருக்கிறதென்றால், அவர்கள் திட்டங்களைத் தீட்டுகிறார்கள், சொல்வதைச் செய்கிறார்கள், சொன்னதை மட்டும் செய்கிறார்கள். அரசியலுக்கு அப்பாற்பட்ட, சிறந்த, நிருவாகத் திறமைமிக்க முதலமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம் என்று மக்கள் மன்றத்திலே பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

மக்கள் ஆதரித்துவிட்டார்கள். ஆகவே, 40–ம் நமதே என்ற இலக்கை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அடைவார்கள் என்பது உறுதியாக இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதைத்தான் மேதகு ஆளுநர் அவர்கள் உரையில் சொல்லியிருக்கிறார்கள். எப்படிப்பட்ட திட்டங்கள் வகுக்கப்பட்டிருக்கின்றன; எப்படிப்பட்ட திட்டங்கள் செயல்படுத்தப்பட்டிருக்கின்றன; திட்டங்கள் எப்படி செயலாக்கப்படவிருக்கின்றன என்பதையெல்லாம் சிறப்பாக, தெள்ளத்தெளிவாக எடுத்துரைத்த பிறகும், புரியவில்லை என்றால், அரசியல் தெரியாதவர்களாக, மக்கள்மீது அக்கறை இல்லாதவர்களாகத்தான் எதிர்க்கட்சித் தோழர்களை நான் பார்க்கின்றேன். ஆக, சட்டமன்றத்திற்கு யாரும் வருவதில்லை. ஒருவரை கேட்டால், அவர்கள் கொறடா பேசும்போது, எங்கள் தலைமையில்தான் கூட்டணி என்று சொன்னார்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கூட்டணி தேவையில்லை. மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குக் கூட்டணி தேவையில்லை. அருகிலிருந்து தளபதிகள் வேலை செய்தால் போதும், 'நாற்பதும் நமதே' என்று வெற்றி பெறுகின்ற ஒரு நல்ல ஆட்சியைத் தருகின்ற முதலமைச்சரைப் பெற்றிருக்கின்ற காரணத்தினால், (மேசையைத் தட்டும் ஒலி) மக்கள் மன்றத்திற்குப் போகும்போது தானாகவே வாக்களித்துவிடுவார்கள் என்ற பெருமை உள்ள ஒரே முதலமைச்சர் இந்தியாவில் உண்டு என்றால், அது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பது உண்மை என்பதைச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆளுநர் உரையிலே, 2013–2014 ஆம் ஆண்டில் திட்டச் செலவுகளுக்காக ரூ.37,128 கோடி ஒதுக்கியிருந்ததை, 2014–2015 ஆம் ஆண்டில் ரூ.42,185 கோடியாக உயர்த்தியிருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. இது எதைச் சுட்டிக் காட்டுகிறதென்றால்,

[திரு. ரா. சரத்குமார்] [2014 பிப்ரவரி 1

திட்டங்களைத் தீட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும். அந்த நிதியை நாம் பெற வேண்டும். அந்த நிதியைப் பெற்ற பிறகு, தீட்டுகின்ற திட்டங்களை நாம் செயல்படுத்த வேண்டும். ஆக, நிதியை உயர்த்தும்போதே திட்டங்களைத் தீட்டியிருக்கிறார்கள். திட்டங்களைத் தீட்டியிருப்பது மக்களுக்காக என்பதை நாம் உணர வேண்டும். ஏதோ ஒரு குடும்பம் சிறப்பாக இருக்க வேண்டுமென்று தீட்டப்பட்ட திட்டங்கள் அல்ல. தமிழகத்திலுள்ள குடும்பங்கள் சிறப்பாக இருக்க வேண்டுமென்று தீட்டப்பட்ட திட்டங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே தான், ரூ.42,185 கோடி நிதி அதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

அடுத்து, அம்மா உணவகம்; அம்மா குடிநீர் திட்டம் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். வெளிமாநிலங்களுக்கு நான் சென்று வரும்போது அங்கே இருக்கிற அமைச்சர்கள் எல்லாம் அம்மா உணவகத்தில் போய் நாங்களும் சாப்பிட வேண்டுமென்று சொல்கிறார்கள். ஊருக்குப் போகும்போது எங்களையும் கூட்டிக்கொண்டு போங்கள் என்று சொல்கிறார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது? அம்மா உணவகத்தில் சிறந்த உணவு வழங்கப்படுகிறது. மலிவு விலையிலே, சிறந்த உணவு கொடுத்து அனைவரின் வயிற்றுப் பசியையும் போக்குகின்ற ஒரு தாயாகவே மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் திகழ்ந்து வருகிறார்கள் என்பது உண்மை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அப்படிப்பட்ட சிறந்த திட்டங்களைச் சிந்தித்து, செயல்படுத்தி, மக்களுக்கு என்ன தேவைப்படுகிறது, ஏழையெளிய மக்கள், ஏழை, பணக்காரர்கள் என்ற பாகுபாடுகளைக் களைந்து, வாழ்வாதாரத்திலும், பொருளாதாரத்திலும் தமிழக மக்கள் உயர வேண்டுமென்ற தூய எண்ணத்திலே திட்டங்களை வகுத்து, செயல்படுத்திக் கொண்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சரை நாம் பெற்றிருக்கிறோம்.

பிற்பகல் 12–25

அதுமட்டுமல்ல; 'அம்மா திட்டம்'. வெள்ளிக்கிழமைதோறும் அரசு அலுவலர்கள் கிராமங்களுக்குச் சென்று மக்களை நேராகச் சந்தித்து, அவர்களுக்கு என்ன கோரிக்கை இருக்கிறது; அவர்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது என்று கண்டறிந்து, அதைச் சிறப்பாக தீர்த்து வருகிறார்கள். அதன் காரணமாக, 33.13 இலட்சம் மனுக்கள் பரிசீலிக்கப்பட்டு இருக்கின்றன. இதுபோன்று எந்த ஒரு



2014 பிப்ரவரி 1] [திரு. ரா. சரத்குமார்]

அரசாவது செய்திருக்கிறதா? நிச்சயமாக இல்லை. மக்களையே போய்ப் பார்க்கமாட்டார்கள்; தம் மக்களைப் பார்ப்பதற்கே நேரமில்லாதவர்கள், மக்களுடைய பிரச்சினைகளை எப்படித் தீர்க்கப் போகிறார்கள்? அவர்களுடைய மக்களைப்பற்றிதான் சிந்தனை; அதை மட்டும்தான் அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். யார் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். வீட்டிலே பிரச்சினை; குடும்பத்திலே பிரச்சினை; வெளியிலே பிரச்சினை; நாளைக்கு நடைபெறப் போவதை இன்றைக்கே சொல்லுகின்ற பிரச்சினை. நாளைக்கு நடந்தால் யாரைக் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்தலாம் என்று தானாகவே ஒரு ground–ஐ create பண்ணி வைத்திருப்பது. இவையெல்லாம் அவருக்குக் கைவந்த கலை. அவர் திரைக்கதை எழுதுபவர்; இதையெல்லாம் சிறப்பாக எழுதுவார். இப்படி ஒரு சிறந்த திரைக்கதை எழுதி, மக்களிடம் நாடகம் ஆடி, அதன்மூலமாக இந்தத் தேர்தலிலே வெற்றி பெற்று விடலாமென்று அவர்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்களே தவிர, வேறொன்றுமில்லை. தேர்தலை நோக்கிப் பயணிக்கின்ற இயக்கமாக நான் தி.மு.க.–வைப் பார்க்கின்றேன். ஆனால், மக்களை நோக்கி, மக்கள் நலனுக்காகப் பயணிக்கின்ற ஒரு ஆட்சியாளராகத்தான் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களைப் பார்க்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இங்கே மழை பொய்த்த போதிலும், விவசாயிகளுக்காக பல சலுகைகளை வழங்கியிருக்கிறார்கள். முக்கியமாகச் சொல்லப்போனால், கரும்புக்கு டன் ஒன்றுக்கு 2,650 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள். அதேபோன்று, இளைஞர்கள் வேலைவாய்ப்பினைப் பெற இணையதளம் ஒன்றை உருவாக்கியிருக்கிறார்கள். It is a high thinking. How to monitor the youngsters? அதாவது, எப்படி இங்குள்ள இளைஞர்களை வழிநடத்திச் செல்ல வேண்டும்; எப்படி வேலைவாய்ப்பை அதிகரிக்க வேண்டும்; திறமையானவர்கள் அதிகமாக உள்ளனர். அப்படித் திறமையாக உள்ளவர்கள் திறமையான வேலையில் அமர்த்தப்பட வேண்டும்; அவர்களது பொருளாதார நிலையை உயர்த்த வேண்டுமென்ற அடிப்படையிலே, ஓர் இணையதளத்தைத் தொடங்கியிருக்கிறார்கள். அதன்மூலமாக அறிவும், ஆற்றலும் மிக்கவர்களை வரவேற்கின்ற ஓர் இணையதளத்தை

[திரு. ரா. சரத்குமார்] [2014 பிப்ரவரி 1

இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரு மாநிலம் அறிமுகப்படுத்தியிருக்கிறது என்றால், அது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் செயல்திட்டம்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இதை எப்படிப் பாராட்டாமல் இருக்கமுடியும்? ஆகவே, இதையெல்லாம் பாராட்ட வேண்டுமென்றால், நீங்கள் சட்டசபைக்கு வரவேண்டும். மேதகு ஆளுநர் அவர்கள் உரையைப் படிக்கின்றபோது, இங்கே அமர்ந்து கேட்கவேண்டும்; அது உங்களுக்குப் புரிய வேண்டும்; புரிந்த பிறகு ஆளுநர் உரையில் என்ன இருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும். அது தெரியாத காரணத்தினால், புரியாத காரணத்தினால், மக்களைப் பற்றிச் சிந்தித்து, தம் மக்களைப் பற்றிச் சிந்தித்து, வெளியேறி, சட்டமன்றத்திற்கு புறம்பேயிருந்து அவர்கள் அறிக்கைமூலமாக அரசியல் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

2014 ஆம் ஆண்டில் குழந்தைகள் இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தை இந்த அரசு, தமிழக அரசு, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறது. இது எதைச் சுட்டிக்காட்டுகிறது? கல்வி முக்கியம்; கல்வியின் தரம் முக்கியம். இந்தக் கல்விதான் மக்களுக்கு அடித்தளம். கல்வியிருந்தால்தான் நாளைக்கு வாழ்க்கையில் நன்றாக இருக்கமுடியும் என்பதை உணர்ந்து செயல்பட்டு வருகின்றார்கள். அதற்காகத்தான் கல்விக்காக எவ்வளவோ திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறார்கள். பள்ளிக் கூடங்களுக்குச் செல்கின்றபோது, மாணவர்களும், மாணவிகளும், அவர்களுக்கு அரசால் வழங்கப்பட்டுள்ள சைக்கிள், காலணி, பென்சில், பென்சில் பாக்ஸ், கணினி போன்றவற்றை எடுத்துச்செல்வதை பார்க்க முடிகிறது. இவை, வேறு எந்த மாநில அரசாலும் வழங்கப்படவில்லை. அவர்களின் திறமையை வளர்ப்பதற்காக, ஊக்கப்படுத்துவதற்காக இவற்றையெல்லாம் அவர்களுக்குத் தருகிறார்களேயொழிய, ஏதோ இலவசமாகத் தருகின்றார்கள் என்று பொருள் அல்ல. இவற்றின்மூலம், அவர்கள் சிறப்பாகக் கல்வி பயில வேண்டும்; பணக்கார மாணவர்களுக்கு இணையாக ஏழை மாணவர்களும் கல்வியில் உயர வேண்டுமென்ற எண்ணத்திலே, மாண்புமிகு அம்மா அவர்கள் இதையெல்லாம் செய்து வருகிறார்கள் என்றால், கல்வியின் தரத்தை



2014 பிப்ரவரி 1] [திரு. ரா. சரத்குமார்]

உயர்த்துவதற்காக அரும்பாடுபட்டு வருகின்ற ஒரு முதலமைச்சராக நான் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களைப் பார்க்கின்றேன்.

மெட்ரோ இரயில் திட்டத்தை வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர் வரை நீட்டிக்க அனுமதி பெறுவதன்மூலம், வட சென்னை பகுதியின் வளர்ச்சியைக் கூட்டமுடியும் என்று எண்ணி, அதற்கான முயற்சியை எடுத்திருக்கிறார்கள். இதைக்கூட ஏளனம் செய்திருக்கிறார்கள். ‘நாங்கள் இந்தத் திட்டத்தை அறிவித்தோம்; ஜப்பானோடு நாங்கள் இதற்காக ஓர் ஒப்பந்தம் போட்டோம்” என்று சொல்லியிருக்கிறார்கள். ஜப்பானோடு ஒப்பந்தம் போட்டீர்கள்; உங்களுக்கு அதில் எவ்வளவு பணம் வந்தது? அதுதான் உங்களுக்கு முக்கியமாகத் தெரிந்திருக்கும். அதன் காரணமாகத்தான், நீங்கள் ஒப்பந்தம் போட்டிருப்பீர்கள். அந்தத் திட்டத்தை நீங்கள் அறிவித்திருந்தாலும்கூட, அதை ஏன் செயல்படுத்தவில்லை? அப்போதே ஏன் நீங்கள் அதற்கு நிதியுதவி செய்யவில்லை? பாராளுமன்றத்திலே அத்தனை மந்திரிகள் உட்கார்ந்திருந்தீர்களே? அங்கே போய் என்ன செய்தீர்கள்? 2G, 3G, 4G, 5G என்று—நல்ல வேளை, அதெல்லாம் வருவதற்கு முன்னாலே, இவர்கள் வெளியே வந்துவிட்டார்கள். அங்கும் அவர்கள் ஊழல்தான் செய்தார்கள். அப்படிப்பட்டவர்கள் இருக்கின்ற மத்தியிலே, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள், மக்களுக்காகவே அல்லும், பகலும் உழைத்துக் கொண்டிருக்கின்றார். நான் வியந்திருக்கின்றேன் பலமுறை. 18 மணி நேரம், 19 மணி நேரம், 20 மணி நேரம் உழைத்துக் கொண்டேயிருக்கின்றார்கள். நம்மாலேயே முடியவில்லை. எனக்கு வயது 25—தான். *(சிரிப்பு)* அண்மையிலே 59 என்று பத்திரிகையிலே போட்டுவிட்டார்கள். ஆக, எப்படி உழைக்கிறார்கள்? அதற்கொரு திறமை வேண்டும்; சிந்தனை வேண்டும்; மக்களின்மீது அன்பு வேண்டும். அப்படி மக்கள்மீது அன்புள்ளம், தாயுள்ளம் கொண்டவர்தான், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் *(மேசையைத் தட்டும் ஒலி)* என்பதை நான் பதிவு செய்ய ஆசைப்படுகின்றேன். ஆகவே, தொலைநோக்குப் பார்வை மட்டும் போதாது; அதைச் செயல்வடிவம் ஆக்கும் மதிநுட்பமும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களிடம் இருப்பதை மேதகு ஆளுநர் அவர்கள் பாராட்டியிருப்பது, ஒட்டுமொத்த தமிழர்களின் உணர்வுகளைப் பிரதிபலிப்பதாக

அமைந்துள்ளது என்ற வகையிலே, மேதகு ஆளுநர் அவர்களது உரைக்கு நன்றி தெரிவித்து, சமத்துவ மக்கள் கட்சியின் சார்பிலும், என் சார்பிலும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12—30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2014 ஆம் ஆண்டு ஆளுநர் உரைமீதான விவாதத்தில் புதிய தமிழகம் கட்சியினுடைய கருத்துகளை எடுத்து வைப்பதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியை முதற்கண் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த அவையில் மனமுவந்து அறிக்கை அளித்த மேதகு ஆளுநர் அவர்களுக்கும், புதிய தமிழகம் கட்சியினுடைய நன்றியை நான் தெரிவித்து, பதிவு செய்ய விரும்புகிறேன். ஆளுநர் உரையில் என்ன இருக்கிறது, என்ன இல்லை, என்ன எதிர்பார்த்தோம் என்பதைப் பற்றி புதிய தமிழகம் கட்சியினுடைய சில கருத்துகளை நான் சொல்ல விரும்புகிறேன்.

ஆளுநர் உரையில், வறுமை மற்றும் வேலைவாய்ப்பின்மை போன்ற பிரச்சினைகளுக்கு தீர்க்கமான முறையில் தீர்வு காணப்பட்டு வருகிறது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், அதேசமயத்தில், மத்திய அரசினுடைய தவறான பொருளாதாரக் கொள்கைகளால் தமிழகம் பெரிதும் பாதிப்படைந்திருக்கிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. மத்திய அரசினுடைய பல தவறான கொள்கைகள், சர்வதேச அளவிலே நிலவக்கூடிய பொருளாதார மந்த நிலை இந்தியாவில் இருக்கக்கூடிய அனைத்து மாநிலங்களையும் பாதித்திருக்கும்போது, அது தமிழகத்தையும் பாதித்திருக்கும். எனவே, அந்தப் பாதிப்பு ஒரு புறம் இருக்கிறது என்பதிலே மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால், தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படக்கூடிய கோவை மாநகரில், கடந்த பத்து தினங்களுக்கு முன்பு அண்டை மாநிலமான கர்நாடகத்தின் முதலமைச்சர் சீதாராமையா அவர்கள் 200—க்கும் மேற்பட்ட தொழிலதிபர்களையும், முதலீட்டாளர்களையும் அழைத்து ஒரு கூட்டம் நடத்தியிருக்கிறார்கள். கோவையிலிருந்து 150 கிலோ மீட்டர் தொலைவில் இருக்கக்கூடிய சாம்ராஜ் நகரில்



அமையப்படவிருக்கின்ற தொழில் மையத்தில் தொழில் தொடங்க அழைத்திருக்கிறார். பல தொழிலதிபர்களும் அதிலே ஆர்வம் காட்டியிருக்கிறார்கள். தமிழகம்தான் பிற மாநிலங்களிலிருந்தும், பிற நாடுகளிலிருந்தும் முதலீட்டைக் கவர வேண்டுமே தவிர, தமிழகத்திலிருந்து தொழிலதிபர்கள் இடம்பெயர்வதற்குண்டான ஒரு சூழ்நிலையை உருவாகக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தமிழகத்திலேயிருந்து கர்நாடக மாநிலத்திற்கு தொழிலதிபர்களெல்லாம் சென்றுவிட்டார்கள் என்று கூறியிருக்கின்றார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த 10 நாட்களுக்கு முன்பாக கோவையில் நடந்த தொழிலதிபர்கள் மாநாட்டிலே 200—க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டார்கள் என்று சொல்லியிருக்கின்றார்கள். இவ்வளவு விவரமாகப் பேசுகின்ற அவர்கள், அந்த மாநாட்டில் என்ன கேட்டார்கள், அதற்கு கர்நாடக முதலமைச்சர் அவர்கள் என்ன பதில் சொன்னார், அதிலே எந்த அளவிற்கு முதலீடு செய்யப்பட்டிருக்கிறது என்று தெளிவாகச் சொல்லியிருந்தால் பரவாயில்லை.

அந்த மாநாடு நடைபெறுகின்றபொழுது, தொழிலமைப்புக் கூட்டத்தின் தலைவர், பக்கத்தில் இருக்கின்ற சாம்ராஜ் நகரில் நாங்கள் தொழில் தொடங்குவதற்கு எங்களுக்கு பாதுகாப்பு இல்லை, எப்படி நாங்கள் அங்கு சென்று தொழில் தொடங்க முடியும் என்று கேட்டபோது, கர்நாடக முதலமைச்சர் அவர்கள், 'நான் இருக்கின்றவரை பிரச்சினை இல்லை' என்றுதான் சொல்லியிருக்கின்றார்கள்.

காவேரி பிரச்சினையில் இன்றையதினம் தமிழகம் வஞ்சிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் உச்ச நீதிமன்றம் வரை சென்று போராடிக் கொண்டுவந்த உரிமையைக்கூட கேட்டுப் பெறவேண்டிய நிலைமை இருக்கிறது. குடிதண்ணீரைக்கூட கொடுக்க முடியாத அளவிற்கு கர்நாடகா இருந்துகொண்டிருக்கிறது. இப்படி கர்நாடகா இருக்கின்றபோது, தொழிலதிபர்களெல்லாம் 'நாங்கள் அங்கு தொழில் தொடங்குகின்றபோது, நாளையதினம் எங்களுக்கு ஒரு பிரச்சினை

[திரு. பி. தங்கமணி] [2014 பிப்ரவரி 1

என்று வந்தால், எங்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது' என்று கேட்டபோது, 'நான் இருக்கின்றவரை பிரச்சினை இல்லை' என்று சொல்லியிருக்கின்றார். ஒரு முதலமைச்சர் ஒரு தொழிலமைப்புக் கூட்டத்தை நடத்துகின்றார். ரூ.12,000 கோடி முதலீடு செய்யப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். ரூ.12,000 கோடி என்று சொன்னால், அதிலே யார், யார் எதில் முதலீடு செய்திருக்கின்றார்கள், எவ்வளவு முதலீடு செய்திருக்கின்றார்கள் என்று சொன்னால் பரவாயில்லை. ஏதோ ஒரு மனுவைக் கொடுத்துவிட்டு, அதில் நுழைவுக் கட்டணத்தைக் கட்டிவிட்டு, யார், யாரெல்லாம் தொழில் செய்ய இருக்கிறீர்கள், எவ்வளவு முதலீடு செய்யவிருக்கின்றீர்கள் என்ற விவரங்களைக் கேட்டிருக்கின்றார்கள். அதற்கு அவர்கள் ரூ.5 கோடி, ரூ.10 கோடி என்று எழுதிக் கொடுத்ததாக பத்திரிகைகளில் நாம் பார்த்தோம். அன்றையதினம் தொழில் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்கள் வெளியே வருகின்றபோது, Times of India நாளிதழைச் சேர்ந்த நிருபர், நீங்கள் இங்கே தொழில் தொடங்கப்போகின்றீர்களா என்று கேட்கின்றார். அதற்கு அவர்கள், அழைத்தார்கள் வந்தோம்; ஆனால் எந்தச் சூழ்நிலையிலும் நாங்கள் சாம்ராஜ் நகரில் தொழில் தொடங்கத் தயாராக இல்லை. அதுமட்டுமல்லாமல், நான்கு மணி நேரம் மட்டும்தான் மின்சாரம் இருக்கின்றது, அதை நம்பி நாங்கள் அங்கு செல்வதற்குத் தயாராக இல்லை என்று சொல்லியிருக்கின்றார்கள். எந்தச் சூழ்நிலையிலும் தமிழகத்திலிருந்து கர்நாடகாவிற்கு நாங்கள் செல்லத் தயாராக இல்லை என்று சைமா அமைப்பைச் சேர்ந்தவர்கள் பத்திரிகைகளில் பேட்டி கொடுத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றையதினம்கூட செய்தித்தாளில் அந்தப் பேட்டி வந்திருக்கின்றது, அதனை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பார்த்தார்களா என்று தெரியவில்லை.

ஒன்றைமட்டும் மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்று இந்திய அளவில் தொழில் துவங்க வேண்டுமென்று சொன்னால், அமைதியான மாநிலம், வளமான மாநிலம், திறமை மிகுந்த மாநிலம் என்று சொன்னால், அது மாண்புமிகு அம்மா அவர்கள் ஆண்டு கொண்டிருக்கின்ற தமிழகம் மட்டும்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இது போன்ற நிலைமை மூன்று மாதகாலத்திற்குப் பிறகு, மாண்புமிகு அம்மா அவர்கள் இந்திய நாட்டிற்கே தலைமையேற்றதற்குப் பின்னால் உருவாகுமேயொழிய,



2014 பிப்ரவரி 1] [திரு. பி. தங்கமணி]

ஒரு தொழில் அதிபர்கூட கர்நாடக மாநிலத்திற்குச் சென்று தொழில் துவங்க தயாராக இல்லை என்பதை இந்த மாமன்றத்தின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு தொழிற்சாலைகூட கர்நாடக மாநிலத்திற்குச் செல்லப் போவதில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் செல்லாத ஒரு நிலை உருவாக்கப்படுமேயானால், சந்தோஷப்படும் முதல் நபர் நானாகத்தான் இருப்பேன். அதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. திருப்பூரிலுள்ள சாயப்பட்டறைகளினால் சுற்றுப்புறச் சூழல் மாசுபடுவதன் காரணமாக அங்கே இருக்கக்கூடியவர்கள் தாங்களாகவே சுத்திகரிப்பு நிலையத்தை துவக்க முடியாத காரணத்தினால், அங்குள்ள மக்கள் வேறு மாநிலங்களுக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தாங்கள் அறிவீர்கள். இந்தச் சுத்திகரிப்பு நிலையத்தை அரசு உருவாக்கித் தருவதற்கு தயாராக இருப்பதாகவும், (குறுக்கீடு) சொல்லி முடித்து விடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான தகவல்களை இந்த அவைக்குத் தந்து கொண்டிருக்கின்றார்கள். உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வந்தவுடன், மாண்புமிகு அம்மா அவர்கள் மூன்றாவது முறையாகப் பொறுப்பேற்றவுடன் 200 கோடி ரூபாய் வட்டியில்லாமல் நிதியை ஒதுக்கிக்கொடுத்து, அங்கே சுத்திகரிப்பு நிலையம் துவங்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) திருப்பூரில் இருக்கின்ற தொழில் அதிபர்கள் எல்லாம் 60 சதவிகிதம் தொழில்களை துவக்கி விட்டார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறந்துவிட்டாரா அல்லது தெரியவில்லையா என்பது தெரியவில்லை.

[திரு. பி. தங்கமணி] [2014 பிப்ரவரி 1

இதற்கு மேலும் ஒரு தகவலைச் சொல்கின்றேன். திருமணத்திற்கு இன்னும் பெண்ணே பார்க்கவில்லை. ஆனால், அவர்கள் திருமணத்திற்கு தேதி வைத்து விட்டார்கள். சாம்ராஜ் நகரில் இடம் எங்கு இருக்கின்றது என்றே தெரியவில்லை. 1,400 ஏக்கரில் நாங்கள் தொழில்கள் துவங்கப்போகிறோம் என்று ஒரு முதல்வர் சொல்லியிருக்கிறார் என்றால், எங்கே இடம் இருக்கின்றது. எங்கே இடத்தைப் பார்த்திருக்கின்றார்கள். யாருக்கு எவ்வளவு இடம் என்று ஒதுக்கியிருக்கின்றார்கள். ஒரு தொழில் கூட்டமைப்பு மாநாடு நடத்துகிறார்கள் என்றால், எந்த இடத்தை வைத்துக்கொண்டு, என்ன தொழில் துவங்க இருக்கின்றீர்கள், உங்களுக்கு எவ்வளவு ஏக்கர் நிலம் வேண்டும், இதோ இப்போதே தருகிறேன் என்று சொல்வதுதான் முறை. இது நடந்தது எதற்காக என்று சொன்னால், வரவிருக்கின்ற நாடாளுமன்றத் தேர்தலில் அந்த முதலமைச்சர் அவருடைய பதவியை தக்க வைத்துக்கொள்வதற்காகத்தான் இந்த நாடகத்தை நடத்தியிருக்கிறார்.

கோயம்புத்தூர் மற்றும் திருப்பூரில் இருக்கின்றவர்கள், தொடர்ந்து பத்திரிகையில் செய்தி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள், எந்தச் சூழ்நிலையிலும் நாங்கள் கர்நாடகாவிற்குச் செல்ல தயாராக இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்கு மேலும், நடைமுறையில் இருக்கும் கஷ்டங்களையும் சொல்கின்றேன்.

ஒரு தொழில் துவங்க வேண்டுமென்று சொன்னால், முதலில் சாலைகள் வேண்டும். தொழிற்சாலைகளுக்குச் சென்று வருவதற்கு நான்குவழிச் சாலையோ, ஆறுவழிச் சாலையோ அல்லது தார்ச் சாலையோ வேண்டும். ஆனால், மலைப் பகுதி வருகின்றபோது, எப்படி அங்கு தொழிற்சாலை துவங்கி, அந்த வழியாக வருவார்கள் என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதற்கும் மேலாக தென் தமிழகத்திலிருந்துதான் அதிகமான தொழிலாளர்கள் திருப்பூரில் வேலை செய்து கொண்டிருக்கின்றார்கள். திருப்பூரில் இருப்பவர்கள் எல்லாம் மதுரை போன்ற பகுதிகளில் தொழில்கள் துவங்க வேண்டுமென்று நினைத்தபோது, அங்கேகூட பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் கிடைக்காத காரணத்தினால், திருப்பூரிலே தொடங்கினால்தான் சரியாக இருக்கும் என்று மீண்டும் திருப்பூரிலேயே தொழில்களை துவங்கி வருகிறார்கள்.



2014 பிப்ரவரி 1] [திரு. பி. தங்கமணி]

அதுமட்டுமல்லாமல், அவர் சொல்லியிருக்கின்ற மற்றொரு கருத்து என்னவென்று சொன்னால், பயிற்சி பெற்ற தொழிலாளர்கள் இல்லை என்பதனால் நாங்கள் எப்படி அங்கு வந்து தொழிற்சாலை துவங்க முடியும் என்று கேட்டபோது, அவர்கள் சொல்லியிருக்கிறார்கள், இன்னும் 6 மாத காலத்தில் யார், யார் வேண்டுமென்று சொன்னால், அவர்களுக்குப் பயிற்சி கொடுத்து அனுப்புகிறோம் என்று சொன்னார்கள். இது தொழிற்சாலையை நடத்துவதற்கு உகந்ததுதானா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தயவுசெய்து நினைத்துப் பார்க்க வேண்டும். ஏதோ குற்றம் சொல்ல வேண்டுமென்பதற்காக இப்படிச் சொல்லக்கூடாது.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, இன்றையதினம் தமிழகத்தில் மட்டும்தான் கிட்டத்தட்ட ஓர் ஆண்டில் 26,550 கோடி ரூபாய் அளவுக்கு, ஒன்றரை இலட்சம் பேர் பயன்பெறும் வகையில் 17 MoU—புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்டிருக்கிறார் என்று சொன்னால், இது இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லை. ஒரு மத்திய அமைச்சர்கூட சொல்லியிருக்கிறார். ஜப்பான் நாட்டைச் சேர்ந்தவர்கள் எல்லாம், இங்கு வந்து பார்க்கவில்லை, இங்கு தொழில் துவங்கவில்லை என்று. ஓர் உண்மையை இந்த அவையில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். இந்திய அளவிலேயே ஜப்பான் நாட்டு நிறுவனங்களைச் சேர்ந்த 364 கம்பெனிகள் உள்ளன. அவை இந்திய அளவில், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆண்டு கொண்டிருக்கின்ற தமிழகத்தில்தான் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எதற்கெடுத்தாலும் கர்நாடகா என்றும், மகாராஷ்டிரா என்றும், குஜராத் என்றும் சொல்லிக் கொண்டிருக்கின்றார்கள். குஜராத்தில் 54 ஜப்பான் நிறுவனங்கள் மட்டும்தான் இருக்கின்றன என்பதை இந்தப் பேரவையின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12—40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, வேறு சப்ஜெக்ட்டுக்குப் போங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

[2014 பிப்ரவரி 1

**மாண்புமிகு திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூரில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக்காலத்தில் தொழில் முதலீட்டாளர்கள் பாதிக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான ஒரு தகவலை பேரவையிலே இன்றைக்கு பதிவு செய்திருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரசைப் பொறுத்தவரையிலே, உச்ச நீதிமன்றம், திருப்பூரிலே இருக்கிற சாயப் பட்டறை தொழிற்சாலைகளுக்கு சுற்றுச்சூழலைப் பாதுகாக்கின்ற அளவிலே ஓர் உத்தரவை பிறப்பித்ததன் அடிப்படையிலே, எந்தச் சூழ்நிலையிலும் தொழில் முதலீட்டை ஊக்கப்படுத்த வேண்டும்; ஆனால் அதேசமயத்திலே சுற்றுச்சூழலை பாதுகாக்கக்கூடிய அடிப்படையிலே ஓர் அரசினுடைய நிருவாகம் அமைய வேண்டுமென்ற அடிப்படையிலேயும், இன்றைக்குத் தொழில் முதலீட்டாளர்கள் எந்தவிதத்திலும் பாதிக்கப்படக்கூடாது என்ற அடிப்படையிலேயும், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 200 கோடி ரூபாயை திருப்பூர் மாவட்டத்திற்கு மட்டும் சாயப்பட்டறைக் கழிவு நீரைச் சுத்திகரிப்பதற்காக, பூஜ்ய நிலையை அடைவதற்குண்டான அளவிலே அந்த நிதியை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். இந்தியாவிலேயே பூஜ்ய நிலையில் சாயக் கழிவு நீரைக் கொண்டு வருவதற்கான திட்டத்தை அறிவித்து செயல்படுத்திய ஒரே மாநிலம் தமிழகம்தான் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல, இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் 200 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்ததினால் அங்கிருக்கிற தொழில் முதலீட்டாளர்கள் மனமுவந்து மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திட்டத்தை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அங்கே முழுமையாக சுத்திகரிக்கப்படக்கூடிய பொது சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்தி, நல்லமுறையிலே தொழில் முதலீட்டாளர்கள் தங்களை ஈடுபடுத்திக்கொண்டுள்ளார்கள். மூலதன உற்பத்தியைப் பொறுத்தவரையிலே, கடந்த ஆட்சியைவிட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், இரு மடங்காக அதிகரிக்கப்பட்டிருக்கிறது என்பதை



2014 பிப்ரவரி 1] [திரு. என்.டி. வெங்கடாச்சலம்]

மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் ச. சுந்தரராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த கால ஆட்சியில் திருப்பூர் மாவட்டம் மத்திய அரசுக்கு கிட்டத்தட்ட ஓராண்டில் 12 ஆயிரம் கோடி ஏற்றுமதி வகையில் பெற்றுக் கொடுத்தது. ஆனால், மத்திய அரசு, ஏற்றுமதி செய்த தொழிலதிபர்களுக்கு மனமுவந்து நிதி உதவி கொடுக்காமல் கிடப்பில் போட்டதனால், முதலாளிகள் ஆயத்த ஆடை நிறுவனங்களை மூன்று ஆண்டுகளாக மூடுகின்ற சூழ்நிலை இருந்தது. மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், கைத்தறித் துறையின்மூலம் 200 கோடி ரூபாய் வட்டியில்லாக் கடனாக திருப்பூர் மக்களுக்குக் கொடுத்து, கைத்தறித் தொழிலில் ஈடுபட்டிருந்த 5 இலட்சம் நபர்களுக்கு வேலைவாய்ப்பும் கொடுத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும்ஒலி) திருப்பூர் மாவட்டத்தில் செய்யப்படும் ஏற்றுமதியால் ஒரு பைசாகூட இந்த அரசுக்கு வருமானம் கிடைக்கவில்லையென்றாலுங்கூட, வேலைவாய்ப்பை முன்னிறுத்தி 200 கோடி ரூபாயை வட்டியில்லா கடனாக அந்த நெசவாளர்களுக்கு கொடுத்து, சிறப்பான முறையில் ஆட்சி செய்து கொண்டிருக்கின்ற முதலமைச்சர் அவர்களை இன்றையதினம் நாம் பெற்றிருக்கின்றோம். ஆனால், அங்கிருக்கின்ற ஆயத்த ஆடை உரிமையாளர்களுக்கு தாங்கள் ஈட்டிய பணத்திலிருந்து மனமுவந்து வேலைவாய்ப்பு கொடுக்க மனதில்லாத காரணத்தினால் மாண்புமிகு அம்மா அவர்கள் சிறப்பான முறையில் வேலைவாய்ப்பைக் கொடுத்து உதவியுள்ளார்கள். கைத்தறி தொழிலின்மூலம் ஒரு பைசாகூட இந்தத் துறைக்கு வருமானம் இல்லையென்றாலும்கூட, மக்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுக்கின்ற ஓர் அருமையான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்து தமிழகத்தில் அம்மா அவர்கள் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

[2014 பிப்ரவரி 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, வேறு சப்ஜெக்ட்டுக்குப் போங்கள்.

பிற்பகல் 12–45

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த நான்கு தினங்களுக்கு முன்பு, இந்தியாவினுடைய Coir Board Chairman, நாங்கள் பலமுறை தமிழகத்தில் இருக்கக்கூடிய அதிகாரிகளோடு தொடர்புகொண்டு, "தென்னை வாரியம் அமைக்க வேண்டுமென்று பேசியுள்ளோம். தமிழகத்தில் இலட்சக்கணக்கான விவசாயிகள் தென்னையை நம்பி இருக்கின்றார்கள். எல்லாவிதமான மூலப்பொருட்களும் இங்கே கிடைக்கின்றன. அதனால், இங்கே தென்னை வாரியத்தை அல்லது Coir Board–ஐ உயிரேற்றுவதற்கு நாங்கள் முயற்சி செய்கிறோம்" என்று சொன்னார். ** (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே உறுப்பினர் அவர்கள் ** (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** என்று சொன்ன கருத்தையே அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. ஆதாரம் இல்லாமல் இதுபோன்று குற்றஞ்சாட்டி பேச முடியாது. இதுபோன்ற குற்றச்சாட்டிற்கு நீங்கள் ஆதாரம் வைத்திருக்கிறீர்களா? பத்திரிகையில் வருவதையெல்லாம் இங்கே பேச முடியாது. ஆதாரம் ஏதாவது வைத்திருக்கிறீர்களா? மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2014 பிப்ரவரி 1]

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலில் ** என்பதற்கு என்ன ஆதாரம்? ஏதோ அரசியல் செய்யவேண்டும் என்பதற்காக எங்கிருந்தோ வந்த கருத்தை இங்கே சொல்லக் கூடாது. தயவுசெய்து இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் கொஞ்ச நாட்களாக குறைசொல்ல வேண்டும் என்று பேசுகிறார். கூடா நட்பு கேடில் முடியும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) இல்லை, இப்படி ஆதாரம் இல்லாமல் பேசக்கூடாது. இனியொருமுறை நீங்கள் இப்படிப் பேசினால் உங்கள் மேல் நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கும். (குறுக்கீடு) இல்லை. இப்படி ஆதாரம் இல்லாமல் திடீர், திடீரென்று பேசக்கூடாது. நீங்கள் ஆதாரம் இல்லாமல் பேசக்கூடாது. (குறுக்கீடு) இல்லை, ஆதாரத்தை பேரவைத் தலைவரிடம் சமர்ப்பித்துவிட்டுத்தான் பேச வேண்டும். நீங்கள் பேசுவதற்குமுன்பு ஆதாரத்தை என்னிடம் காட்டிவிட்டுத்தான் பேச வேண்டும். (குறுக்கீடு) இப்படிப் பேசினால் உங்கள் மேல் நடவடிக்கை எடுக்கவேண்டியிருக்கும். குற்றச்சாட்டு சொல்வதற்குமுன்பு அவைத் தலைவரிடம் கொண்டுவந்து அவற்றையெல்லாம் காட்ட வேண்டும். குற்றஞ்சாட்டி அவையில் பேசுவது முறையல்ல. உட்காருங்கள். நேரம் ஆகிறது. (குறுக்கீடு) உட்காருங்கள். மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தை எடுத்துவைக்கும்போது என்ன நடந்ததென்பதை ஆய்ந்து பார்த்துவிட்டு இங்கே அறிவுரை சொல்லியிருக்கவேண்டும். யாரோ ஒருவர் பேட்டி அளித்தார் என்றெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. ப. மோகன்] [2014 பிப்ரவரி 1

கயிறு வாரியத்தின் தலைவர் பேராசிரியராக இருக்கக்கூடியவர், நம்முடைய தமிழ்நாட்டிலேதான் சிறப்பாக இந்தப் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்று அவர் பாராட்டிச் சென்றிருக்கிறார் என்பதையும் நான் இந்த அவையில் பதிய வைக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). அதுமட்டுமல்ல. தவறான கருத்துகளை பதியவைக்கக்கூடாது என்கிற அடிப்படையில் சொல்கிறேன். பத்திரிகையில் வந்த செய்தியைக்கூட அந்தப் பத்திரிகையினுடைய அலுவலர் அவர்கள் மறுத்திருக்கிறார்கள் என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதேபோன்று, மத்திய அரசின் கயிறு வாரியமானது, ரூ.100 கோடி மதிப்பீட்டில், தமிழ்நாட்டிற்கு, குறிப்பாக, விழுப்புரம் மாவட்டத்திற்காக கயிறு குழுமம் அமைக்கத் திட்டமிடப்படவில்லை என்றும், அதற்கு அனுமதி அளிக்கவில்லை என்றும் அந்தக் கயிறு வாரியத் தலைவரே இங்கே சொல்லியுள்ளார் என்பதை நான் பணிவன்போடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே தவறான செய்திகளை யாரோ சிலர் சொன்னதை, இங்கே பதிய வைப்பதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். அதுமட்டுமல்ல, இந்தியாவிலேயே கேரளாவிற்கு அடுத்தபடியாக, தமிழகம்தான் கயிறு தொழிலில் இரண்டாம் இடத்தைப் பிடித்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச்சொல்ல விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12—50

மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலேதான் நம்முடைய தமிழ்நாட்டிலே 9 குழுமங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச்சொல்ல வேண்டியது என்னுடைய கடமை என்று கருதுகிறேன். அந்தக் கயிறு வாரியத்தின் தலைவர் அவர்கள் நம்முடைய அரசைப் பற்றி பல்வேறு வகைகளிலே புகழ்ந்து சொல்லியிருக்கிறார்கள் என்பதையும், 881 இலட்சம் ரூபாய் நம்முடைய தமிழ்நாடு பெற்றிருக்கிறது என்பதையும் நான் இந்த நேரத்தில் பெருமையோடு சொல்ல விரும்புகிறேன். கடந்த ஆட்சிக் காலங்களில் இதுபோன்ற திட்டங்கள் தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்படவில்லை என்பதையும் நான் இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். கயிறு வாரியத்தின் மூலமாக நம்முடைய தமிழ்நாட்டுக்கு பல்வேறு திட்டங்கள் மாண்புமிகு



2014 பிப்ரவரி 1] [திரு. ப. மோகன்]

அம்மா அவர்கள் பொறுப்பேற்ற பின்னர்தான் கிடைத்திருக்கின்றன என்பதை உறுப்பினர் அறிந்துகொள்ள வேண்டும். எனவே, தவறான கருத்துகளை அவையிலே பதிய வைக்கக் கூடாது என்று கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி, உட்காருங்கள். நேரம் ஆகிவிட்டது. உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் ஜவாஹிருல்லா. (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். இல்லை.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம், பேச்சை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி, உட்காருங்கள். நீங்கள் உரையை முடிப்பது போல் தெரியவில்லை. (குறுக்கீடு) ஒரு வரியில் முடியுங்கள். அதற்குமேல் allow செய்ய மாட்டேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் தகுதித் தேர்வில் இடஒதுக்கீடு வழங்குவது பற்றி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புதுப் பிரச்சினைக்கெல்லாம் போகக்கூடாது. (குறுக்கீடு) புதுப் பிரச்சினைக்கெல்லாம் போகக்கூடாது. (குறுக்கீடு) நேரம் ஆகிவிட்டது. 20 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. இன்னும் 3 உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆசிரியர் தகுதித் தேர்வில் இடஒதுக்கீடு வழங்கலாம், அதனால் எந்தவித பிரச்சினையும் இல்லை என்று இந்திய அரசாலே தமிழ்நாடு அரசுக்கு அதிகாரபூர்வமாக அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. அந்த ஒரே ஒரு வரியினை மட்டும் படித்துவிடுகிறேன். அதாவது, Qualifying Marks: A person who scores 60% or more in the TET Exam will be considered as TET Pass. Secondly, school managements may consider giving concessions to persons belonging to SC/ST/OBC/Differently-abled persons, etc., in accordance with their existing reservation policy.

அதனால், தாழ்த்தப்பட்டவர்கள், மிக, மிக பின்தங்கியோர், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்,

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2014 பிப்ரவரி 1

ஊனமுற்றோருக்கு ஆசிரியர் தகுதித் தேர்வில் விதிகளைத் தளர்த்துவதற்கும், அதில் இடஒதுக்கீடு வழங்குவதற்கும் எந்தவிதமான தடையும் இல்லையென்று மத்திய அரசு அதிகாரபூர்வமாக தமிழ்நாடு அரசுக்கு அறிவுறுத்தியும்கூட, தமிழ்நாடு அரசு எந்தவகையிலும் நடைமுறைப்படுத்தாதது எங்களுக்கு வருத்தம் அளிக்கிறது. எனவே, தமிழ்நாடு அரசு இதை உடனடியாக மாற்றி தமிழ்நாட்டிலும் ஆசிரியர் தகுதித் தேர்வில் இடஒதுக்கீடு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கம் 2009 ஆம் ஆண்டில் கட்டாயக் கல்விச் சட்டத்தைக் கொண்டு வந்தது. அந்தக் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்கீழ் மாணவர்களை அதிக எண்ணிக்கையில் பள்ளியில் சேர்க்க வேண்டும் என்ற நிலை இருந்தது. அதோடுமட்டுமல்லாமல், அந்த உரிமைச் சட்டத்தின்கீழ் பள்ளிகளுக்கு நியமிக்கப்படுகின்ற ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், TET, தமிழ்நாடு ஆசிரியர் தேர்வு வாரியம் ஒரு தகுதித் தேர்வினை, Teachers Eligibility Test வைத்துத்தான் தேர்வு செய்யவேண்டும் என்ற ஒரு முறை இருக்கிறது. அந்த முறையிலே பார்த்தால் தகுதித் தேர்வு என்பது வேறு, பள்ளிக்கூடத்திலே படிக்கக்கூடிய மாணவர்களுக்கு வாய்ப்பு என்பது வேறு. அந்த அறிக்கையில்கூட மத்திய அரசாங்கம், எந்த மாநில அரசாங்கமாக இருந்தாலும் அந்த மாநில அரசின் சூழ்நிலைக்கேற்ப அமைத்துக்கொள்ளலாம் என்றுதான் ஆணையிட்டிருக்கின்றதேயொழிய, இந்தந்த மாநில அரசாங்கம் கடைப்பிடிக்க வேண்டும், கட்டாயமாக கடைப்பிடிக்க வேண்டும் என்று சொல்லவில்லை. பொதுவாகச் சொல்லவேண்டும் என்று சொன்னால், ஆசிரியர் தகுதித் தேர்வு என்பது ஒரு பள்ளிக்கூடத்திலே பாடங்களைச் சொல்லிக்கொடுப்பதற்கான ஒரு தகுதி. அந்தத் தகுதியைப் பெற்ற பின்பே அவர்கள் வேலைக்குப் போகின்றபோது அவர்களுக்கு இடஒதுக்கீடு வழங்கவேண்டும் என்பது ஒரு முறை. ஆகவே, தகுதித் தேர்வில் அந்தத் தகுதியே இல்லாமல், குறிப்பாக ஒரு கல்லூரி ஆசிரியராகப் பதவி வகிப்பதற்கு அந்த ஆசிரியர் தகுதித் தேர்வில், பேராசிரியர் தகுதித்



2014 பிப்ரவரி 1] [திரு. பி. பழனியப்பன்]

தேர்வில் அவர்கள் 55% மதிப்பெண்கள் கண்டிப்பாகப் பெற்றிருக்க வேண்டும். அவர்கள் அந்தத் தகுதித் தேர்விற்கான SLET, NET அல்லது Ph.D. தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் என்ற முறை இருக்கிறது. அதைப்போலத்தான் கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய மாணவர்கள் நல்லமுறையில் கல்வி கற்க வேண்டும். அவர்களுக்குக் கல்வியைச் சொல்லிக்கொடுக்க தகுதியான ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்றுதான் தகுதித் தேர்வு வைத்திருக்கிறார்கள். ஆக, வேலைவாய்ப்பைப் பெறுவதில் இடஒதுக்கீட்டு முறை கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்ற ஒரு நிலை இருக்கின்றது. தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களுக்கு இடஒதுக்கீட்டு முறையினைக் கடைப்பிடித்து ஆசிரியர் பணி வழங்கவேண்டும் என்பதுதான் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் நோக்கம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள். டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) முனைவர் ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) 25 நிமிடங்கள் ஆகிவிட்டன, உட்காருங்கள். ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் ஜவாஹிருல்லா, நீங்கள் பேசவில்லையென்றால் நான் அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு) நீங்கள் பேசவில்லையென்றால் நான் அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு)

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** நீங்கள் அனுமதி மறுக்கிறீர்கள். (குறுக்கீடு)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2014 பிப்ரவரி 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி, நீங்கள் உட்காருங்கள். முனைவர் ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு)

**டாக்டர் க. கிருஷ்ணசாமி**: 5 நிமிடம் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 5 நிமிடம் கிடையாது, ஏற்கெனவே 25 நிமிடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. முனைவர் ஜவாஹிருல்லா, நீங்கள் பேசவில்லையென்றால் நான் அடுத்த உறுப்பினரைப் பேச அழைக்க வேண்டியிருக்கும். (குறுக்கீடு) முனைவர் ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுகிறீர்களா, இல்லையா?

**டாக்டர் க. கிருஷ்ணசாமி**: **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் ஜவாஹிருல்லா, நீங்கள் பேசவில்லையென்றால் அமருங்கள். மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம், நீங்கள் பேசுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி**: வெளிநடப்பு செய்கிறேன். பேச அனுமதி மறுத்ததால் நான் வெளிநடப்பு செய்கிறேன்.

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளிநடப்பு செய்தார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் ஜவாஹிருல்லா, நீங்கள் பேசுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவித்து மனித நேய மக்கள் கட்சியின் சார்பாகப் பேச வாய்ப்பளித்தமைக்காக முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். ஆளுநருடைய உரையிலே வேலை தேடுபவர்களையும் வாய்ப்பளிப்பவர்களையும் இணைக்கும் தளமாக மாநில வேலைவாய்ப்பு இணையதளம் அமைக்கப்படும் என்றவொரு

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2014 பிப்ரவரி 1] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

அறிவிப்பும் வந்திருக்கிறது. அது உண்மையிலேயே பாராட்டுக்குரியது. அதேநேரத்திலே, தமிழகத்திலே பிற்படுத்தப்பட்ட முஸ்லிம்களுக்காக நீண்டகாலம் எங்களுடைய அமைப்பு போராடியதன் பயனாக, கடந்த 2007 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18 ஆம் தேதி திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சியிலே 3.5 விழுக்காடு இடஒதுக்கீடு அளிக்கப்பட்டது. அந்த இடஒதுக்கீட்டை அதிகரிக்க வேண்டுமென்று நாங்கள் கோரிக்கை வைத்தோம். அ.தி.மு.க. சார்பிலே தேர்தல் பிரச்சாரக் கூட்டங்களிலே, 'அதிகரித்துத் தரப்படும்' என்று வாக்குறுதி அளிக்கப்பட்டது. இந்த அவையிலே பல முறை ** என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். அதேநேரத்திலே தமிழகத்திலே இந்த ஆட்சியிலே ** என்பதையும் நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இதை ஏன் சுட்டிக்காட்டுகின்றேன் என்றால். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதாரமில்லாத தகவல்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். இது அவைக்குத் தவறான தகவல். எனவே, ஆதாரமிருந்தால் அந்தத் தகவல்களை கூறுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆதாரத்துடன் பேசுங்கள். ஆதாரம் இல்லாமல் நீங்கள் எதுவும் பேச வேண்டாம்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** ஆதாரமில்லாமல் நான் பேசவில்லை. பத்திரிகையில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதை என்னிடம் காட்டியிருக்க வேண்டும். பத்திரிகையில் வந்ததை எல்லாம் பேசக்கூடாது. அதையெல்லாம் என்னிடம் கொண்டு வந்து காட்ட வேண்டும்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுவதாக இருந்தால்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2014 பிப்ரவரி 1

அதை என்னிடம் காண்பித்து அனுமதி வாங்கியிருக்க வேண்டும். (குறுக்கீடு) அதை என்னிடம் காண்பித்து அனுமதி வாங்கிய பின்னர்தான் நீங்கள் பேச வேண்டும். (குறுக்கீடு) அரசு ஆவணமாக இருந்தாலும் காண்பிக்கப் போகிறேன் என்று சொல்லி என்னிடம் அனுமதி வாங்கியிருக்க வேண்டும். அனுமதி வாங்காமல் இப்படி அவையில் நீங்கள் பேசுவது முறையல்ல. (குறுக்கீடு) நீங்கள் அமைச்சரைப் போய்ப் பாருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது ஆளுநர் உரையின்மீதான விவாதம் நடைபெற்று வருகிறது. அதுசம்பந்தப்பட்ட விவரங்களை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால் சரியாக இருக்குமே தவிர, இதுபோன்று தேவையில்லாத கருத்துகளை, உண்மைக்குப் புறம்பான கருத்துகளை அவையிலே பதிவு செய்ய வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்த ஒரு விஷயத்துக்கும் ஆதாரத்தைக் கொடுக்க வேண்டும். அப்படிப் பேசுவதாக இருந்தால் என்னிடம் அனுமதி வாங்க வேண்டும். பேரவை விதிகளில் இருப்பதைத்தான் நான் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1—00

**மாண்புமிகு திரு. எஸ். அப்துல் ரஹீம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ** என்பதை ஆதாரத்தோடு விரிவாக தெரியப்படுத்த வேண்டுமென்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தேர்தல்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2014 பிப்ரவரி 1] [திரு. செல்லூர் கா. ராஜு]

கூட்டணி இருக்கும்போது, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும், அவருடைய மதச் சார்பற்ற இயக்கமும் கூட்டணி வைக்கின்றபோது, ** என்றும் கூறியிருக்கிறார்கள். இது ஆளுநர் உரை. அதன் மீதுதான் இங்கே பேசவேண்டும். எனவே, அவர் சொல்லியிருக்கின்ற வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டும். இல்லாவிட்டால், அதற்கான ஆதாரத்தை உங்களிடம் காட்டி, அதற்கு தற்போது என்ன சம்பந்தம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவரிடம் சொல்லவேண்டும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்குமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, உங்களுக்கு ஏற்கெனவே சொல்லிவிட்டேன். குற்றச்சாட்டு சொல்வதற்குமுன் அதற்கான ஆதாரத்தை என்னிடம் கொண்டுவந்து காட்டிவிட்டுத்தான் பேசவேண்டும் என்று. ஆதாரத்தைக் காட்டி பேசுவதுதான் முறை. அதுதான் விதி. விதிப்படி பேசவில்லையென்று சொன்னால், நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டிவரும். அதற்கு நீங்கள் பொறுப்பேற்க வேண்டிவரும். எனவே, அதுபோன்று இல்லாமல் உரை நிகழ்த்தும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** தேவையான எல்லா ஆதாரங்களையும் தருவதற்கு நான் தயாராக இருக்கிறேன். நான் ஆதாரம் இல்லாமல் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் தருவதற்கு தயாராக இல்லை என்று சொல்லவில்லை. நீங்கள் பேசுவதற்கு முன்னால் என்னிடம் காட்டி அனுமதி வாங்கவேண்டும்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** ஆதாரத்தோடுதான் நான் பேசுகின்றேன். முதலில் நான் சொல்ல வந்த கருத்தை நீங்கள் பதிவு செய்யவிடுங்கள். ** அதுபற்றிய உண்மை நிலை என்ன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் இது மாதிரி பேசக்கூடாது. இப்படிப் பேசுவது முறையில்லை. இதை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். நீங்கள் சொன்ன குற்றச்சாட்டை அவைக் குறிப்பிலிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில துறைகளில் 100—க்கும் மேற்பட்ட காலியிடங்கள் வரும். சில துறைகளில் 3 அல்லது 4 காலியிடங்கள்தான் வரும். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நான் அவைக் குறிப்பிலிருந்து நீக்கிவிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் ஜவாஹிருல்லா பேசுங்கள். அதுபோன்று குற்றச்சாட்டு இல்லாமல் பேசுங்கள். உங்களுக்கான நேரம் போய்க்கொண்டிருக்கிறது.*

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசு ஆசிரியர் தேர்வாணையம் நடத்தக்கூடிய TET தேர்வைப் பற்றி இப்போதுகூட விவாதம் நடைபெற்றது. இந்த ஆசிரியர் தகுதித் தேர்வு குறித்து National Council for Teacher Education, அதாவது தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம், 11—2—2011—லே எழுதிய கடிதத்தில், ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள இடஒதுக்கீடு அடிப்படையில் மதிப்பெண் சலுகை வழங்கலாம் என்று சொன்னது. அந்த அடிப்படையிலே, தமிழக அரசு 15—11—2011—லே ஓர் அரசாணையையும் வெளியிட்டது. அந்த அரசாணையிலே இடஒதுக்கீடு பிரிவினருக்கு மதிப்பெண் தளர்வு அளிக்க வழிவகை செய்யப்பட்டது. ஆனால், 2012—லும், 2013—லும் தமிழகத்தில் நடைபெற்ற TET தேர்விலே அந்த மதிப்பெண் சலுகையை வழங்கவில்லை. சென்ற பட்ஜெட் கூட்டத்தொடரில் எங்கள் கட்சியின் சார்பாகவும், இடதுசாரிகளின் சார்பாகவும் இந்த மதிப்பெண் தளர்வு மற்ற மாநிலங்களில் இருக்கிறது, அதை நாமும் அமல்படுத்தவேண்டுமென்று சொன்னோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*



**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான செய்தியைச் சொல்கிறார்கள். National Council for Teacher Education, guidelines கொடுத்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்திருக்கின்ற guidelines—ஐ நடைமுறைப்படுத்துவது நம்முடைய அரசாங்கத்தினுடைய பொறுப்பு. அவர்கள் கொடுக்கின்ற guidelines எல்லாவற்றையும் நாம் follow பண்ணவேண்டுமென்ற அவசியம் கிடையாது. விதிமுறைகளை வகுத்து, நமக்கு ஓர் ஆலோசனையாகக் கொடுத்திருக்கிறார்கள். அரசினுடைய உத்தரவாகப் போடவில்லை. மத்திய அரசாங்கம், மாநில அரசுக்கு உத்தரவாகப் போடவில்லை. ஓர் ஆலோசனை சொல்லியிருக்கிறார்கள். அந்த ஆலோசனையை ஏற்றுக்கொண்டு நம்முடைய சூழ்நிலைக்கு ஏற்ப, நம்முடைய கல்வித் தரத்திற்கு ஏற்ப, நம்முடைய கல்வித் தரம் தரமாக இருக்கவேண்டுமென்பதற்கு ஏற்ப நாம் நடைமுறையை மாற்றி அமைத்துக்கொள்ளவேண்டும். அவர்கள்கொடுக்கின்ற guidelines—ஐ ஒருசில மாநிலங்கள் பின்பற்றி இருக்கலாம். ஒருசில மாநிலங்கள் பின்பற்றாமல் இருக்கலாம். தகுதியான ஆசிரியரை தேர்வு செய்வதில் இடஒதுக்கீடு கேட்பது என்பது நியாயமில்லாதது. ஆகவே, இதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புரிந்துகொண்டு கருத்தை மாற்றிக்கொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

*பிற்பகல் 1—05*

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** தமிழ்நாடு சமூக நீதியைக் கடைப்பிடிப்பதிலே எடுத்துக்காட்டாக இருக்கக்கூடிய ஒரு மாநிலம். ஆந்திரா, கேரளா, பீகார் போன்ற பல்வேறு மாநிலங்களில் TET தேர்வில் மதிப்பெண் சலுகை கொடுத்திருக்கிறார்கள். இதைக் கொடுக்காததினால், திரு. கெஜேந்திரபாபு என்பவர் தேசிய தாழ்த்தப்பட்ட ஆணையத்திற்கு National Commission for Scheduled Castes—க்கு ஒரு மனுவை அளிக்கின்றார். அந்த மனுவிலே National Commission for Scheduled Castes *(குறுக்கீடு)* முடித்து விடுகிறேன். தமிழக பள்ளிக் கல்வித் துறைக்கு. . . *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித நேய மக்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜவாஹிருல்லா அவர்கள் தமிழக அரசினுடைய கொள்கை, இடஒதுக்கீட்டிற்கு எதிராக இருப்பதைப்போல ஒரு தோற்றத்தை உருவாக்குகிற வகையிலே கருத்தைப் பதிவு செய்கிறார். மாநில அரசைப் பொறுத்தவரையிலே, இரண்டு தேர்வுகளை, ஆசிரியர் தகுதித் தேர்விற்காக நடத்துகிறது. ஒன்று TET, இன்னொன்று SLET – State Level Eligibility Test, அது கல்லூரி ஆசிரியர்களுக்காக. பள்ளி ஆசிரியர்களுக்காக TET. கல்லூரி ஆசிரியர்களுக்காக இதே இடஒதுக்கீட்டு முறையைத்தானே பின்பற்றிக்கொண்டிருக்கிறோம். அப்படியானால், தமிழக அரசு கொள்கையில் மாறியிருக்கிறது என்று எப்படி சொல்லமுடியும்? இந்த TET–ஐப் பொறுத்தவரையிலே தேசிய அளவிலே ஒரு முறை பின்பற்றப்பட்டிருக்கிறது. அதிலே நமக்குப் பற்றாக்குறை இருக்கிறது என்று ஒரு கோரிக்கையாக முன்வைக்கலாமே தவிர, இந்தக் கொள்கையிலே குற்றம் இருக்கிறது என்று சொல்லமுடியாது. மாநில அரசைப் பொறுத்தவரையிலே இடஒதுக்கீட்டு முறையிலே, சமூக நீதியிலே, மிகத் தெளிவான ஒரு கொள்கையைப் பின்பற்றி வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) State Level Eligibility Test இருக்கிறது இல்லையா கல்லூரி ஆசிரியர்களுக்கு. இதையும் மாநில அரசுதானே நடத்துகிறது. இந்த TET–ஐப் பொறுத்தவரையிலே, தேசிய அளவில் இருக்கிற ஒரு கருத்தை நம்முடைய மாநில அரசு பின்பற்றி வருகிறது. இதிலே நம்முடைய மாநிலத்திலே பற்றாக்குறை வருகிறது, இதை மாற்றி அமைக்கவேண்டுமென்று ஒரு கோரிக்கை வைத்தால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தக் கோரிக்கையிலே நியாயம் இருந்தால், அதைப் பரிசீலிக்கப் போகிறார். ஆகையால், மாநில அரசின் கொள்கையிலே எந்தக் குறையும் இல்லை என்பதை நான் தெளிவுபடுத்தி பதிவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கொள்கையிலே மாற்றம் வேண்டும் என்றுதான், நான் சொல்கிறேன். TET தேர்விலே இந்த மாற்றம் வேண்டுமென்ற ஒரு கோரிக்கை வைத்தபோது அது இயலாது என்று சொன்னார்கள். இதனுடைய விளைவு என்னவென்றால்





** கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இப்போது ஒன்றும் இல்லை. நாங்கள் என்ன சொல்ல வருகிறோம் என்றால், ஏற்கெனவே நடைபெற்ற. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதேதோ மாநிலத்தோடு ஒப்பிட்டுப் பேசுகிறார். மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டுவந்திருக்கக்கூடிய மடிக்கணினி திட்டத்தை வேறு எந்த மாநிலத்தோடும் ஒப்பிட்டுப் பேச முடியாது. ஆதி திராவிட தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, மலைவாழ் மக்களுக்கெல்லாம் தனியார் எஞ்சினியரிங் கல்லூரியில் நிருவாக இடஒதுக்கீட்டில் இடம் கிடைத்தால்கூட அனைத்தும் இலவசமாக வழங்கப்படுகிறது. நம்முடைய அம்மா அவர்கள் கொண்டுவந்திருக்கிற அனைத்துத் திட்டங்களையும் வேறு எந்த மாநிலத்தோடும் ஒப்பிட்டுப் பேச முடியாது. சில திட்டங்களைப்பற்றித்தான் ஒப்பிட்டுப் பேச முடியும். வேறு சில திட்டங்களைப்பற்றியெல்லாம் ஒப்பிட்டுப் பேச முடியாது. மதிப்பெண்களில் வேறுபாடு இருக்கக்கூடாது. பத்தாம் வகுப்பு தமிழ்நாடு முழுவதிலும் உள்ள பள்ளிகளில் படிக்கலாம், தமிழ்நாடு முழுவதிலும் உள்ள கல்லூரிகளில் படிக்கலாம். சில இனங்களுக்கு 40 மதிப்பெண், சில இனங்களுக்கு 50 மதிப்பெண் என்றெல்லாம் பிரிக்க முடியுமா? தேவையில்லாமல் பிரிப்பதெல்லாம் நியாயம் இல்லாதது. வேலைவாய்ப்பில் இடஒதுக்கீட்டைப் பின்பற்றலாம், படிப்பதற்கு இடஒதுக்கீட்டைப் பின்பற்ற முடியாது. தகுதித் தேர்வுகளோடு ஒப்பிட்டுப் பேசுவது நியாயமற்றது. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுவது சரியில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, இப்போது நீங்கள் என்னுடைய அனுமதி இல்லாமல் ஒரு கடிதத்திலிருந்து படித்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. அதை

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

நீங்கள் என்னிடம் கொண்டுவந்து காட்டவேண்டும். என்னிடம் காட்டி, என்னுடைய அனுமதி வாங்கிவிட்டுத்தான் இங்கு பேசவேண்டும். என்னிடம் அனுமதி வாங்காமல் நீங்கள் பேசக்கூடாது. அதை அவைக் குறிப்பிலேயிருந்து நீக்குகிறேன். (குறுக்கீடு) நீங்கள் சரியாகப் பேசுங்கள். ஆதாரத்தை என்னிடம் கொண்டுவந்து காட்டுங்கள். என்னிடம் அனுமதி வாங்கிவிட்டு பிறகு பேசுங்கள்.

பிற்பகல் 1–10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓமந்தூரார் அரசினர் பல்நோக்கு சிறப்பு உயர் சிகிச்சை மருத்துவமனையில் 83 மருத்துவர்களை நியமிப்பதற்காக Medical Services Recruitment Board 27–10–2013–ல் ஒரு விளம்பரம் வெளியிட்டது. இந்த 83 மருத்துவர்கள் நியமனத்தில் இடஒதுக்கீடு கிடையாது என்று இணையதளத்தில் வெளியான அறிவிக்கையில் இருக்கின்றது. அதில் ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம் என்று சொல்லப்பட்டு இருக்கின்றது. இந்தியா முழுவதிலிருந்தும் விண்ணப்பிக்கலாம் என்று குறிப்பிட்டு இருக்கின்றார்கள். நான் என்ன கேள்வி எழுப்புகிறேன் என்றால், சமூக நீதிக்கு எடுத்துக்காட்டாக இருக்கக்கூடிய நம்முடைய மாநிலத்தில், அரசாங்கத்தினுடைய நிதியிலிருந்து அவர்களுக்கு சம்பளம் கொடுக்கும்போது, தமிழக அரசாங்கம் 69 விழுக்காடு இடஒதுக்கீட்டுக் கொள்கையைப் பின்பற்றிக் கொண்டிருக்கும்போது, இந்த 83 மருத்துவர்கள் நியமனத்தில் மட்டும் இடஒதுக்கீட்டுக் கொள்கையைப் பின்பற்ற மாட்டோம் என்று இந்த அரசு ஏன் சொல்கிறது என்பதை விளக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏழை, எளிய மக்களுக்கு, குறிப்பாக, தமிழ்நாட்டில் உள்ளவர்களுக்கு





மட்டுமல்லாமல், உலகெங்கும் உள்ள அனைத்து ஏழை, எளிய மக்களுக்கும் உலகத் தரத்திலான உயர் சிகிச்சை வழங்கும்பொருட்டு, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் புதியதாக உருவாக்கப்பட இருக்கின்ற பல்நோக்கு சிறப்பு உயர் சிகிச்சை மருத்துவமனைக்கு 83 மருத்துவர் பணியிடங்களும், 282 மருத்துவம் சாரா பணியிடங்களும் தோற்றுவிக்கப்படும் என்று ஆணையிட்டு, இந்தப் பணியிடங்கள் மாற்றுப் பணிமூலம் நிரப்பப்படும் என தெளிவாக அறிவிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள். மாற்றுப் பணிமூலம் நியமிக்கப்படுபவர்களுக்கு இட ஒதுக்கீடு பொருந்தாது. ஏனென்றால், இடஒதுக்கீட்டின் அடிப்படையில்தான் அவர்கள் முதன் முதலில் அரசு மருத்துவர்களாக நியமிக்கப்பட்டார்கள் என (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தெள்ளத் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். மாற்றுப் பணிமூலம் போதிய எண்ணிக்கையில் தேர்வு செய்யப்பட இயலவில்லை என்றால், மருத்துவமனையில் மருத்துவ சேவைகளை தடையின்றி வழங்க, ஒப்பந்த அடிப்படையில் இந்த மருத்துவமனைக்கு மருத்துவர்களை நியமனம் செய்ய நேரிடும். அப்படி ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்கின்றபொழுது, ஒப்பந்த அடிப்படையில் நியமனம் செய்யப்படுபவர்களுக்கு இட ஒதுக்கீடு உட்பட்ட எந்த பொது விதிகளும் பொருந்தாது என்பதையும் இந்த அவைக்கு நான் குறிப்பிட விரும்புகின்றேன்.

இன்னமும் ஒரு கருத்தை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 2006 முதல் 2011 வரை, தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு சங்கம், திருத்தப்பட்ட தேசிய காச நோய் கட்டுப்பாடு திட்டம், தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் மற்றும் மாநில நலவாழ்வுச் சங்கம் ஆகியவற்றிற்கு 540–க்கும் மேற்பட்ட மருத்துவர்கள், மருத்துவப் பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டனர். இவர்களை நியமிக்கும்பொழுது இடஒதுக்கீட்டு முறை பின்பற்றப்படவில்லை என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இன்னமும் சொல்லப்போனால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் இன்றைக்கு உருவாக்கி இருக்கக்கூடிய வரலாற்றுச் சிறப்புமிக்க மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் அதாவது Medical Services Recruitment Board என்ற அமைப்பின் மூலமாக 2,334 மருத்துவர்களும், மருத்துவப் பணியாளர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இதிலே மாண்புமிகு

முதலமைச்சர் அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு இட ஒதுக்கீட்டுமுறை முழுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டு இருக்கிறது என்பதையும் இந்த அவையிலே பணிவோடு பதிவு செய்ய விரும்புகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள், பேசி முடியுங்கள். ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுப் பணியில் வரக்கூடியவர்களுக்கு இடஒதுக்கீடு அடிப்படையில் ஏற்கெனவே அவர்கள் நியமனம் செய்யப்பட்டதனால், மீண்டும் இடஒதுக்கீடு தேவையில்லை. அதை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால், இது தொடர்பாக தமிழக அரசாங்கத்தின் சார்பாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட ஓர் அறிக்கையில், AIIMS பேராசிரியர்கள் வழக்கிலே இதுபோன்ற Super Speciality பணிகளுக்கு இடஒதுக்கீடு கடைப்பிடிக்கத் தேவையில்லை என்று ஒரு தீர்ப்பு சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே நாங்கள் இதற்கு இடஒதுக்கீட்டைப் பின்பற்றவில்லை என்று அந்த அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். இதைப்பற்றி நான் என்ன சொல்ல வருகின்றேன் என்றால், மண்டல் கமிஷன் வழக்கில் சொல்லப்பட்ட ஒரு observation–ஐ வைத்து அந்த AIIMS பேராசிரியர்கள் சங்கம் தொடுத்த வழக்கிலே உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி Altamas Kabir தலைமையில் ஒரு தீர்ப்பு சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், இதை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்குப் பிறகு “we will not follow this judgement” என்று மத்திய சுகாதாரத் துறை அமைச்சர் திரு. குலாம் நபி ஆசாத் நாடாளுமன்றத்திலே அறிவித்தார்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள், 20 நிமிடங்கள் ஆகிவிட்டன. உட்காருங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** அதற்குப் பிறகு டெல்லியில் உள்ள AIIMS மருத்துவமனையில் 148 மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். ரிஷிகேசில் உள்ள AIIMS–க்கும் மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டார்கள். எங்களுடைய கோரிக்கை என்னவென்றால், பல்நோக்கு மருத்துவமனையில் டெபுடேஷன்





அல்லாத மற்ற பணிகளுக்கு தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள இடஒதுக்கீடு பின்பற்றப்பட வேண்டுமென்பதைத்தான். இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 1–15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள். *(குறுக்கீடு)* போதும், உட்காருங்கள். நேரம் ஆகிவிட்டது. *(குறுக்கீடு)*

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள் கடைசியாகச் சொன்ன குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. எம். ஆறுமுகம், நீங்கள் பேசுங்கள். நீங்கள் பேசவில்லை என்றால், நான் திரு. சவுந்தரராசன் அவர்களை பேச அழைக்க வேண்டியிருக்கும். திரு. ஆறுமுகம், நீங்கள் பேசுங்கள்.

*(மனிதநேய மக்கள் கட்சியின் இரண்டு உறுப்பினர்களும் அவையிலிருந்து வெளியேறினர்.)*

டாக்டர் க. கிருஷ்ணசாமி 30 நிமிடங்கள் பேசினார். முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்களும் 28 நிமிடங்கள் பேசினார். இரண்டு பேரும் பேசவேண்டியதையெல்லாம் முழுவதுமாகப் பேசியபின் கடைசியில் வெளிநடப்பு செய்து அவைக்கு தவறான முன்னுதாரணமாக விளங்கியிருக்கிறார்கள். இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். அவர்கள் எடுத்திருக்கிற நிலை தவறானது என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திரு. ஆறுமுகம், நீங்கள் பேசுங்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாமன்றத்தில் 2014 ஆம் ஆண்டின் முதல் கூட்டத் தொடரின் தொடக்க நிகழ்வான ஆளுநர் உரையின்மீது. இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக ஒருசில கருத்துகளை இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. எம். ஆறுமுகம்] [2014 பிப்ரவரி 1

முதலில், வால்பாறையில் துணை வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் அமைவதற்கான முறையில் மாண்புமிகு முதல்வர் அவர்களும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் ஆணை பிறப்பித்தமைக்கு என்னுடைய நன்றியினை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, வால்பாறையில் இ.எஸ்.ஐ. மருத்துவமனை தொடங்க அரசு உத்தரவு பிறப்பித்ததற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், வால்பாறை சட்டப் பேரவை தொகுதி மக்கள் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும் நன்றியினையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

வால்பாறையில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் தேயிலை காப்பி தோட்டத்தில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச கூலி நாள் ஒன்றுக்கு 136 ரூபாய் என்று அறிவித்ததை குறைத்து, 104 ரூபாய் என ஒப்பந்தம் போடப்பட்டது. இப்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சியில் நாள் ஒன்றுக்கு குறைந்தபட்ச சம்பளம் 186 ரூபாய் வழங்கப்படுமென்று அறிவித்திருப்பதையும், அதை முழுமையாக அமல்படுத்தியிருப்பதையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்கும்மேல், தொழிலாளர் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்த முயற்சியினால் தொழிற்சங்கம் சார்பாக நாள் ஒன்றுக்கு 198 ரூபாய் சம்பளமாக வழங்கப்படும் என்று பேசி முடித்ததன் விளைவாக தமிழகத்தில் ஒரு இலட்சத்து ஐயாயிரம் தோட்டத் தொழிலாளர்கள் அதிக சம்பளம் பெற்றுக்கொண்டிருப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், தொழிலாளர் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியையும், பாராட்டையும் தெரிவித்து, உரையை நான் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய பல்வேறு அம்சங்களைப் பற்றி எனக்கு முன்னாலே பேசிய நம்முடைய மாமன்ற உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளை எடுத்துச் சொன்னார்கள். இதிலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய பல்வேறு கருத்துகளை, திட்டங்களை, சமூகப் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பற்றிய அறிவிப்புகளை படிக்காமல், சபாநாயகருக்கு முன்னாலேயே ஆளுநர் உரையை



2014 பிப்ரவரி 1] [திரு. எம். ஆறுமுகம்]

கிழித்தெறிந்துவிட்டு, இதில் ஒன்றுமே சொல்லப்படவில்லை என்று குறிப்பிட்டிருப்பது வெட்கக்கேடான விஷயம் மட்டுமல்ல, இப்படிப்பட்ட நடவடிக்கை சரியில்லை என்பதை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

பிற்பகல் 1—20

இந்த ஆளுநர் உரையில் வறுமையை ஒழிப்பதற்கான சமூகப் பொருளாதாரத் திட்டங்கள், 10 ஆயிரத்து 500 இளைஞர் பாதுகாப்புப் படை, காவல் துறையில் 24,503 கூடுதல் பணியிடங்கள், 295 மீனவர்கள் அவர்களது 45 படகுகளை விடுவிப்பதற்காக முதலமைச்சர் அவர்கள் எடுத்துக் கொண்ட நடவடிக்கை, கச்சத் தீவை மீட்டெடுப்பதற்காக முதலமைச்சர் அவர்கள் எடுத்த தொடர் நடவடிக்கைகள், காவேரி நடுவர் மன்றம் இறுதி ஆணையை வெளியிடச் செய்து, முழுமையாக நிறைவேற்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில் 312 கருத்துரைகள் நிறைவேற்றப்பட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துள்ள நடவடிக்கைகள், புதிய வருவாய் வட்டங்களை உருவாக்குவதற்காக முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கக்கூடிய நடவடிக்கைகள், அம்மா திட்டத்தின் மூலமாக சாதாரண ஏழையெளிய மக்கள் பயன்பெறக்கூடிய முறையில் சாதிச் சான்றிதழ்கள், வருமான வரிச் சான்றிதழ்கள், அதைப்போல ஓய்வூதியத் திட்டங்கள் வழங்குவதற்கான அம்மா திட்டம், புதிய அரசுக் கல்லூரிகள் தொடங்கியுள்ளது பற்றிய அறிவிப்புகள், இசை மற்றும் கவின் கலைத் துறைகளுக்காக தனியாக பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டுள்ளது பற்றிய அறிவிப்பு, விளையாட்டுத் துறையை ஊக்குவிக்க எடுத்துள்ள நடவடிக்கைகள், வறட்சி நிவாரணம் வழங்க எடுத்துள்ள நடவடிக்கைகள், பொது விநியோகத் திட்டத்தின்கீழ் 20 கிலோ விலையில்லா அரிசி வழங்குவது, பண்ணை பசுமைக் காய்கறிக் கடைகள் தொடங்கப்பட்டுள்ளது பற்றிய அறிவிப்புகள், 290 அம்மா உணவகங்கள் தொடங்கியிருப்பது பற்றிய அறிவிப்புகள், சாலை மேம்பாட்டுத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு, மின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக அரசு எடுத்திருக்கக்கூடிய நடவடிக்கைகள், மாணவர்களுக்கு காலணி முதல் கணினிவரை விலையில்லாமல் வழங்குவதற்கான

[திரு. எம். ஆறுமுகம்] [2014 பிப்ரவரி 1

திட்டங்கள், பசுமை வீடு கட்டும் திட்டம், குழந்தைகளுக்கு இலவச கட்டாயக் கல்வியை உறுதிப்படுத்துவதற்கான திட்டங்கள், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தை அரசு ஏற்று நடத்த சட்டம் இயற்றப்பட்டதற்கான திட்டங்கள், முதலமைச்சருடைய மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், ஆதி திராவிட பழங்குடியினருக்கு உயர் கல்வி உதவித் தொகையை 396.88 கோடி ரூபாயிலிருந்து 936.46 கோடி ரூபாயாக உயர்த்தியுள்ளதற்கான அறிவிப்புகள், ஓய்வூதியம் ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கான அறிவிப்புகள், இதற்காக 4 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பது, இப்படிப்பட்ட பல திட்டங்கள் குறித்து இந்த ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கின்றோம், பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

மத்திய அரசாங்கத்தைப் பொறுத்தமட்டிலும் நேற்றையதினம் பேசிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய துணைத் தலைவர் மரியாதைக்குரிய பாலபாரதி அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, சர்வதேச பொருளாதாரத்தில் ஏற்பட்டிருக்கக்கூடிய சரிவின் காரணமாக மத்திய அரசாங்கம் கடைப்பிடித்திருக்கக்கூடிய புதிய பொருளாதாரக் கொள்கையினால் ஏற்பட்டிருக்கக்கூடிய பாதிப்பு, மத்திய அரசாங்கம் கடந்த காலத்தில் ஏற்றுக் கொண்ட டங்கல் திட்டம், காட் ஒப்பந்தம், உலகமயக் கொள்கை, Exit Policy, ஏற்றுமதி, இறக்குமதிக் கொள்கை, புதிய ஜவுளிக் கொள்கை, இவற்றினால் நாட்டின் ஒட்டுமொத்தமான வளர்ச்சி கடுமையாகப் பாதிக்கப்பட்டு, அதனால் பணவீக்கம், ரூபாய் நோட்டினுடைய மதிப்பு குறைவு, விலைவாசியேற்றம், வேலையில்லாத் திண்டாட்டம், ஆலை மூடல், ஆட் குறைப்பு நடவடிக்கைகள், உற்பத்தியில் தேக்கம் போன்ற விளைவுகளோடு மட்டுமல்லாமல், இந்த 5 ஆண்டுகாலத்தில் மட்டும் இந்தியாவில் சிறு, குறு, பெருந்தொழில்களை உள்ளடக்கிய மூன்றரை இலட்சம் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. மத்திய அரசாங்கம் கடைப்பிடித்து வரக்கூடிய இந்தக் கொள்கைகளினுடைய விளைவாக தமிழகத்தினுடைய வளர்ச்சியும் பாதிக்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருப்பதில், எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. இவ்வளவு நெருக்கடிகளுக்கு மத்தியிலும்கூட, தமிழகத்தை



2014 பிப்ரவரி 1] [திரு. எம். ஆறுமுகம்]

நெருக்கடியிலிருந்து சமாளித்து மீட்டிட நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்துள்ள முயற்சிகளை இந்திய கம்யூனிஸ்டு கட்சி பாராட்டுகிறது, வரவேற்கிறது. அதேநேரத்தில் இங்கே ஒரு கருத்தை நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

கடந்த 10 நாட்களுக்கு முன்னால் தென் இந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படக்கூடிய கோவை மாநகரத்தில், கர்நாடக மாநிலத்தினுடைய முதல்வர் அவர்கள் முகாமிட்டு, கோவையில் இருக்கக்கூடிய தொழிலதிபர்களையெல்லாம் அழைத்து, கர்நாடக மாநிலத்திலே தொழில் தொடங்க வேண்டுமென்று சொன்னார். இரண்டு நாட்களுக்கு முன்னாலே தென்னிந்திய மில் முதலாளிகள் சங்கத்தினுடைய தலைவர் அவர்களும், சிறு, குறு தொழில்கள் சங்கத்தினுடைய தலைவர் அவர்களும் தங்களுடைய கருத்தை வெளிப்படையாகவே சொல்லியிருக்கின்றார்கள். இதுவரை மத்திய அரசாங்கத்தினுடைய இந்தத் தவறான கொள்கையினுடைய விளைவாக கர்நாடக மாநிலத்தில் கிட்டத்தட்ட 119 பஞ்சாலைகளில், 62 பஞ்சாலைகள் மூடப்பட்டிருக்கின்றன. சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில்கள் மூடப்பட்டிருக்கின்றன. அதுபோல வெளியேற்றக்கூடிய கொள்கையின் விளைவாக தானாக ஓய்வுபெறும் திட்டம் அல்லது அவர்களை வெளியேற்றக்கூடிய நடவடிக்கைகளின் மூலமாக தொழிலாளர்களின் வாழ்க்கை கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

பிற்பகல் 1—25

தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்றழைக்கப்படும் கோவை மாவட்டம், பஞ்சாலைத் தொழிற்சாலைகள் நிரம்பியிருக்கக்கூடிய மாவட்டமாக விளங்குகிறது. அதேபோல, கோவை மாவட்டமானது சிறு, குறு தொழில்கள் நிறைந்திருக்கக்கூடிய மாவட்டம்; வார்ப்படத் தொழிற்சாலைகள் நிரம்பியிருக்கக்கூடிய மாவட்டம்; கிரைண்டர், மிக்சி போன்றவை தயார் செய்யக்கூடிய தொழிற்சாலைகள் நிறைந்திருக்கும் மாவட்டமாகும். அதோடுமட்டுமல்லாமல், கோவை மாவட்டம் பம்ப் செட் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலைகள் நிறைந்திருக்கும் மாவட்டமாகும். இந்தத் தொழில்களெல்லாம் கோவை மாவட்டத்தில் தொடங்கப்படுவதற்கு அடிப்படையான காரணம், கோவை மாவட்டத்தில் நிலவும் சீதோஷண நிலைதான்.

கர்நாடக மாநிலத்தில் உள்ள சாம்ராஜ் நகர் ஒரு குளிர் பிரதேசம். அங்கு எந்த முதலாளியாவது பஞ்சாலையைத் தொடங்க முன்வருவாரா? மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் என்ன சொல்கிறார் என்று தெரியவில்லை. ஊட்டியில் பஞ்சாலையைத் தொடங்கச் சொன்னால், அங்கே பஞ்சாலை எவ்வாறு செயல்படும் என்று எனக்குப் புரியவில்லை. அதனால் தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என்றழைக்கப்படும் கோவை மாவட்டத்திலிருந்து கர்நாடகா மாநிலத்திற்கு தொழில் தொடங்குவதற்காக யாரும் செல்ல மாட்டார்கள். ஆனால், ஒரே ஒரு விஷயத்தை மட்டும் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். கோவையில் இருக்கக்கூடிய தொழில்களை இன்னும் பரவலாக்குவதோடு மட்டுமல்லாமல், சர்வதேச தரத்தில் கோவை மாவட்டத்தில் தொழில் தொடங்கவேண்டுமென்று பலர் விரும்புகிறார்கள்.

தேசிய நெடுஞ்சாலை, என்.எச்.47, விமான நிலையம், இரயில் நிலையம், கொச்சி துறைமுகம் போன்றவை அருகில் இருக்கிற காரணத்தினாலே, கோவை மாவட்டத்தைத்தான் தொழிலதிபர்கள் preference–ஆக எடுத்துக்கொள்கிறார்களேதவிர, வேறு மாநிலத்திற்குச் செல்லமாட்டார்கள். ஆனால் கோவையில் இருக்கக்கூடிய தொழில்கள் இன்னும் பிரகாசமாகச் செயல்படவேண்டுமென்று சொன்னால், மின்சாரம் தடையின்றிக் கிடைக்க வேண்டும். இப்பொழுது தமிழக அரசு, கூடுதலான மின்சாரத்தைப் பெறுவதற்கான முறையில் எடுத்துவரக்கூடிய நடவடிக்கைகளின் விளைவாக, ஒட்டுமொத்தமாகவே மின்சார வெட்டு இல்லாத சூழ்நிலையை உருவாக்குவார்களேயானால், நிச்சயமாக எந்தத் தொழிலும் கோவை மாவட்டத்தைவிட்டுப் போகாது என்பதனை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் வளர்ச்சி பெறுவதற்காக 'கோவை மாவட்டத்தில் மின்வெட்டு இல்லாத நிலை ஏற்படச் செய்வார்களேயானால்' என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள் சொன்னார்கள்.





அது ஏற்கெனவே செய்து முடித்தாகிவிட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த இரண்டு நாட்களுக்கு முன்பாக, தமிழகத்தில் இதுவரை இல்லாத அளவிற்கு, உச்சபட்ச மின் உற்பத்தியாக 12,799 மெகா வாட் உற்பத்தி செய்யப்பட்டு, விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது என்கிற பெரும் சாதனையை இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிகழ்த்தியிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, இதற்கு முன்பிருந்த மின்வெட்டுப் பிரச்சினை, இனிமேல் தொடராது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மத்திய அரசாங்கத்தின் மேற்காணும் கொள்கைகளினால், தமிழகத்திற்கு மத்தியத் தொகுப்பிலிருந்து பெறக்கூடிய மண்ணெண்ணெய், பாமாயில், பருப்பு போன்றவற்றின் அளவு குறைக்கப்பட்டு, தமிழகத்தில் வெற்றிகரமாக நடைபெற்றுவரும் பொது விநியோகத் திட்டத்தைச் சீர்குலைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தைத் திருநாளில் ஒரு கோடியே 86 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ரூ.100/– ஆகியவற்றை வழங்கி, வேறு எந்த மாநிலத்திலும் செய்யாத சாதனையை மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அரசு செய்துள்ளது என்பது பாராட்டுதலுக்குரியது மட்டுமல்ல, வரவேற்கக்கூடியதும் ஆகும். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, கடந்த ஆண்டு கடுமையான வறட்சியைச் சந்தித்தபோது, சென்னை நீங்கலாக அனைத்து மாவட்டங்களையும் வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் என அறிவித்து, 50 விழுக்காட்டுக்குமேல் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.1,614 கோடி அளவிற்கு இழப்பீட்டு நிவாரணத் தொகையை வழங்கி, வேறு எந்த மாநிலத்திலும் செய்யாத, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் செய்திருக்கக்கூடிய சாதனையைப் பாராட்டுகிறோம், வாழ்த்துகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

[திரு. எம். ஆறுமுகம்] [2014 பிப்ரவரி 1

தமிழகத்திலே சட்டம்—ஒழுங்கைச் சீர்குலைக்கும் நோக்கோடு மரக்காணம், தருமபுரி போன்ற இடங்களில் 2 சமூகங்களுக்கிடையே ஏற்பட்ட கலவரத்தை தன் புத்திக்கூர்மையால் கட்டுப்படுத்தி, அவை மேலும் பரவாமல் தடுத்து, அதன் விளைவாக சமூக விரோத சக்திகள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய நடவடிக்கைகளினால் ஒடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1—30

அதேபோல, தமிழகத்தில் தீவிரவாதம் வேரூன்றாமல் தடுப்பு நடவடிக்கையாக, இரண்டு முக்கிய தீவிரவாதிகள் ஆந்திரப்பிரதேசத்தில் உள்ள புத்தூரில் பதுங்கியிருந்த இடத்தைச் சுற்றி வளைத்து, அவர்களைக் கைது செய்த நிகழ்வும், கோவை, உக்கடம் பகுதியில் பீஹாரிலிருந்து கடத்தி வரப்பட்ட துப்பாக்கி மற்றும் வெடி குண்டுகளைக் கைப்பற்றியதும், தீரம் மிக்க சிறந்த சாதனைகளாகும்.

அதேநேரத்தில் சில இடங்களில் நடைபெறும் சங்கிலி பறிப்பு போன்ற நடவடிக்கைகளை மரியாதைக்குரிய காவல் துறை அதிகாரிகள் கண்டறிந்து, நடவடிக்கை எடுத்து தடுத்து நிறுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, அவர்களின் வலைகளை அறுத்தும், மீன்களை சேதப்படுத்தியும் சிறை பிடித்துச் செல்லப்பட்டதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எடுத்த இடைவிடாத முயற்சியின் காரணமாக, விடுதலை செய்யப்பட்டதும், எதிர்காலத்தில் இம்மாதிரியான நிகழ்வுகள் நடைபெறாமல் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையும் மீனவர்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. மத்திய அரசாங்கத்தினுடைய கையாலாகாத்தனத்தை இது வெளிப்படுத்துகிறது.

கச்சத் தீவை மீட்டெடுக்க வேண்டுமென்பதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உறுதியோடு போராடி வருவதையும், மத்திய அரசு கண்டுகொள்ளாமல் இருப்பதையும், தமிழக மீனவர்களுக்குச் செய்யும் துரோகமாகவே நான் கருதுகிறேன்.



2014 பிப்ரவரி 1] [திரு. எம். ஆறுமுகம்]

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனத்தின் பங்கினை தனியாருக்கு மத்திய அரசு விற்க முற்பட்டபோது, மாநில அரசு வாங்கியது இந்த அரசின் சாதனைகளில் ஒன்றாகும் என்று நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தொழில் துறையிலும், வேளாண்மைத் துறையிலும் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியினால் வளர்ச்சியும் ஏற்பட வாய்ப்புள்ளது. பொருளாதாரத்திற்கு ஊக்கம் அளிப்பதற்காக, 2013—2014 ஆம் ஆண்டிற்கான திட்டச் செலவினமாக 37 ஆயிரத்து 128 கோடி ரூபாய் அளவிற்கு உயர்த்தியுள்ளதும், 2014—2015 ஆம் ஆண்டில் திட்ட அளவு 42 ஆயிரத்து 185 கோடி ரூபாய் அளவிற்கு மேலும் உயர்த்தியுள்ளதும் வரவேற்கத்தக்கதாகும். இந்த அறிவிப்புகள் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு எடுத்துக்காட்டாகவே அமைந்துள்ளன. பொதுமக்களுக்கு பல்வேறு சலுகைகளை விரைவாக அளித்திடவும், அவற்றை பொதுமக்கள் எளிதாக அணுகிப் பெறவும், தேவையான, முனைப்பான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருவதை பாராட்டுகிறோம்.

குறிப்பாக, 2012—2013 இல் ஏற்படுத்தப்பட்ட 9 வருவாய் வட்டங்களோடு மேலும் 25 புதிய வருவாய் வட்டங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசு அலுவலர்கள் கிராமங்களுக்குச் சென்று, பொதுமக்களின் குறைகளைக் கேட்டறிந்து, உடனுக்குடன் தீர்வு காணும் வகையில், அம்மா திட்டம் அனைத்து கிராமங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) பல்வேறு சான்றிதழ்கள், சமூகப் பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டங்கள், பட்டா மாறுதல்கள் தொடர்பாக 33.13 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது, இந்தியாவிற்கே வழிகாட்டியாக அமைந்துள்ளது. இது மக்களின் ஒட்டுமொத்தமான வரவேற்பைப் பெற்றுள்ளது. இருப்பினும், இந்த இரண்டு மாத காலமாக ஓய்வூதியம் வழங்கப்படாமல் இருப்பதை அரசு கவனத்தில் கொண்டு, உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் 500 ரூபாய் வீதம் வழங்கப்பட்ட

[திரு. பி.வி. ரமணா] [2014 பிப்ரவரி 1

ஓய்வூதியம், மாண்புமிகு அம்மா அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்றவுடன் 1,000/– ரூபாயாக உயர்த்தப்பட்டு, வழங்கப்பட்டு வருகின்றது. இன்றைக்கு தமிழகம் முழுவதும் கிட்டத்தட்ட 37 இலட்சம் பயனாளிகள் மாதந்தோறும் ரூபாய் 1,000/– ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள். இந்த 37 இலட்சம் பயனாளிகளுக்கும் ஓய்வூதியம் சரியான முறையிலே தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். நிலுவையிலுள்ள ஓய்வூதியமும், மாவட்ட ஆட்சியர்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டவுடன், விரைவில் வழங்கப்பட்டுவிடும் என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** நன்றி. சென்னை மற்றும் பிற நகரங்களில் தொடங்கப்பட்டுள்ள 290 அம்மா உணவகங்கள் ஏழைகளுக்குக் கிடைத்துள்ள வரப்பிரசாதமாகும். இந்த உணவகங்களை பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள் மற்றும் ஏழைகள் குடியிருக்கும் பகுதிகளுக்கும் விஸ்தரிக்க வேண்டுமென்று மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். அதைச் செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மின்சார வாரியம் சந்தித்து வந்த மோசமான நிதிநிலைமையைச் சரிசெய்வதற்காக நிதிநிலை மறு சீரமைப்புத் திட்டத்தைச் செயல்படுத்திய முதல் மாநிலம் தமிழ்நாடுதான். இத்திட்டத்தின்படி, 6,353 கோடி ரூபாய்க்கான கடன் தொகையை மாநில அரசே ஏற்றுக்கொண்டு, ஐந்தாண்டு காலத்தில் திருப்பிச் செலுத்தும் வழிமுறையைக் கையாண்டுள்ளது. காற்றாலைமூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைக் கொண்டுசெல்ல மின் கடவு மற்றும் மின் விநியோகக் கட்டமைப்பை வலுப்படுத்தவும் பெரும் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. எதிர்காலத்தில் மின் தேவையை உறுதி செய்வதற்கான நீண்டகால மின்சாரக் கொள்கைக்கான ஒப்பந்தங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த அறிவிப்புகள் அனைத்தும் பாராட்டுதலுக்குரியதாகும்.

மேலும், புதிய அனல் மின் மற்றும் நீர் மின் உற்பத்தித் திட்டங்களையும் அரசு செயல்படுத்த முனைந்துள்ளது.



2014 பிப்ரவரி 1] [திரு. எம். ஆறுமுகம்]

எதிர்காலத்தில் மின்வெட்டே இல்லாத சூழலை உருவாக்கி, தொழில் துறைக்குத் தடையில்லாத மின்சாரம் வழங்குவதை உறுதி செய்ய எடுத்துள்ள முயற்சிகள் பாராட்டுதலுக்குரியதாகும். 1,697 கிலோ மீட்டர் நீளம் உள்ள சாலைகளை அகலப்படுத்தவும், 3,529 கிலோ மீட்டர் நீளம் உள்ள சாலைகளை மேம்படுத்தவும், 229 பாலங்கள் மற்றும் சிறு பாலங்கள் அமைப்பதற்கும் 2013–2014 ஆம் ஆண்டில் 2,500 கோடி ரூபாய் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

பிற்பகல் 1–35

தொழில் துறையை ஊக்குவிக்க அரசு பல முயற்சிகள் மேற்கொண்டாலும், கர்நாடக முதல்வர் கோவையில் தொழிலதிபர்கள் கூட்டம் நடத்தி, கர்நாடக மாநிலத்தில் தொழில் தொடங்குமாறு அவர்களை அழைத்திருப்பதை அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

தமிழக அரசு காலணி முதல் மடிக் கணினி வரை மாணவர்களுக்கு விலையில்லா பொருட்கள் வழங்கி வருவது எந்த மாநிலத்திலும் இல்லாத சிறப்பம்சம் ஆகும். இதனால் பள்ளி, கல்லூரிக்குச் செல்லும் ஏழை, எளிய மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

வேலைவாய்ப்பைத் தேடுபவர்களையும், வேலைவாய்ப்பு அளிப்பவர்களையும் இணைக்கும் தளமாக மாநில வேலைவாய்ப்பு இணையதளம் ஒன்று தொடங்கப்படும் என்ற அறிவிப்பு வரவேற்கக்கூடியதாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்பொழுது கோயம்புத்தூர் மாவட்டம் முழுவதும் மிருகங்களின் தொல்லை அதிகமாகிவிட்டது. முதலில், வால்பாறையில் மட்டும்தான் இருந்தது. இப்பொழுது தொண்டாமுத்தூர், பெரியநாயக்கன்பாளையம், மேட்டுப்பாளையம், வால்பாறை போன்ற பகுதிகளில் யானை, சிறுத்தைப் புலி, கரடி போன்ற மிருகங்களின் தொல்லை அதிகரித்திருக்கிறது. நேற்றையதினம்கூட ஒரு சிறுத்தைப் புலி வால்பாறையிலுள்ள வாழைத் தோட்டத்திற்கு வந்து, முன்னாள் கவுன்சிலர் வீட்டு நாயைக் கவ்விக் கொண்டு, மாடியில் வைத்து சாப்பிட்டுவிட்டுப் போயுள்ளது. மிருகங்களைக் கொல்லக்கூடாது என்பதிலே எங்களுக்கு மாற்றுக் கருத்து இல்லை. மிருகங்கள் எங்களைக் கொன்றால் நாங்கள் என்ன செய்வது? இது ஒரு

மோசமான நடவடிக்கை. மனிதனுடைய உயிரை குறைத்து மதிப்பிடாமல், மிருகங்களிடமிருந்து மனிதர்களைப் பாதுகாப்பதற்கான சிறப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. எம்.எஸ்.எம். ஆனந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை பகுதியானது கேரளா மாநிலத்தையொட்டி வருவதால், ஒவ்வொரு வருடமும் அக்டோபர் மாதம் முதல் பிப்ரவரி மாதம் முடிய, குறிப்பாக சபரிமலை கோயில் திறப்பு காலங்களிலும், பருவநிலை மாற்றத்தினாலும் யானைகளும், வன விலங்குகளும் வால்பாறை பகுதிக்கு இடம் பெயர்கின்றன. அவ்வாறு இடம்பெயரும்போது, குறிப்பிட்ட சில தனியார் எஸ்டேட் பகுதிகளில் யானைகள் செல்லும் வழித்தடங்களின் வழியாக இடம்பெயர்கின்றன. இதனைக் கண்காணிக்க வனப் பணியாளர்கள் தீவிர ரோந்துப் பணிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

யானைகள், குடியிருப்புப் பகுதிகளில் வராமல் தடுப்பதற்காக, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து, பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எஸ்டேட் பகுதியிலுள்ள குடியிருப்புகளுக்கு அருகிலுள்ள பகுதிகளில் சூரிய மின்வேலிகள் அமைக்கப்பட்டுள்ளன. வன உயிரினங்கள் பொதுமக்கள் வசிக்கும் பகுதிக்குள் நுழைவதைக் கண்டறிந்து, அவற்றை வனப் பகுதிகளுக்குள் திருப்பி அனுப்புவதற்கு வனப் பணியாளர்களைக் கொண்ட தனிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. பொதுமக்களின் உயிர் மற்றும் உடைமைகளைக் கருத்தில்கொண்டு, இரவு மற்றும் மாலை நேரங்களில் வனப் பணியாளர்கள் மற்றும் வேட்டைத் தடுப்புக் காவலர்கள் வாகனங்களில் கண்காணிப்புப் பணிகளை மேற்கொண்டு, பொதுமக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றார்கள். யானைகள் நடமாட்டம் உள்ளதாகக் கண்டறியப்பட்ட பகுதிகளில் "Early Warning Alert System" என்ற முன்னெச்சரிக்கை ஒலி மற்றும் ஒளி எழுப்பும் கருவிகள் நிறுவப்பட்டு, பொதுமக்களுக்கு யானைகள் நடமாட்டம் இருப்பது குறித்து முன்னதாகவே தகவல் தெரிவிக்கப்படுகிறது. யானைகள்



நடமாட்டம் உள்ளபோது கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் குறித்து எஸ்டேட் நிருவாகத்திற்கும், பொதுமக்களுக்கும் அவ்வப்போது விழிப்புணர்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. யானைகள் நடமாட்டம் உள்ள பகுதிகள் முன்கூட்டியே கண்டறியப்பட்டு, அப்பகுதிகளுக்குச் செல்ல வேண்டாம் என பொதுமக்களுக்கு ஒலிபெருக்கியின்மூலம் அறிவிப்புகள் செய்யப்படுகின்றன. எஸ்டேட் பகுதியிலுள்ள குடியிருப்புகளில் வாழை, கரும்பு போன்ற உணவுப் பொருட்களை வளர்ப்பதைத் தவிர்க்கவும் பொதுமக்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. யானைகள் செல்லும் வழித்தடங்களின் அருகில் உள்ள ரேஷன் கடைகளில் அரிசி, சர்க்கரை, உப்பு போன்ற உணவுப் பொருட்கள் பாதுகாப்பின்றி வைக்கப்படுவதால், யானைகள் கவரப்பட்டு, தாக்குவதற்குக் காரணமாக உள்ளதால், துறை அதிகாரிகளைக் கொண்டு கூட்டம் நடத்தப்பட்டு, பாதுகாப்பு இல்லாத கட்டடங்களில் பொருட்கள் இருப்பு வைக்கப்பட்டுள்ளதைத் தவிர்க்கவும், நடமாடும் அங்காடிகள் அமைப்பதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

யானைகளால் அசம்பாவிதங்கள் ஏற்படும் நேரங்களில், அது தொடர்பான தகவல்கள் மற்றும் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து வால்பாறை பகுதியில் வனத் துறையால் நிறுவப்பட்டுள்ள மேலாண்மை மீட்புக் குழு மையத்திற்குத் தகவல் அனுப்பப்பட்டு, அந்த மையத்தில் செயல்படும் குழுவினரால் உடனடியாக மீட்புப் பணிகள் மற்றும் பாதுகாப்புப் பணிகளை போர்க்கால அடிப்படையில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு மேற்கொண்டு வருகிறது என்பதை இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. ஆனால், எஸ்டேட்டிலே வாழக்கூடிய தொழிலாளர்களெல்லாம் அரிசி, பருப்பு, கோதுமை போன்றவற்றைக் கொண்டுபோய் எங்கு பதுக்கி வைப்பார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. யானைக்கு அந்தப் பொருட்களுடைய வாசம் படாமல் இருப்பதற்கு, அதனுடைய உணர்வுக்கு வராமல் இருப்பதற்கு, எப்படி அந்தப் பொருட்களைப்

[திரு. எம். ஆறுமுகம்] [2014 பிப்ரவரி 1

பதுக்கி வைப்பது என்பது தெரியவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கென ஒரு கூட்டம் நடத்தி, இனிமேல் எஸ்டேட்டில் இருக்கக்கூடிய தொழிலாளர்களெல்லாம் அந்தப் பொருட்களை underground–ல் வைப்பதா, இல்லையென்றால் அட்டத்திலே வைப்பதா என்று சொல்வார்களென்றால், எங்களுக்கு ஒன்றும் பிரச்சினை இல்லையென்று நினைக்கிறேன். அதற்கான கூட்டம் நடத்துங்கள். இப்போது அரசுப் போக்குவரத்துக் கழகம் குறித்துப் பேசவேண்டியிருப்பதால் எனக்கு கொஞ்சம் time கொடுத்தால் சீக்கிரம் முடித்துவிடுகிறேன்.

பிற்பகல் 1–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது என்ன time ஆகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் பாருங்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** நாங்கள் இன்னும் இரண்டுபேர்தான் பேச இருக்கிறோம். சீக்கிரம் முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை. Time என்ன என்று பாருங்கள், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** பொங்கல் திருநாள், தைத் திருநாள், தீபாவளித் திருநாள் போன்ற பண்டிகை நாட்களில், தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய பயணிகள் சுலபமாக அவர்கள் சொந்த ஊருக்குச் செல்வதற்காக மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் ஆணையின்பேரில் நமது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள், ஆயிரக்கணக்கான பேருந்துகளை ஏற்பாடு செய்து, அந்தப் பேருந்துகளின் வாயிலாக அவர்களின் சொந்த ஊர்களுக்குச் சுலபமாகச் செல்வதற்காக சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். இதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் இந்த நேரத்திலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த காலத்தில் இப்படிப்பட்ட சௌகரியங்கள் இல்லை. மைல் கணக்கில் மக்கள் வரிசையில் நிற்பதை நாங்கள் பார்த்திருக்கிறோம். பேருந்தில் ஏறுவதற்கு அடிதடியே நடக்கும். அதைக் கட்டுப்படுத்துவதற்காக காவல் துறை அதிகாரிகள் இலத்தியைச் சுற்றியதைத்தான் நாங்கள் பார்த்திருக்கிறோம்.



2014 பிப்ரவரி 1] [திரு. எம். ஆறுமுகம்]

ஆனால், இப்போது ஓரிடத்தில்கூட, சிறு அசம்பாவிதம்கூட நடைபெற்றதாக புகார்கள் வரவில்லை. இந்த வசதி தொடரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இரயில்வே துறையில் வருடத்திற்கு 1.46 கோடி ரூபாய் பட்ஜெட்டில் நிதி ஒதுக்குகிறார்கள். இரயில் நிலையங்களில் பாட்டிலில் அடைக்கப்பட்டு விற்கப்படும் குடிநீரை எங்கிருந்து பிடித்துக் கொண்டுவருகிறார்கள் என்று தெரியவில்லை. ஒரு பாட்டில் குடிநீர் 15 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ஆனால், நம்முடைய போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் விற்கப்படும் அம்மா குடிநீர் 10 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. அதை இன்னும் விரிவுபடுத்தவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா குடிநீர்த் திட்டத்தை விரிவுபடுத்தி, இரயில்வே நிலையங்களில் விற்றால், இரயில்வே துறையால் 15 ரூபாய்க்கு விற்கப்படும் குடிநீரின் விற்பனை நின்றுவிடும் என்று நினைக்கிறேன். எனவே, அம்மா குடிநீரை இன்னும் பல்வேறு இடங்களுக்கு விஸ்தரிப்பு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நேரத்திலே போக்குவரத்துத் துறையில் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய தொழிலாளர்களுடைய ஊதிய உயர்வுப் பிரச்சினை சம்பந்தமாக அதன் தொழிற்சங்கத்தினுடைய பேச்சுவார்த்தை ஏன் நடைபெறவில்லை? கடந்த காலத்தில் இருந்த Break–down, இப்போது இருக்கிறதா? Diesel performance எப்படி இருக்கிறது என்பதற்கான விவரங்கள் என்ன? நான் சொல்வது என்னவென்றால், அந்தப் பேச்சுவார்த்தையின் முடிவில் போக்குவரத்துத் தொழிலாளர்களின் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. அந்த விவரங்களை விரிவாக விளக்கவேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதுகுறித்த வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. இருந்தாலும் அதைப்பற்றி விளக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகத்தினுடைய தொழிலாளர்களின் ஊதிய உயர்வு குறித்த வழக்கு நீதிமன்றத்தில்

[திரு. வி. செந்தில்பாலாஜி] *[2014 பிப்ரவரி 1*

நிலுவையில் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களே சுட்டிக்காட்டியுள்ளார்கள். ஆனால், தொழிலாளர்களின் எண்ணிக்கையை தொழிற்சங்க வாரியாக கணக்கிட்டுப் பார்க்கின்றபோது, 25–11–2010 அன்று தேர்தல் நடைபெற்றபோது அண்ணா தொழிற்சங்கப் பேரவையில் இருந்த உறுப்பினர்களுடைய எண்ணிக்கை 15,765. 31–12–2013 அன்றைய நிலவரப்படி கணக்கிட்டுப் பார்க்கின்றபோது, 90,340 தொழிற்சங்க உறுப்பினர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் தலைமையில் அண்ணா தொழிலாளர் சங்கத்தில் பணிபுரியும் வாய்ப்பைப் பெற்று, இன்று சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டு இருக்கின்றார்கள். 25–11–2010 அன்று தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில், L.P.F தொழிற்சங்கத்தில் உள்ள தொழிலாளர்களின் எண்ணிக்கை 73,450. 31–12–2013 அன்றைய நிலவரப்படி பார்க்கின்றபோது அவர்களுடைய எண்ணிக்கை 18,381 தான். கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாக வெறும் 18,000 பேர் அந்த L.P.F தொழிலாளர் சங்கத்தில் உறுப்பினர்களாக உள்ளனர்.

அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் இயக்கத்தின்போது ஏற்பட்ட பழுதுகள் தொடர்பான வினா ஒன்றை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கிறார்கள். முந்தைய ஐந்து ஆண்டுக்கால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில், ஐந்து ஆண்டுகளில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் எண்ணிக்கை 19,110 ஆக இருந்தபோது, பேருந்துகள் இயக்கத்தின்போது ஏற்பட்ட பழுதுகளின் எண்ணிக்கை 63,633. ஐந்து ஆண்டுகள் சேர்த்து பேருந்துகள் இயக்கப்படுகின்றபோது பழுதாகி வழித்தடத்தில் நின்ற எண்ணிக்கை 63,633. இரண்டரை ஆண்டுக்கால ஆட்சியில் மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்கிய சீரிய திட்டங்களால் எடுத்த பல்வேறு நடவடிக்கைகளால், தொழிலாளர்களுக்கு வழங்கிய ஊக்கத்தினால், 2½ ஆண்டுகளில் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளின் இயக்கத்தின் எண்ணிக்கை 20,634 ஆக உயர்ந்தபோதும்கூட, பேருந்து இயக்கத்தின்போது வழித்தடத்தில் நின்ற பேருந்துகளின் எண்ணிக்கை 2½ ஆண்டுகளில் தமிழ்நாடு முழுவதும் சேர்த்து 6,246 மட்டும்தான். இவற்றை முற்றிலும் நீக்கவேண்டும் என்றும், இயக்கத்தின்போது எந்தப் பேருந்திலும்



*2014 பிப்ரவரி 1]* [திரு. வி. செந்தில்பாலாஜி]

பழுது ஏற்படக்கூடாது என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் கடுமையான உத்தரவைப் பிறப்பித்திருக்கின்றார்கள். இதற்காக துறையின் சார்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், உரையை முடியுங்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான கோப்பு மாண்புமிகு முதல்வர் அவர்களின் பார்வைக்காக அனுப்பப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், அதனை அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, குரூப்–1 தேர்வு எழுதுவதற்கான வயது வரம்பை 45 என நிர்ணயம் செய்து அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேற்கு வங்காளம், உத்தரப் பிரதேசம், ஜார்கண்ட், உத்தரகாண்ட், ஆந்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்களில் வயது வரம்பை 45 ஆக உயர்த்தியிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வூதியம் வழங்குவதைப் பொறுத்தவரையில், உயர் அலுவலர்கள் மட்டத்தில் சங்கத்தினுடைய வளர்ச்சி, சங்கத்தினுடைய வாழ்வாதாரம் போன்றவற்றைக் கருத்திற்கொண்டு, தொடர்ந்து ஓய்வூதியத்தை பணியாளர்களுக்கு வழங்க வேண்டும். எனவே, எந்தவகையில் அதைச் செய்யலாம் என்பதற்கான கருத்துருவைப் பெற்று, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு அனுப்பப்படும் என்பதை ஏற்கெனவே சொல்லியிருந்தேன். மேலும், இப்பொழுதுதான் அதிகாரிகள் மட்டத்தில் தேர்தல் நடந்து முடிந்திருக்கிறது. மக்கள் பிரதிநிதிகள் இன்றைக்கு சங்கங்களை

[திரு. செல்லூர் கா. ராஜூ] [2014 பிப்ரவரி 1

நிருவகித்து வருகிறார்கள். எனவே, ஒவ்வொரு சங்கத்தினுடைய வாழ்வாதாரமும் எப்படி இருக்கிறது என்பதை அறிந்து, அதற்குப் பிறகு, பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான நடவடிக்கை உடனடியாக மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், உரையை முடியுங்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீயணைப்புத் துறையில் பணிபுரியும் பணியாளர்களுக்கும் காவல் துறையில் பணிபுரியும் காவலர்களுக்கு வழங்கப்படும் அனைத்து சலுகைகளையும் வழங்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். கோவை மாநகராட்சியில், 8 ஆம் வகுப்பு படித்து, ஓட்டுநர் உரிமம் பெற்று, 10 ஆண்டுகளுக்குமேல் ஓட்டுநர்களாகப் பணிபுரிபவர்களின் பணியை நிரந்தரம் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கோவை மாவட்டம், காங்கேயம்பாளையத்திலிருந்து NH–67 சிந்தாமணிபுதூர் பை–பாஸ் வரை (7½ கி.மீ. தூரம் வரை) செல்லும் சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்ற வேண்டும். அதற்காக உண்ணாவிரதப் போராட்டம் இப்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எனவே, 7½ கி.மீ. தூரத்திற்கு நான்கு வழிச் சாலையாக மாற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, இந்த ஆண்டும் பருவ மழை நம்மை ஏமாற்றிவிடும்போல் தெரிகிறது. பருவ மழை நம்மை ஏமாற்றினால், தண்ணீர்ப் பற்றாக்குறை ஏற்படும். மேலும், பல மாவட்டங்களில் விவசாயம் பாதிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன. குறிப்பாக, நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் பகுதியில் சுமார் 40 கிராமங்களில் சுமார் 16,000 எக்டேர் பரப்பில் சாகுபடி செய்த நெற்பயிர்கள் வறட்சியால் கருகிவிட்டன. வேதாரண்யம் பகுதியில் 160 சென்டி மீட்டர் பெய்ய வேண்டிய மழை, 9.46 சென்டி மீட்டர்தான் பெய்துள்ளது. மேலும், நெல்லை அறுவடை செய்தபின் விளைவிக்கப்படும் கடலை, எள், பயறு, உளுந்து போன்ற தானிய வகைகளையும் பயிரிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, ஒட்டுமொத்தமான வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதற்கு முன்னால், பாதுகாக்கப்பட்ட குடி தண்ணீர் மற்றும் விவசாயிகளினுடைய விளைநிலங்களுக்கான தண்ணீருக்கு உத்தரவாதத்தினை உருவாக்குவதற்கான முறையிலே அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொண்டு, என் உரையை நிறைவு செய்கின்றேன்.



2014 பிப்ரவரி 1] [திரு. எம். ஆறுமுகம்]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித வளக் குறியீடுகள், மாநில வளர்ச்சிக் குறியீடுகள் ஆகியவற்றில் ஒப்பீட்டளவில், மிகச்சிறந்த முன்னேற்றத்தை தமிழகம் கண்டிருக்கிறது என்று ஆளுநர் உரையில் விவரமாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த விவரங்கள் குறித்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியினுடைய நிலையை எங்களுடைய துணைத் தலைவர் மாண்புமிகு பாலபாரதி அவர்கள் நேற்று விரிவாகப் பேசினார்கள். அதைத் தவிர்த்து, சில விஷயங்களை இந்த மன்றத்தின் கவனத்திற்கு நான் கொண்டுவர விழைகின்றேன். ஒரு மாநிலம் வளர்ச்சிக் குறியீடுகளில் சிறப்பாகச் செயல்பட்டால், விவசாயத் துறை, தொழில் துறை, சேவைத் துறை, கல்வித் துறை, பெண்கள் மற்றும் சமூகத் துறை போன்றவற்றில் இன்னும் அதனை எப்படி ஊக்குவிக்கலாம் என்று யோசிப்பதற்குப் பதிலாக, வளர்ச்சியடைந்த மாநிலமா, சிறப்பாகச் செயல்படுகின்ற மாநிலமா, அப்படியானால் தண்டித்தே தீர வேண்டுமென்று முடிவு எடுத்துவிட்டதைப் போன்று, மத்திய நிதிக் குழுவும், மத்திய அரசும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழகம் இந்த வளர்ச்சிக் குறியீடுகளிலே சிறப்பாக இருக்கிறது என்பதற்காக, நமக்கான நிதிப் பங்கீட்டைக் குறைப்பதற்கு நடவடிக்கையை அவர்கள் எடுத்திருக்கிறார்கள். அதனை இந்த ஆளுநர் உரையிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இது எல்லாவற்றையுமே தலைகீழாகப் பார்க்கின்ற ஒரு பார்வை. வளர்ச்சி குன்றிய அல்லது போதுமான வளர்ச்சியை எட்ட இயலாத மாநிலங்களுக்கு கூடுதலான சலுகைகளைத் தர வேண்டுமென்பது ஒரு பக்கம்; வளர்ச்சியடைகிற மாநிலங்களை ஊக்குவிப்பது என்பது மிக, மிக அவசியமான அடுத்த பக்கம். ஆனால், காங்கிரஸ் ஆட்சியிலே அது நடைபெறவில்லை. குறிப்பாக,

[திரு. அ. சவுந்தரராசன்] [2014 பிப்ரவரி 1

நம்முடைய தமிழகம் பல விஷயங்களிலே பாதிக்கப்பட்டிருக்கிறது. ஒன்று நிதிப் பங்கீடு குறைக்கப்பட்டிருக்கிறது. இரண்டு, மண்ணெண்ணெய் போன்ற அவசியப் பொருட்களின் ஒதுக்கீட்டைக் குறைப்பது, பொது விநியோகத் திட்டத்திலே மிகச் சிறப்பாகச் செயல்பட்டாலும், நம்முடைய மக்கள் மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை, மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை என்று வருத்தப்படுகின்ற ஒரு சூழ்நிலையை காங்கிரஸ் அரசாங்கம் திட்டமிட்டு உருவாக்கிக் கொண்டிருக்கிறது. பலமுறை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்கு இது குறித்து கடிதம் எழுதியுள்ளார்கள். நமக்கு கூடுதலாகக்கூட தர வேண்டாம், ஏற்கெனவே எவ்வளவு நமக்கு ஒதுக்கப்பட்டதோ அதையாவது கொடுங்கள் என்று கேட்டால், அதையும் கொடுக்க மறுக்கிறது மத்தியிலே ஆளும் காங்கிரஸ் அரசு. இந்த நிலைமை இதற்கு முன்பு இருந்த பி.ஜே.பி. ஆட்சியில்கூட இருந்ததில்லை. இப்போதுகூட, சில்லறை வர்த்தகத்திலே அன்னிய முதலீடு, வங்கிகள், பொதுத் துறை நிறுவனங்களின் பங்குகளை விற்பது போன்ற கொள்கையில் இந்த இரண்டு கட்சிகளுக்கும் பெரிய வித்தியாசம் எதுவும் கிடையாது.

பிற்பகல் 1—50

வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, மோடி பிரதமராக வந்தால், வளர்ச்சி இப்படி இருக்குமென்று சொல்கிறார்கள். அவர்கள் எந்த வளர்ச்சியைக் குறிப்பிடுகிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை. மத்திய அரசோ, மாநில அரசோ அல்லது இதர ஆய்வு நிறுவனங்களோ ஒரு மாநிலத்தின் வளர்ச்சியை சில குறியீடுகள் கொண்டு நிர்ணயிக்கிறார்கள். மனித வள குறியீடு, Human resources குறியீடு என்று எடுத்துக்கொண்டால், அதிலே மகப்பேறு கால இறப்பு இருக்கிறது; பச்சிளங் குழந்தைகள் இறப்பு இருக்கிறது; ஊட்டச்சத்துக் குறைவு எவ்வளவு என்கிற கணக்கு இருக்கிறது. ஆரம்பக் கல்வி பெறுவோர் எவ்வளவு பேர் இருக்கிறார்கள் என்ற கணக்கு இருக்கிறது. பள்ளியில் இடைநிற்றல் நிலவரம் என்ன என்கிற கணக்கு பார்க்கப்படுகிறது. இப்படிப்பட்ட வளர்ச்சிக் குறியீடுகளின் கணக்கைப் பார்த்தால், எதை எடுத்தாலும் குஜராத் 13—வது இடத்திலே, 15—வது இடத்திலேதான் இருக்கிறதே தவிர, முதல் 10 இடங்களுக்குள் இதில் எந்தப் பிரச்சினையிலும் அது இருந்ததில்லை. ஆனால், தமிழகம், கேரளம், கர்நாடகம்,



2014 பிப்ரவரி 1] [திரு. அ. சவுந்தரராசன்]

மராட்டியம். சில வடகிழக்கு மாநிலங்களிலே இருக்கிற மலை மாநிலங்கள்கூட முதல் இடத்திலே, இரண்டாவது இடத்திலே, மூன்றாவது இடத்திலே இருக்கிற ஒரு புள்ளிவிவரத்தை இன்றைக்கு நாம் பார்க்கிறோம். அப்படியானால், வளர்ச்சி என்று பி.ஜே.பி.யினர் எதைச் சொல்கிறார்கள் என்று எனக்குத் தெரியவில்லை.

நம்முடைய மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் 300—க்கும் மேற்பட்ட ஜப்பான் நிறுவனங்கள் தமிழ்நாட்டிலே முதலீடு செய்துள்ளன என்றும், ஆனால் குஜராத்தில் 54 ஜப்பான் நிறுவனங்கள் மட்டுமே முதலீடு செய்துள்ளன என்றும் குறிப்பிட்டார்கள். தமிழகத்திலே நோக்கியா என்கிற நிறுவனத்தோடு மாநில அரசு MoU போட்டுக்கொண்டுள்ளது. அந்த MoU—ஐ நாம் செயல்படுத்தினால்தான் அந்தத் தொழிலாளிகளுடைய வேலையை காப்பாற்ற முடியும் என்கிற நிலைமை வருகிறபோது இரவு, பகலாக தொழில் துறை வேலை செய்தது என்பதை நான் அருகிலிருந்து பார்த்தேன். அவ்வளவு சிறப்பாக, வேகமாக அந்தக் காரியத்தை முடித்ததால், அந்தத் தொழிலாளிகளுடைய வேலை இன்றைக்கு பாதுகாக்கப்பட்டிருக்கிறது. பல தொழிற்சாலைகள் இங்கேயும் தொடங்கப்படுகின்றன. மோடியினுடைய சாதனை என்ன என்று குறிப்பாகச் சொன்னால், கார்ப்பரேட் பெருமுதலாளிகளுக்கு ஏராளமான சலுகைகளை, நியாயமற்ற முறையில் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதற்கு மேல் எதையும் சொல்ல முடியாது.

விலைவாசி கடுமையாக உயர்ந்திருக்கிறது. குறைந்தபட்ச கூலி தமிழகத்தைவிட குஜராத்தில் குறைவாக இருக்கிறது. Contract தொழிலாளிகளின் எண்ணிக்கை என்பது மிகக் குறைவாக இருக்கிறது என்பது போன்ற ஏராளமான புள்ளிவிவரங்கள் வந்தவண்ணம் இருக்கின்றன. இந்தச் சூழ்நிலையிலே, வரவிருக்கிற நாடாளுமன்றத் தேர்தலில், வளர்ச்சி என்கிற குறியீட்டை மட்டும் வைத்துப் பார்த்தால், மோடி எப்படி பிரதமராக முடியும்? வளர்ச்சி என்ற குறியீட்டை வைத்துப் பார்த்தால், 2014—ல் நடைபெறவிருக்கிற தேர்தலுக்குப் பிறகு அமைய இருக்கிற மத்திய அரசிலே தமிழகத்திற்கு மிகப் பிரதானமான பங்கு இருந்தாக வேண்டும். இதை நான் உறுதியாகக் கூற முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சி அமைப்பிலே தமிழகம் பிரதான பங்காற்ற வேண்டும்.

[திரு. அ. சவுந்தரராஜன்] [2014 பிப்ரவரி 1

அதற்கு இடதுசாரிக் கட்சிகளான மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியும் நிச்சயமாகத் துணை நிற்கும். வளர்ச்சிக்குக் குறுக்கே நிற்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை அனுமதிக்கக் கூடாது என்கிற முறையிலே நாம் அரசியல் வினையாற்ற வேண்டிய தேவையிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, மத்திய அரசு எந்தளவிற்கு வஞ்சித்துக் கொண்டிருக்கிறது என்பதை எடுத்துச்சொன்னார்கள். உதாரணத்திற்கு நோக்கியா கம்பெனியைப் பற்றி அவர் அறிந்தவரை எடுத்துச் சொன்னார்கள். அதற்குப் பிறகு என்ன நடந்தது என்று அவருக்குத் தெரியவில்லை என்று நினைக்கின்றேன். தமிழகத்தில் நோக்கியா கம்பெனியை மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்தார்கள் என்ற காரணத்திற்காக, அதை எப்படியாவது சைனாவிற்குக் கொண்டு செல்ல வேண்டுமென்பதற்காக மத்திய அரசு எந்த அளவிற்கு எல்லாம் மறைமுகமாக அவர்களுக்கு உதவி செய்தார்கள் என்பதற்கு ஒரே ஒரு உதாரணம். வருமான வரித் துறை அவர்களை ரெய்டு செய்தார்கள். ரெய்டு செய்த பிறகு 2,000 கோடி ரூபாய் fine என்று சொன்னார்கள். அதை நாங்கள் கட்டிவிடுகிறோம் என்று கம்பெனி சார்பாக சொன்னார்கள். அதற்கு Bank Guarantee தந்து விடுகிறோம் என்று சொன்ன பிறகு, அந்த கம்பெனி மீண்டும் ஓடத் தொடங்கியது. 2,000 கோடி ரூபாய் நாங்கள் கட்டி விடுகிறோம் என்று அவர்கள் சொன்ன பிறகு, மீண்டும் மத்திய அரசிடமிருந்து நீங்கள் 9,000 கோடி ரூபாய் கட்ட வேண்டுமென்று ஒரு தாக்கீதை அவர்களுக்கு அனுப்பியிருந்தார்கள். அதற்குப் பிறகு அந்த நிறுவனம் டெல்லி உயர் நீதிமன்றத்தில் இது தொடர்பாக வழக்குத் தொடர்ந்து, அதற்குத் தடையாணை வாங்கினார்கள். நேரடியாக 8,000 பேரும், மறைமுகமாக 22,000 பேரும் ஆக மொத்தம் 30,000 பேர் வேலை செய்கிற அந்த கம்பெனியை மாண்புமிகு அம்மா அவர்கள் 2005 ஆம் ஆண்டு கொண்டுவந்தார்கள். ஆனால், அதிலே மத்திய அரசு எந்தளவிற்கு வஞ்சித்தது என்பதற்கு ஒரேயொரு உதாரணம், சம்பளம் 1 ஆம் தேதி போடவேண்டும்; 30 ஆம் தேதி வங்கிகளை முடக்கி



2014 பிப்ரவரி 1] [திரு. பி. தங்கமணி]

விட்டார்கள்; நீங்கள் யாரும் பணம் தரக்கூடாது என்று நோக்கியா கம்பெனி பணம் வைத்திருக்கும் வங்கிகளுக்கெல்லாம் தாக்கீது அனுப்பிவிட்டார்கள். அதற்கும் அவர்கள் கோர்ட்டுக்குச் சென்றார்கள். எப்படியாவது அங்கு இருக்கின்ற தொழிலாளர்களைக் காப்பாற்ற வேண்டுமென்பதற்காக, அந்த மூன்று நாட்கள், இரவு பகல் பாராமல், பாடுபட்டு, அந்தக் கம்பெனியினுடைய தொழிலாளர்களைப் பாதுகாத்தது மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு. மாண்புமிகு அம்மா அவர்கள் அதைக் கொண்டு வந்தார் என்ற ஒரே காரணத்திற்காக, மத்திய அரசு எந்த அளவிற்கு இங்கே தமிழகத்திலேயிருந்து அந்தத் தொழிற்சாலையைக் கொண்டுசெல்ல வேண்டுமென்பதற்கு மறைமுகமாக ஆதரவு கொடுத்தார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியப்படுத்த விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1—55

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய தகவலுக்கு நன்றி. அடுத்து, இலங்கையிலே வாழுகிற சிறுபான்மைத் தமிழ் மக்களுடைய உரிமைகளைப் பாதுகாக்க இந்த அரசு உறுதியான நடவடிக்கை எடுக்கும் என்று ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அங்கிருக்கிற மக்கள், தமிழ் மக்கள் என்பதோடு, மொழிவழி சிறுபான்மையினராகவும் அவர்கள் இருக்கின்றார்கள். இராஜபக்சே அரசில் இந்தச் சிறுபான்மை மக்களுக்கு எதிரான பல்வேறு உரிமை மறுப்புகள், சம வாய்ப்பு மறுப்பு போன்றவற்றை எதிர்த்து, அங்கே பல போராட்டங்கள், கிளர்ச்சிகள், இயக்கங்கள் நடந்து, இன்றைக்கு முடிவுக்கு வந்திருக்கிற நிலையிலே, அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இப்போதும் உருப்படியான அரசியல் நடவடிக்கைக்கு அந்த அரசு முன்வராதபோது, நாம் அதற்கு வேண்டிய எல்லா உதவிகளையும் செய்வோம் என்று ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது இலங்கையிலே உள்ள நிலை. அதை அப்படியே நாம் இந்தியாவிற்குப் பொருத்திப் பார்த்தால், இந்தியாவிலே மொழிவழி, மதவழி என பல வகைகளிலே சிறுபான்மையினர் இருக்கிறார்கள். டஜன்கணக்கான மதங்கள் இருக்கின்றன; ஆயிரக்கணக்கான மொழிகள் இருக்கின்றன; இன பேதங்கள் இருக்கின்றன; ஆனால், இத்தனைக்கும் மத்தியிலே, நாம் ஒன்றாக இருப்பதால்தான், மதச் சார்பின்மை பேணப்படுவதால்தான் இந்தியாவைப் பார்த்து

[திரு. அ. சவுந்தரராசன்] [2014 பிப்ரவரி 1

உலகமே வியந்து நிற்கின்றது. 'வேற்றுமையிலே ஒற்றுமை' என்பது இதுதான். ஆகவே, இங்கேயிருக்கிற சிறுபான்மையின மக்கள் இரண்டாம்தர மக்களாகப் பார்க்கப்படவேண்டும்; சிறுபான்மையின மக்களுக்கு இன்றைக்கு இருக்கின்ற சலுகைகள் மறுக்கப்படவேண்டும்; எந்தக் காரணத்தை முன்னிட்டும், அவர்கள் இப்போதிருக்கிற நிலையிலே வாழக்கூடாது என்கிற முறையிலே, அவர்களுக்கெதிராக, ஒரு வெறுப்புப் பிரச்சாரம் நடந்து கொண்டிருக்கிறது. அவர்களுக்கெதிராக பல கலவரங்கள் நடந்தன; ஆயிரக்கணக்கான பேர் கொல்லப்பட்டார்கள்; இப்போதும்கூட, இடஒதுக்கீடு என்று சச்சார் கமிஷன் போன்ற கமிஷன் எல்லாம் முழுமையாக ஆய்வு செய்து, அந்தச் சிறுபான்மையின மக்களுக்கு, முஸ்லிம் மக்களுக்கு, கிறித்துவ மக்களுக்கு இடஒதுக்கீடு வேண்டுமென்று அவர்கள் சொல்லியிருக்கின்ற அந்த விஷயங்களைக்கூட, ஏற்க முடியாது என்று மறுக்கக்கூடியவர்கள், இந்தியாவில் பிரதமரானால், மோடியைப் போன்றவர்கள் பிரதமரானால், இந்தியாவினுடைய ஒற்றுமை என்னவாகும்? 'இன்னொரு இராஜபக்சே இந்தியாவில்' என்றானால், இந்தியாவினுடைய சமாதானப் போக்கு என்னவாகும்? இந்தியாவினுடைய அமைதி என்னவாகும்? என்கிற கேள்வியோடும் சேர்த்து நாடாளுமன்றத் தேர்தலை நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. அந்த வகையில் பார்த்தால், இந்தியாவில் இருக்கிற சில மாநிலங்களோடுதான் தமிழகத்தை ஒப்பிட முடியும். அந்த அளவிற்கு மதக் கலவரம் என்பதை கடுகளவும் அனுமதிக்க முடியாது; (மேசையைத் தட்டும் ஒலி) அது தோன்றலாம் என்று தோன்றினாலும், அடக்கப்படும் என்கிற ஒரு நிலை இங்கே எடுக்கப்பட்டிருக்கிறது.

தமிழகத்தில் திண்டிவனத்திலே, மரக்காணத்திலே, தருமபுரியிலே சாதிக் கலவரத்திற்கான ஏற்பாடுகள் தூவப்பட்டபோது, அதற்கான வேலைகள் நடைபெற்றபோது, மிகக் கடுமையான நடவடிக்கையை இந்த அரசு எடுத்தது. அது தொடராமல் உறுதியாகத் தடுக்கப்படும் என்றும் உறுதியளித்தது. அதை அமல்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். இப்போதும் கடுமையாக அரசின் கண்காணிப்பு இருக்கிறது. ஆனால், தொடர்ந்து இந்த சாதிக் கலவரத்தைத் தூண்டுவதற்கு, சமுதாய அமைப்பு, சமுதாய கூட்டணி என்கிற பல பெயர்களிலே ஜாதி துவேஷம் பிரச்சாரம் நடந்து வருகிறது. ஆனால், அதை ஒரு கலவரமாக ஆகாமல் தடுக்கிற காரியத்தை நம்முடைய காவல் துறையும் எடுத்துக்



2014 பிப்ரவரி 1] [திரு. அ. சவுந்தரராசன்]

கொண்டிருக்கிறது. தமிழகத்தில் பொது அமைதிக்கு பங்கம் இல்லை என்று ஆளுநர் உரையிலே சொல்லப்பட்டிருப்பதை நான் முழு மனதோடு வரவேற்கிறேன். பொது அமைதி பாதுகாக்கப்பட்டு வருகிறது என்பது சிறப்பானது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், அதே நேரத்தில் இங்கும், அங்கும் நடைபெறக்கூடிய பல்வேறுவிதமான தனித்தனிச் சம்பவங்கள், அந்தத் தனித்தனிச் சம்பவங்களுக்குக் காவல் துறை காரணம் என்று நான் சொல்லவில்லை. ஆனால், நடைபெறுகின்ற அப்படிப்பட்ட சம்பவங்கள், அது சங்கிலிப் பறிப்பாக இருக்கலாம்; கொலையாக இருக்கலாம்; கொள்ளையாக இருக்கலாம். அப்படிப்பட்ட அந்த விஷயங்கள் தொடர்ந்து நடவாமல் இருப்பதற்கு, அவை குறைக்கப்படுவதற்குக் கூடுதல் கண்காணிப்பு தேவைப்படுகிறது. தேவைப்பட்டால் அதிக புறக்காவல் நிலையங்களை நாம் உருவாக்கி, இந்தப் பிரச்சினையிலேயும் தலையிட வேண்டும்; பொது இடங்களிலே நம்முடைய கண்காணிப்பைத் தீவிரப்படுத்த வேண்டுமென்ற ஒரு கருத்தையும் நான் முன்வைக்க விரும்புகிறேன்.

அடுத்து, நம்முடைய சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் குறித்து ஆளுநர் உரையிலே விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஓய்வூதியத் திட்டங்கள், 37 இலட்சம் பயனாளிகள்; ஆளுக்கு ஆயிரம் ரூபாய் ஓய்வூதியம் தருகிறோம் என்ற விவரம் இருக்கிறது. உண்மையிலே அதுவொரு சிறப்பான விவரம். அதிலே ஏற்கெனவே இங்கே உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அதை வழங்குவதில் தாமதம் இருக்கிறது; அதைக் களைந்திட வேண்டுமென்கிற கோரிக்கை, சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் எனக்கும் வருகிறது. புதிதாக விண்ணப்பித்திருப்பவர்களுடைய பிரச்சினைகளை விரைவாகத் தீர்க்க வேண்டிய தேவை இருக்கிறது.

*பிற்பகல் 2—00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**திரு. அ. சவுந்தரராசன்:** முதியோர், கைம்பெண்கள், மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு வழங்கக்கூடிய உதவித் தொகையான 1,000 ரூபாய்க்கு இணையான தொகைதான் அங்கன்வாடி, மற்றும் சத்துணவுப் பணியாளர்களுக்கும் வழங்கப்படுகிறது. 30 ஆண்டுகள்

[திரு. அ. சவுந்தரராசன்] *[2014 பிப்ரவரி 1*

*முதல் 35 ஆண்டுகள் வரை அரசின் திட்டப்பணிகளில், சமூக சேவையில் பணியாற்றிய அவர்களுக்கு ஓய்வூதியத்தை கூடுதலாகத் தர வேண்டிய தேவை இருக்கிறது என்று நான் வலியுறுத்துகிறேன். அரசு ஊழியர்களுக்குக் குறைந்தபட்ச ஓய்வூதியமாக ரூ.3,050 என்று இருக்கிறது. அதையாவது இவர்களுக்கு வழங்க நிச்சயமாக அரசு பரிசீலித்து, நடவடிக்கை எடுக்கும் என்று நான் எதிர்பார்க்கிறேன், நம்புகிறேன்.*

*அண்ணாமலைப் பல்கலைக்கழகம் மீட்கப்பட்டு, மிகப் பெரிய கொள்ளையிலிருந்து தமிழகமும், தமிழகத்திலுள்ள பெற்றோர்களும் காப்பாற்றப்பட்டார்கள். தனியார் கல்லூரிகளில் பயிலக்கூடிய SC/ST மாணவர்களுக்கு உதவித் தொகை ஏற்கெனவே கிடையாது. அரசுக் கல்லூரிகளில் பயில வழியில்லை, ஆகவே தனியார் கல்லூரிகளுக்குப் பயிலச் செல்கிறார்கள். தனியார் கல்லூரிகளில் படிப்பதற்கு அவர்களுக்கு உதவித் தொகை கிடைக்காது என்பதால், அவர்களின் சிரமங்களைக் கருத்தில்கொண்டு அவர்களுக்கும் படிப்பு உதவித் தொகையை இந்த அரசாங்கம் நீட்டித்துக் கொடுத்திருக்கிறது. இது அநேகமாக வேறு எங்குமே இல்லாத ஒன்று. தனியார் கல்லூரிகளில் பயிலுகின்ற SC/ST பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவித் தொகை கொடுப்பதன்மூலமாக SC/ST பிரிவைச் சேர்ந்தவர்களிலிருந்து உயர் கல்வி படிப்பவர்களுடைய எண்ணிக்கை அதிகமாகியிருக்கிறது. எம்.பி.ஏ., எம்.இ., போன்ற உயர் படிப்புகளைப் பயின்று, பல உயர் பதவிகளுக்கு அவர்கள் தயாராக வருகின்றார்கள். ஆனால், அவர்களுக்கு வேலை கிடைப்பதிலே பல சிக்கல்கள் இருக்கின்றன. அரசுத் துறைகளிலும், பொதுத் துறைகளிலும் மட்டும்தான் அவர்களுக்கென்று இட ஒதுக்கீடு இருக்கிறது. தனியார் துறையிலே இடஒதுக்கீடு கிடையாது. குறிப்பாக, தனியார் துறைகளில் இருக்கக்கூடிய H.R. Department போன்ற துறைகளிலே இடஒதுக்கீடு இல்லாவிட்டால், உயர் கல்வி வரை படித்து வெளியே வரக்கூடிய SC/ST பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கு உரிய பலன் கிடைக்காது. ஆகவே, தனியார் நிறுவனங்களிலும் இடஒதுக்கீடு செய்து தருவதற்கான ஏற்பாட்டை மாண்புமிகு முதல்வர் அவர்கள் செய்ய வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அந்த நிலைமையை நாம் உருவாக்குவோமானால் வேறு மாநிலங்களில்கூட அவர்கள் பணிபுரிவதற்கான வாய்ப்பு நிச்சயமாகக் கிடைக்கும்.*



*2014 பிப்ரவரி 1]* [திரு. அ. சவுந்தரராசன்]

*அடுத்து, இடம்பெயர்ந்த குழந்தைகளுக்கு கல்வி பெறுவதற்கான ஏற்பாட்டை இந்த அரசு செய்து கொடுத்திருக்கிறது. அரசுப் பள்ளிகளிலே அவர்களுக்கு இடஒதுக்கீடு செய்துதரப்படுகிறது என்று கூறப்பட்டிருக்கிறது. இது உண்மையிலேயே மிகச் சிறந்த ஒரு நடவடிக்கை. ஏற்கெனவே சட்டமன்றத்தில் பேசுகின்றபொழுது, இடம்மாறி புலம் பெயர்ந்து வரக்கூடிய குழந்தைகளுக்கு கல்வி வசதி செய்து தர வேண்டுமென்று நாங்கள் கேட்டோம். இன்றைக்கு அதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. முன்பெல்லாம் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., அலுவலர்கள் போன்ற உயரதிகாரிகள் பணியிட மாறுதலில் வேறு இடங்களுக்கு வரும்போது அவர்களுடைய குழந்தைகளுக்கு பள்ளி, கல்லூரிகளில் இடம் கிடைத்துவிடும். நம்மைப் போன்றவர்களின் பிள்ளைகளுக்கு இடம் கிடைக்காது. ஆனால், இப்பொழுது இடம்பெயர்ந்து வருகின்ற தொழிலாளர்களின் குழந்தைகளுக்கும் அரசுப் பள்ளிகளில் இடஒதுக்கீடு என்பதை கல்விக்குக் கொடுக்கப்படுகின்ற முன்னுரிமை என்று பார்க்க வேண்டும். அதே நேரத்தில் இடம்பெயர்தல் என்பதும் கூடுதலாக நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இடம்பெயர்ந்து செல்பவர்களுக்கு அவர்கள் போகின்ற இடங்களிலே, இங்கிருக்கக்கூடிய ரேஷன் கார்டுகளை அங்கு சென்று பயன்படுத்திக்கொள்ளும் வகையில் சில வசதிகளை நாம் செய்து கொடுக்க வேண்டிய தேவை இருக்கிறது என்றும், அதைச் செய்து கொடுக்கவேண்டுமென்றும் நான் கனிவோடு அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.*

*இலவச கட்டாயக் கல்வி என்கின்ற உரிமைச் சட்டம் வந்த பிறகு மட்டுமல்ல, அதற்கு முன்பே இலவசக் கல்வி தமிழகத்திலே சிறப்பாக நடைபெற்றிருக்கிறது. இப்போது பள்ளிக்குச் செல்லக்கூடிய குழந்தைகளுக்கு, அவர்களுக்குத் தேவையான அனைத்து விதமான பொருட்களும் இலவசமாகத் தரப்படுகின்றன. ஆகவே, பள்ளிகளுக்குச் செல்லும் குழந்தைகளுடைய எண்ணிக்கை அதிகரித்திருக்கிறது. அதேபோல் இடைநிற்கும் குழந்தைகளின் எண்ணிக்கையும் குறைந்து போயிருக்கிறது. பெண் குழந்தைகள் பள்ளிக்கு வருவது அதிகரித்திருக்கிறது என்பதெல்லாம் தமிழகத்தில் மனித வளர்ச்சியின் சிறந்த குறியீடுகளாகப் பார்க்கப்பட வேண்டும். அதில் முக்கியமாக நான் குறிப்பிட விரும்புவது, இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி 25 சதவீதம் தனியார் பள்ளிகளில் ஏழைக் குழந்தைகளுக்கு இடம் ஒதுக்க வேண்டும். அதை*

[திரு. அ. சவுந்தரராசன்] [2014 பிப்ரவரி 1

ஒதுக்குவதிலே பல இடங்களில் பரவலாக சிக்கல் இருக்கிறது என்று நமக்குப் புகார்கள் வருகின்றன. அதிலே, ரூ.2 இலட்சம் வரை ஆண்டு வருமானம் உள்ளவர்கள் அந்த வசதியைப் பெறலாம் என்று வருகின்றபோது, விண்ணப்பிப்பவர்களிலே யார் குறைவான வருமானம் உள்ளவர்களோ அவர்களுக்கு முன்னுரிமை என்ற வரிசைக்கிரமத்தை நாம் உருவாக்க வேண்டும். அதிலும்கூட வசதி படைத்தவர்கள் மட்டுமே பயன்பெறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். நிச்சயமாக அரசு இவற்றைக் கருத்தில்கொண்டு நடவடிக்கை எடுக்கும் என்று நான் எதிர்பார்க்கின்றேன், நம்புகிறேன்.

மெட்ரோ இரயில் திட்டத்தை வண்ணாரப்பேட்டையிலிருந்து திருவொற்றியூர்வரை நீட்டிக்க வேண்டும் என்றும், அதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்கும் என்றும் அறிவித்திருப்பது உண்மையிலேயே சிறப்பானது. வடசென்னை பெரம்பூர் தொகுதியிலே இருப்பவன் என்கிற முறையில் அதை நான் வரவேற்கிறேன். இது மிக நீண்டகாலமாக நாங்கள் நடத்திக்கொண்டிருக்கின்ற ஒரு போராட்டம் ஆகும். திருவொற்றியூர் மிக அதிகமான மக்கள்தொகை கொண்ட ஒரு பகுதியாகும். திருவொற்றியூரில் ஒரு காலத்தில் போக்குவரத்து என்பது மிகவும் சிரமமாக இருந்தது. அங்கு பேருந்து வசதி இல்லை, அகலமான சாலை வசதிகள் இல்லை என்ற நிலை இருந்தது. சாத்தான்குடிக்கும்—இளையான்குடிக்கும் இடையே விடவேண்டிய எக்ஸ்பிரஸ் பேருந்துகளை திருவொற்றியூரிலிருந்தே இயக்கினார்கள். திருவொற்றியூரிலிருந்து எழும்பூருக்கோ அல்லது மற்ற பகுதிக்கோ வருவது சிரமமான காரியமாக இருந்தது. ஆகவே, நிச்சயமாக புறநகர் இரயில் என்பது திருவொற்றியூர், அதைவிட சற்று தள்ளி இருக்கும் எண்ணூரிலிருந்தே விடவேண்டும். அப்போதுதான் சென்னை நகரத்தின் முக்கியமான பிரச்சினை தீரும். குறிப்பாக புறக்கணிக்கப்பட்ட வட சென்னை மக்களுக்கும் அது பயன்படும். அந்தத் திட்டத்தை நான் வரவேற்கிறேன். புதிய வழித்தடத்திற்கு ஒப்புதல் பெறுவதற்கான முயற்சியை அவசியம் எடுக்க வேண்டும்.

*பிற்பகல் 2—05*

இன்று நான் நாளேடுகளில் பார்த்தேன். ஆரம்பத்தில் அறிவிக்கப்பட்ட மோனோ இரயில் விஷயத்தில் மௌனம் ஏன்



2014 பிப்ரவரி 1] [திரு. அ. சவுந்தரராசன்]

என்று ஒரு செய்தியை நம்முடைய முன்னாள் முதல்வர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். நிச்சயமாக மோனோ இரயிலை நாம் விடுவதன் மூலமாக, புறநகர் இரயில் சேவை இல்லாத இடங்களில் அது மிகப் பெரிய அளவில் பயன்படும். நிச்சயமாக அரசு அதைக் கைவிட்டிருக்க வாய்ப்பில்லை. அரசு கை விட்டிருக்காது என்றே நான் நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலர் வரலாறைப் படிப்பார்கள். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வரலாறைப் படைப்பவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்களின் சாதனை திட்டமான மோனோ இரயில் திட்டப் பணிகளைப் பொறுத்தவரையில் நிருவாக ரீதியான பணிகள் நடைபெற்று வருகின்றன. விரைவில் அதற்குண்டான பணிகள் முடிவடைந்து, நிச்சயம் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் சாதனைத் திட்டம் நிறைவேறும். சென்னை மாநகரத்திற்கு மட்டுமல்ல, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய மாநாட்டில் கோவை மாநகராட்சிப் பகுதிகளிலும் மோனோ இரயில் திட்டத்திற்குண்டான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மோனோ இரயில் வராது என்று நான் கருதவில்லை. இன்றைக்கு அப்படி ஒரு செய்தி வந்ததாக நான் சொல்லியதற்கு நீங்கள் பதில் சொல்லியிருக்கிறீர்கள். மிக்க நன்றி.

அடுத்து, பருவ மழை பொய்த்திருக்கிற காரணத்தினால், குடிநீர் பிரச்சினை ஒரு சவாலாக இருக்கும் என்று அறிக்கை கூறுகிறது. அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிற விவரங்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று கருதுகிறேன்.

[2014 பிப்ரவரி 1

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி.வி. ரமணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் அவர்களும், தற்போது பேசிய மாண்புமிகு உறுப்பினர் சவுந்தரராசன் அவர்களும் வறட்சியைப் பற்றியும், பருவ மழையைப் பற்றியும் ஒரு சில கருத்துகளைக் கூறினார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் சார்பாக சில விளக்கங்களை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். 2012 ஆம் ஆண்டு பெய்த மழையின் அளவு 77 சதவிகிதம். சராசரி மழையின் அளவைவிட 23 சதவிகிதம் குறைவாகப் பெய்துள்ளது. 2013 ஆம் ஆண்டு பெய்திருக்கின்ற மழையின் சராசரி அளவு 80 சதவிகிதம். அதாவது மூன்று சதவிகிதம் இந்த ஆண்டு அதிகம். 2012 ஆம் ஆண்டு தமிழகத்தில் காவேரியில் தண்ணீர் திறந்து விடமுடியாமல், வட கிழக்கு, தென் மேற்குப் பருவ மழை பொய்த்ததன் காரணமாக மாண்புமிகு அம்மா அவர்கள் 31 மாவட்டங்களை வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் என அறிவித்தார். நான் சொல்ல வருவது, தமிழ்நாட்டில் பெய்த மழையின் மொத்த சராசரி ஆகும். தமிழ்நாட்டில் பெய்த மழையின் ஆண்டு சராசரி 2012 ஆம் ஆண்டு 23 சதவிகிதம், 2013 ஆம் ஆண்டு பெய்த மழையின் சராசரி 20 சதவிகிதம். 3 சதவிகிதம் ஆண்டு சராசரி குறைவு. இந்தச் சூழ்நிலையில் 2012 ஆம் ஆண்டு மழை குறைவாகப் பெய்ததால், தமிழ்நாட்டு மக்கள் மழை குறைவை உணராத வகையில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளதால் இந்த ஆண்டும் நிச்சயமாக எடுத்து அத்துணைப் பிரச்சினைகளையும் தீர்க்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

பிற்பகல் 2—10

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு அமைச்சருடைய பதிலுக்கு நன்றி. ஆகவே, இந்த குடிநீர்ப் பிரச்சினையைச் சமாளிக்க



2014 பிப்ரவரி 1] [திரு. அ. சவுந்தரராசன்]

ஆழ்துளைக் கிணறுகள் அமைப்பது நகரப் பகுதிகளிலே குறிப்பாக சென்னை போன்ற இடங்களிலே கூடுதலாக நீர்த்தொட்டிகள் கட்டுவது போன்ற முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளை அரசு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அந்த அறிக்கையிலேயே செய்வதற்கான அறிகுறிகளும் இருக்கின்றன என்பதையும் நான் சொல்லிக்கொள்கிறேன்.

அடுத்து, குடிசைப் பகுதிக்கே சூரிய மின் சக்தி அளிக்கப்படுகிறபோது நம்முடைய குடிசை மாற்று வாரியக் குடியிருப்புகளிலே, அடுக்கு மாடிக் குடியிருப்புகளில் எல்லாம் நாம் இந்த சூரிய மின்சார வசதியைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்தால், அது சிறப்பான பலனளிக்கும் என்று நான் கருதுகிறேன். அந்த மக்களுக்கும் மின் சக்தி கிடைப்பதற்கு உத்தரவாதமான மின் சப்ளை இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அடுத்து, பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது, கோயில் மனைகளிலே இருப்போரால் பசுமை வீடுகள் கட்டுவது என்ற ஏற்பாட்டுக்குள் வர முடியவில்லை. இப்படி இலட்சக்கணக்கான பேர் இருக்கிறார்கள். உங்களுக்கு பட்டா இல்லை, ஆகவே உங்களுக்கு பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தினால் பலன் கிடைக்காது என்று கூறும் நிலைமை இருக்கிறது. ஆகவே, கோயில் மனைகளில் இருப்பவர்களுக்கும் பசுமை வீடுகள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது உறுப்பினர் அவர்கள் வைக்கின்ற கோரிக்கை ஏழை மக்களுக்காக வைத்திருக்கிறார். மகிழ்ச்சி. இருந்தாலுங்கூட, ஒரு துறையிலிருந்து இன்னொரு துறைக்கு கோயில் சம்பந்தப்பட்ட நிலத்தைக் கேட்டாலுங்கூட, அந்தக் கோயில் நிலத்திற்கான விலையை நிர்ணயம் செய்து அந்தத் தொகையைக் கட்டுகிறபோதுதான் அந்தத் துறைக்கு அந்த நிலத்தையே கொடுக்கிறார்கள். அப்படி இருக்கின்றபட்சத்தில், தனியார் ஒருவருக்கு அந்த நிலத்தைக் கொடுக்க முடியாத காரணத்தினால்தான், அவர்களுக்கு பசுமை வீடுகள் கொடுக்க

[திரு. கே.பி. முனுசாமி] [2014 பிப்ரவரி 1

முடியாத நிலை இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சிக்கும் இதையேதான் நான் கேட்கப் போகிறேன். அடுத்ததாக, திறன் மேம்பாடு என்பதைப் பற்றி நான் குறிப்பிட விரும்புகிறேன். உண்மையிலேயே அது வரவேற்கத்தக்க ஒன்று. ஏனென்றால் வேலைக்குத் தகுதியானவர்களாக இளைஞர்களை இன்று மாற்ற வேண்டியதாக இருக்கிறது. இங்கேயும், தனியார் துறையிலும் இடஒதுக்கீடு என்கிற பிரச்சினை இருக்கிறது. வேலைக்கு எடுக்கிறபோது ஒப்பந்த அடிப்படையிலே பல ஆண்டுகள் தொடர்ந்து வைத்துக் கொள்வதையும், பயிற்சியாளர் என்ற பெயரிலே தொடர்ந்து பல ஆண்டுகள் வைத்திருப்பதையும் ஒரு முறையாகப் பின்பற்றுகிறார்கள். இந்த under employment, under payment ஏற்பாட்டை திட்டமிட்டு அவர்கள் செய்கிறார்கள். ஆகவே, ஒரு வருடத்திற்கு மேல் பயிற்சியாளராக ஒருவரை வைக்கக்கூடாது என்று ஏற்கெனவே இந்தச் சட்டமன்றம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. அதுபோன்று, பொருத்தமான ஒரு சட்டத்தைக் கொண்டுவர வேண்டும். பணிக்குச் செல்கிற நம்முடைய இளைஞர்களை கான்ட்ராக்ட் என்ற பெயரிலோ, குறைந்த கூலியிலோ ஆண்டுக்கணக்கில் வைத்து, கொள்ளையடிக்கப்படுவதை நாம் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது என் கனிவான வேண்டுகோள். அதேபோல, குறைவான கூலி என்பது ஒரு பெரிய பிரச்சினையாக இருக்கிறது. குறைந்தபட்சக் கூலிச் சட்டம் தமிழகத்திலே இருக்கிறது. ஆனால், குறைந்தபட்சக் கூலியை பத்தாயிரம் ரூபாய் என்று நாம் நிர்ணயம் செய்வது மிக, மிக அவசியம் என்று நான் கருதுகிறேன். அந்த அளவிற்கு விலைவாசி ஏறியிருக்கிறது. மற்றவையெல்லாமும் ஏறியிருக்கின்றன.

அதுபோல, தொழிற்சங்கத்திற்கு அங்கீகாரச் சட்டம் மற்றும் கூட்டு பேர உரிமையை அரசாங்கம் ஒரு தனி சட்டமாக இயற்றி, நிறைவேற்றித் தர வேண்டும். அது இன்றைக்கு பல கம்பெனிகளிலே தகராறுகளை ஏற்படுத்துகிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



2014 பிப்ரவரி 1] [திரு. அ. சவுந்தரராசன்]

அடுத்து, நம்முடைய டி.என்.பி.எஸ்.சி.–யில் குரூப்-1 தேர்வு எழுதுபவர்களுக்கு வயது வரம்பு 30, 35 ஆண்டுகள் என முறையே பொதுப் பிரிவு, சிறப்புப் பிரிவிற்கு என்று இருக்கிறது. அதை நாம் 40, 45 என்று உயர்த்துவதிலே எந்தத் தடையும் இருக்க வழியில்லை. ஏனென்றால் இது பல மாநிலங்களிலும் இருக்கிறது. அந்த அடிப்படையிலே அவர்களுக்கு வயது வரம்பை நாம் அதிகப்படுத்துவோம். யாருக்குத் தகுதி இருக்கிறதோ, யார் சிறப்பாக எழுதுகிறார்களோ அவர்கள் தேறட்டும். அவர்கள் பணியாற்றட்டும் என்கிற முறையிலே நாம் செய்யலாம் என்பது என்னுடைய கனிவான வேண்டுகோள்.

அடுத்து, நம்முடைய மின்சார வாரியத்திற்கு ஏற்பட்ட 6,353 கோடி ரூபாய் கடன் தொகையை அரசே ஏற்றதன் மூலமாக அந்தத் தாய்த் தொழிலை, எல்லாத் தொழில்களுக்கும் அடிப்படைத் தேவையாக விளங்கக்கூடிய, சமூக முன்னேற்றத்திற்கு ஒரு life line–ஓர் உயிர்க்கோடாக இருக்கக்கூடிய மின்சார வாரியத்தை அரசாங்கம் பாதுகாத்திருக்கிறது. TANGEDCO அரசிடமே இருந்து செயல்படும் என்பதை உறுதிப்படுத்தியிருக்கிறது.

அதைப்போலவே, போக்குவரத்தைப் பொறுத்தவரையில், இன்றைக்கு பல கோடி மக்கள் அன்றாடம் பயணம் செய்யக்கூடியவர்களாக இருக்கிறார்கள். தமிழகத்தினுடைய வளர்ச்சியிலே மின்சாரம் எப்படி முக்கிய பங்காற்றுகிறதோ, அதைப்போல போக்குவரத்தும் முக்கிய பங்காற்றுகிறது. அநேகமாக இந்தியாவிலே இரவு முழுவதும், 12 மணிக்குக்கூட பயணம் செய்யும் அளவிற்கு பேருந்து வசதி உள்ளது. இறப்பு என்று தகவல் இரவில் வந்தது, உடனே ஊருக்கு போக முடியாது என்று கருத வேண்டிய அவசியம் எந்த நேரத்திலும் இல்லை. ஒரு நடுத்தர நகரத்திலிருந்துகூட பேருந்து வசதி உள்ளது. அந்த அளவுக்கு போக்குவரத்து என்பது தமிழகத்தை இணைத்துக் கொண்டிருக்கிறது. அதில் பணியாற்றக்கூடிய ஒன்றேகால் இலட்சம் தொழிலாளிகள் பொங்கல் நேரத்திலோ, தீபாவளி நேரத்திலோ அரசு எடுக்கக்கூடிய முடிவை, நிருவாகம் சொல்லக்கூடிய முடிவை, கருத்தாக அமல்படுத்தக்கூடிய ஊழியர்கள். மத்திய அரசு தொடர்ந்து டீசல் விலையை ஏற்றுகிறது. இது Bulk Purchase என்ற முறையில் போக்குவரத்து கழகங்களுக்கு மேலும் விலை கூட்டப்பட்டுள்ளது. கடந்த கட்டண உயர்விற்குப் பிறகு டீசலுக்கு மட்டும் போக்குவரத்து கழகங்களுக்கு 820 கோடி ரூபாய் கூடுதலாக செலவாகிறது. மத்திய அரசாங்கம் செய்த புண்ணியம்.

இதுவரையில் பஸ் கட்டண உயர்விற்குப் பிறகு மட்டும் 13, 14 முறை டீசல் விலையை ஏற்றியிருக்கிறார்கள். போக்குவரத்துக் கழகங்கள் பணப் பற்றாக்குறையினால் இன்றைக்கு தடுமாறிக் கொண்டிருக்கின்றன. மின்சார வாரியத்திற்கு கொடுத்ததைப் போலவே, 2,000 கோடி ரூபாயாவது போக்குவரத்துக் கழகங்களுக்கு நாம் ஒதுக்குவதன்மூலமாக தமிழகத்தினுடைய மிக இன்றியமையாத அந்தத் துறைக்கு உதவி செய்தாக வேண்டியுள்ளது. பணியாளர்களுக்கு gratuity கொடுப்பதிலே ஓய்வூதியம் கொடுப்பதிலே தாமதமாகிறது. பஞ்சப்படி கொடுப்பதிலே தாமதமாகிறது; இதற்கு ஒரு மாற்றம் தேவை. ஏற்கெனவே அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தை குறித்த வழக்கு நிலுவையிலே இருக்கிறது என்று. ஆகவே அது என் கையில் இல்லையென்று சொன்னார்கள். வழக்கு இருக்கிற காரணத்தினால், விலைவாசி உயர்ந்திருக்கிற காலத்தில் இடைக்கால நிவாரணத்தை அறிவிப்பதற்கு அரசாங்கம் முன்வரவேண்டும், கோர்ட்டில் வழக்கு முடிகிறபோது நாம் ஒப்பந்தத்தைப் போட்டுக்கொள்ளலாம். அதுவரையில் ஓர் இடைக்கால நிவாரணம் அளிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2—15

அடுத்து உணவுப் பாதுகாப்புச் சட்டம், நமக்கு நிச்சயமாக பயன்படாது. தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, அது எதிர்மறையாகத்தான் இருக்குமென்று சொல்லுகிறார்கள். நிச்சயமாக அதிலே எந்தவிதமான சமரசத்திற்கும் இடம் அளிக்காமல் அரசு எதிர்த்துப் போராட வேண்டும். இந்தப் பிரச்சினையில் அரசோடு நாங்கள் உறுதியாக இருப்போம். இந்த வறட்சிக் காலத்தில் விவசாயிகள் பல வகைகளில் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயப் பொருட்கள் கட்டுப்படியாகும் விலை கிடைக்கவில்லை என்பது ஒரு பிரச்சினையாக இருக்கிறது.

நெல்லுக்கும், கரும்புக்கும் அரசாங்கம் விலையை உயர்த்தி அறிவித்திருக்கிறது. உயர்த்தி அறிவித்திருப்பதைப் பதிவு செய்கிற அதே வேளையிலே விவசாயிகள் 4,000 ரூபாய் கேட்டிருக்கிறார்கள். நான் இங்கே வலியுறுத்துவது, ஏற்கெனவே கொடுத்திருப்பதைவிட இப்போது அதிகமாகக் கொடுக்க வேண்டிய தேவை இருக்கிறது என்பதாகும்.. விவசாயிகளிடமிருந்து வருகின்ற அந்தக்



கோரிக்கையை அரசு கனிவோடு பரிசீலிக்க வேண்டும். நெல்லுக்கான ஆதார விலையையும், கரும்புக்கான நியாய விலையையும் உயர்த்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சி ஏற்பட்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில், வறட்சிக்கு நிவாரணம் அளிக்கும் அறிவிப்பை அரசாங்கம் உடனே வழங்கி, அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதன்மூலமாக விவசாயிகளுக்கு, கிராமப்புறத்து மக்களுக்கு உதவ முடியுமென்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லுக்கான ஆதார விலையை நிர்ணயிப்பது மத்திய அரசுதான் என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிந்த ஒன்று. மத்திய அரசு நிர்ணயித்த ஆதாரத் தொகையைவிட கூடுதலாக, சாதாரண நெல்லுக்கு 50 ரூபாயும், சன்ன ரக நெல்லுக்கு 70 ரூபாயும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஊக்கத்தொகையாக கொடுக்கிறார்கள் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியது உண்மை. ரூ.1,310 மத்திய அரசாங்கம் தருகிறது. நாம் ரூ.1,360 தருகிறோம். மத்திய அரசு அறிவித்த ரூ.1,360/—க்குப் பதிலாக ரூ.1,415 சன்ன ரக நெல்லுக்குத் தருகிறோம். ஆனால், அதைவிட சற்றுக் கூடுதலாக தேவைப்படுகிறதென்பதுதான் எங்களது கோரிக்கை. அதைக் கனிவோடு பரிசீலிக்க வேண்டுகிறோம். அதேபோல கரும்புக்கு ரூ.2,100/— மத்திய அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது. போக்குவரத்து செலவுக்கான ரூ.100/—யையும் சேர்த்து ரூ. 2,250/— என அறிவித்திருக்கிறோம். அதைவிட சற்றுக் கூடுதலாகக் கொடுக்கவேண்டுமென்பதுதான் என்னுடைய கோரிக்கை.

மக்கள் நலப் பணியாளர்களுக்கு மீண்டும் பணி கொடுப்பதன்மூலமாக அவர்களுக்கு ஏற்பட்டுக்கொண்டிருக்கிற ஒரு கசப்பை நாம் போக்குவதற்கு முன்வரவேண்டுமென்பது என்னுடைய பணிவான வேண்டுகோள். பட்டா அளிப்பதற்கென்று பிறப்பிக்கப்பட்ட அரசாணையை 6 மாதத்திற்கொருமுறை

[திரு. அ. சவுந்தரராசன்] *[2014 பிப்ரவரி 1*

புதுப்பித்துக்கொண்டே இருக்கிறோம். என்னைக் கேட்டால் அந்த அரசாணையை நிரந்தரமாக இருக்கிறமாதிரி மாற்றிவிடலாம். நாம் அவ்வப்போது புதுப்பிக்கிற தேவை இல்லாமல் இருக்கும். பட்டா வழங்குவது என்பது வெகு காலமாக நீடித்த பிரச்சினையாக இருக்கிறது என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். வறட்சிக் காலத்திலே கோயில் நிலத்திலே விவசாயம் செய்வோர் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள். மற்ற விவசாயிகளைப்போல அவர்களுக்கும் பாதிப்பு இருக்கிறது. அவர்கள் குத்தகையைக் கட்டமுடியாமல் சிரமப்படுகிறார்கள். அந்தக் குத்தகைத் தொகையைக் கட்டித்தான் தீரவேண்டும், இது உங்கள் நிலமல்ல, வறட்சி நிவாரணம் பொருந்தாது என்று அவர்களுக்குச் சொல்வது அவ்வளவு பொருத்தமானதாக எனக்குத் தெரியவில்லை. விவசாயிகள் என்கிற முறையிலே அவர்களும் பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கும் அந்த வறட்சி நிவாரணத்தை நாம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இறுதியாக, பழனி காமராஜபுரம் குடிசைப் பகுதியிலே இருக்கிற மக்களை அப்புறப்படுத்துவதற்கான நடவடிக்கையை மாவட்ட நிருவாகம் எடுத்துக்கொண்டிருக்கிறது. அதை அரசு தடுக்க வேண்டும். கைவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் இப்போது ஏற்பட்டிருக்கிற ஒரு சூழ்நிலை அரசுக்குத் தெரியும். அந்தப் பிரச்சினையிலே, பேச்சுவார்த்தை நடத்தி, சுமுகமான முடிவிற்குக் கொண்டுவர வேண்டும். பேராசிரியர்கள், மாணவர்கள் எல்லாம் இப்போது இடைநீக்கத்திலே இருக்கிறார்கள். அது ஒரு சிறப்பான பல்கலைக்கழகம். அங்கே இப்படிப்பட்ட ஒரு மோதல் வராமல் இருப்பதற்கு அரசு உறுதியான, பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டீசல் விலை உயர்வினால் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்பட்ட இழப்பிற்கு நிதி உதவி வழங்கவேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டினார்கள். மத்திய அரசு தொடர்ந்து டீசல் விலையை



*2014 பிப்ரவரி 1]* [திரு. வி. செந்தில்பாலாஜி]

உயர்த்தி வருகின்ற நிலையிலும், இரட்டைவிலைக் கொள்கையை கடைப்பிடித்துவரும் நிலையிலும்கூட அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு கூடுதல் டீசல் விலை உயர்வால் ஏற்பட்ட இழப்பினை ஈடுசெய்வதற்கு 700 கோடி ரூபாய் அரசு நிதியை அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு மானியமாக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 2—20*

இன்று காலையிலே, பத்திரிகையிலே வந்த செய்தி, முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி சுட்டிக்காட்டிய "மோனோ இரயில் திட்டம் மௌனமானது ஏன்" என்ற கேள்வியை உறுப்பினர் அவர்கள் பேசுகிறபோது சொன்னார்கள். "மோனோ திட்டம் மௌனமானது ஏன்" என்ற தலைப்போடு அந்தச் செய்தி வந்திருக்கிறது. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவின்படி மோனோ இரயில் திட்டப் பணிகளுக்குண்டான பகுதி நிர்ணய ஒப்பந்தப்புள்ளி படிவம் தயாரிக்கின்ற பணி இறுதிக்கட்டத்தை எட்டி உள்ளது. அந்தப் பணி விரைவில் முடிக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய உத்தரவோடு மோனோ இரயில் திட்டப் பணிகள் சென்னை மாநகரில் மட்டுமல்லாமல், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் மாநாட்டில் அறிவித்ததற்கிணங்க கோவையிலும் அதற்கான வரைவுத் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, கோவை மாநகர மக்களுக்கும் அந்தத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்குவதற்கான உத்தரவை வழங்கி இருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 3—2—2014, திங்கட்கிழமை காலை 10—00 மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 2—21 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

[2014 பிப்ரவரி 1

# 3. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

8. 2012–2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நாற்பத்து இரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

9. 2012–2013 ஆம் ஆண்டிற்கான அரசு ரப்பர் கழகத்தின் இருபத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

10. 2012–2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்தின் முப்பத்து எட்டாவது ஆண்டறிக்கை மற்றும் கணக்குகள். [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

11. 2012–2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு வனத் தோட்டக் கழகத்தின் முப்பத்து ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

12. 2012–2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் ஆண்டு நிதிக் கணக்குகள் மற்றும் தணிக்கை அறிக்கை. [1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 35(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

13. 2012–2013 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் இருபத்து நான்காவது ஆண்டறிக்கை. [1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 42/1989) 51(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)



2014 பிப்ரவரி 1]

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

—ஏதுமில்லை—

*******